
44163

# ஸர்தர் படேல்

கே. எஸ். ஜம்புநாதன்

1949


17

# ஸர்தார் படேல்

கே. எஸ். ஜம்புநாதன்
எழுதியது

தினமணி ஆசிரியர்
ஸ்ரீ ஏ. என். சிவராமன் அவர்கள்
முன்னுரையுடன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
- MAR 1949
MADRAS

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை - 4

உரிமை பதிவு

1949
உயர்ந்த பதிப்பு ரூ. 1 - 8
மலிவுப் பதிப்பு ரூ. 1 - 0

44163

இவ்வாசிரியரது
வேறு நூல்கள்

1 அருணா ஆஸப் அலி
2 ஆசார்ய கிருபளானி
3 காந்தி காட்டும் பாதை
4 காங்கிரஸ் சரித்திரம்
(2-ஆம் பாகம்)
5 ஜனாதிபதி ரூஸ்வெல்ட்

M. I. P. PROJECT
Microfilmed.

112735

அல்லயன்ஸ் பிரஸ்
மயிலாப்பூர், சென்னை
ஸர்தார் படேல் சென்னை விஜய
வெளியீடு

44163

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1949
MADRAS

# ஸர்தார் படேல்

### சுதந்திர இந்தியாவை சிருஷ்டித்த பெரியார்கள்

லோகமான்ய திலகர்
லாலா லஜபதி ராய்
பண்டித மாளவ்யா
பண்டித மோதிலால் நேரு
மகாத்மா காந்தி
வீரகேசரி விட்டல்பாய் படேல்
நேதாஜி போஸ்
தாதாபாய் நௌரோஜி
தீனபந்து ஆண்ட்ருஸ்
பெசண்ட் அம்மை
வி. ஓ. சிதம்பரம் பிள்ளை
சுப்ரமண்ய சிவா

வ. வே. சு. ஐயர்
சித்தரஞ்சன் தாஸ்
புதுமைக்கவி பாரதியார்
ராய்பகதூர் பி. அனந்தாசார்லு
கோபாலகிருஷ்ண கோகலே
அருணா ஆசப் அலி
மௌலானா அபுல்கலாம் ஆசாத்
பாபு ராஜேந்திர பிரசாத்
ஆசார்ய கிருபளானி
கவியரசி ஸரோஜனி தேவி
தலைவர் ஜவாஹர்
ராஜாஜி

21-2-1949

## முன்னுரை

மகாத்மா காந்தியை நாம் "இந்தியாவின் பிதா" என்று வணங்குகிறோம். அது போலவே ஸர்தார் படேல் "இந்திய ராஜ்ய ஐக்கியத்தின் பிதா" என்று நாம் போற்றுவது மிகவும் பொருத்தமாகும். சுதந்திரம் அடைந்த தேதியில் இந்தியா என்பது 8 ஜனநாயக மாகாணங்கள் கொண்டதாகவும், இந்திய ஜனநாயகத்தின் பூர்ண ஆதிக்கத்துக்குப் புறம்பான சுமார் 560 ஏதேச்சாதிகார சமஸ்தானங்கள் கொண்டதாகவும் இருந்தது. இந்த நிலைமையை நீடிக்க விட்டிருந்தால் இந்தியா ஒரு தேசம் என்ற பெயருக்கே லாயக்கற்றதாகி சிதைந்து போயிருக்கும். இந்த சிதைவை தடுத்து சமஸ்தானங்களில் ஜனநாயகம் ஏற்படுத்தி அதை அகில இந்திய ஜனநாயகத்தின் உறுப்பாக ஆக்கிய பெருமை ஸர்தார் படேலைச் சார்ந்ததே.

இவ்வளவு பெரியகாரியத்தைச் சாதிப்பதற்குள்ள கம்பீரமான சிந்தனையும், உறுதியான மன வலிமையும், உயரிய ராஜதந்திரமும் அவரிடம் எவ்வாறு வளர்ந்தது? அவரது சிந்தனையும் மன உறுதியும் வலிமை பெற்றதற்கு முக்கியமான காரணம், சென்ற 45 வருஷ காலமாக இடைவிடாமல் காந்திஜியைப் பின்பற்றி, ஏழைகள் சேவையில் ஈடுபட்டிருப்பதுதான். பொது ஜன

சேவையில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும் உள்ளமும் விவேகமும் முதிர்ச்சியடைகிறது. அந்த முதிர்ச்சியால்தான் அவர் இவ்வளவு பெரிய காரியத்தைச் சாதிக்க முடிந்தது. காந்திஜியின் ஒளியைப் பூர்ணமாக பெற்ற ஒரு சிலரில், அவர் முக்கியமானவர்.

அவரது வாழ்க்கை தேசத்துக்கு ஒரு பெரும் செல்வம். அவரது வாழ்க்கைச் சரித்திரம் தேசப் பற்றையும், சேவையில் ஆர்வத்தையும் பெருக்கி மக்களின் மனதைப் பண்படுத்த பெரிதும் பயன்படும்.

வாழ்க்கைச் சரித்திர புத்தகங்கள் எந்த இலக்கியத்திலும் ஒரு முக்கியமான அம்சமாகும். அல்லயன்ஸ் கம்பெனியார் மற்ற பிரசுரகர்த்தர்களை விட அதிகமாக, வாழ்க்கைச் சரித்திர புத்தகங்களை பிரசுரித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ ஜம்புநாதன் எழுதியுள்ள ஸர்தார் படேல் சரித்திரம் ஒரு விதத்தில் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் சரித்திரமாகும். இந்த வெளியீட்டைத் தமிழகம் நன்றியுடன் வரவேற்கும் என்று நம்புகிறேன்.

19-2-49 ஏ. என். சிவராமன்.

# ஸர்தார் படேல்

அகில இந்தியக் காங்கிரஸ் 1942-ஆம் ஆண்டில் பம்பாயில் கூடி, "இந்தியாவைவிட்டு வெளியேறு" என்று கோஷித்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு நோட்டீஸ் கொடுத்தது. அதற்குச் சவால்விடுத்து அடக்குமுறையைக் கையாண்டு நாட்டின் தேசிய பலத்தை ஒடுக்க முற்பட்டது பிரிட்டிஷ் சர்க்கார். ஆனால் அதன் பலனோ படுதோல்விதான். தலைவர்கள் சிறையில் தவித்தாலும், 'நாங்கள் தலை வணங்கமாட்டோம், எத்துணைக் கஷ்டத்தையும் சகித்து நிற்போம்' என்று மக்கள் பதிலிறுத்தனர். மூன்று ஆண்டுகளுக்கு மேல் அடக்குமுறையைக் கையாண்ட பிரிட்டிஷ் சர்க்கார் கடைசியில் பணிந்தது. நாட்டின் நிலைமையைக் கூர்ந்து கவனித்த வைசிராய் வேவல் ஒரு சமரசம் ஏற்படுத்த ஆவலுற்று லண்டனுக்கு ஓடி, அங்குள்ள மூலதேவதைகளுடன் கூடிப் பேசிவிட்டு, பிறகு ஸிம்லாவில் ஒரு மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்தார். நாட்டின் பிரபலக் கட்சிகளான காங்கிரஸையும் முஸ்லிம் லீகையும் அழைத்ததுடன் காங்கிரஸ் தலைவர்களின் பரிபூரண ஒத்துழைப்பை

எதிர்பார்த்துக் காரியக்கமிட்டி அங்கத்தினர்களையும் சிறையிலிருந்து விடுதலை செய்தார். ஆயிரக்கணக்கான காங்கிரஸ் ஊழியர்கள் சிறையில் வாடிக் கொண்டிருக்கும்போது, காரியக்கமிட்டி அங்கத்தினர்களை மட்டும் வெளியே விட்டுவிட்டுச் சமரசம் பேச முயன்றால் முடியுமா? இருந்தாலும் காந்திஜியும் ஆஸாதும் சகிப்புத் தன்மையுடன் வேவல் பிரபுவின் அழைப்புக்கிணங்கி, ஸிம்லா சென்றனர். "மன்னிக்க வேண்டும், மறக்கவேண்டும், கடந்த சம்பவங்களை எண்ணாது சமரசம் காண ஒரு பது வழி காண வேண்டும்" என்று உருக்கமாகப் பேசித் தலைவர்களின் அநுதாபத்தைப் பெற முயன்றார் வேவல் பிரபு. இது 1945-ஆம் வருஷம் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் நடத்திய நாடகம்.

ஆனால் மகாநாடு எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. ஸர்தார் படேல் விடுதலை அடைந்ததும் பிரிட்டிஷ் ஏமாற்று வித்தைகளுக்குச் சூடுகொடுத்து, மக்களைத் தட்டி எழுப்ப, 'ஆசியாவைவிட்டே வெளியேறு' என்று ஏகாதிபத்தியத்திற்கு ஆணையிட்டார். "1942-ல் இந்தியாவைவிட்டு வெளியேறச் சொன்னோம். ஆனால் சென்ற நான்கு வருடங்களில் ஆட்சிமுறை உளுத்துப் போய், நாட்டில் லஞ்சமும் ஊழலும் மலிந்து, மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடுகின்றனர். இனி இங்கு இவர்கள் ஒரு நிமிஷங்கூடத் தங்கக்கூடாது. ஆசியாவைவிட்டே வெளியேற வேண்டும்" என்று கர்ஜித்தார். அதைக் கேட்டு லண்டன் பிரமுகர்கள் கலங்கினார்கள். கிழக்கே ஜப்பானியப் பிடியிலிருந்து விலகி மீண்டும் டச்சு ஏகாதிபத்தியத்தின் ஆட்சியில் தள்ளப்பட்ட இந்தோனேஷிய மக்கள் ஸர்தாரின்



வாக்கைத் தாரக மந்திரமாக ஏற்றுக்கொண்டனர். சுதந்திர ஆர்வத்துடன் வீறுகொண்டெழுந்த அந்த மக்களுக்குப் பாரத தேசத்தில் எழுந்த ஸர்தாரின் சங்கொலி வீராவேசத்தை உண்டுபண்ணிற்று.

எழுபது வயதுக்கு அதிகமாகியும் படேல் வாலிபத் திமிருடன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று பாரத மக்கள் தேசியப் படையின் ஸர்தாராகவே விளங்கினார். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஸர்தாரின் எழுபதாம் ஆண்டு ஜயந்தியை குஜராத் மக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்க, பம்பாய் வாசிகள் அந்நாளை ஒரு திருநாளாகவே கொண்டாடினர். ஏழு லட்சம் ரூபாய் செலவிட்டு, 'ஸர்தார் ஹால்' என்ற ஒரு பெரிய நினைவு மண்டபம் கட்டவும் ஏற்பாடு செய்தார்கள். காந்திஜியின் அரசியல் திட்டங்களை ஒழுங்காக நிறைவேற்றும் பொறுப்பும் ஆற்றலும் ஸர்தாரிடம் உண்டு. அந்தப் பொறுப்பு அவர் இன்று நேற்று எடுத்துக் கொண்டதல்ல; முப்பது வருடங்களுக்கு முன்பு அவர் காங்கிரஸில் சேர்ந்ததிலிருந்தே, காந்திஜியின் தளகர்த்தராக ஊழியம் செய்துவருகிறார். 1928-ஆம் ஆண்டில் பர்டோலியில் காந்திஜியின் போர்முறைகளை அப்படியே அனுஷ்டித்து, எண்பதினாயிரம் விவசாயிகளை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நடத்திச்சென்று வெற்றி பெற்றதும், மகாத்மா காந்தி அவரைப் பாராட்டி "பர்டோலியின் ஸர்தார்" என்று பட்டஞ் சூட்டிக் கௌரவித்தார்.

ஒரு பிடி உப்பை எடுத்து உலகைப் பிரமிக்க வைத்து ஒரு போராட்டத்தை 1930-ஆம் ஆண்டில் காந்திஜி ஆரம்பித்ததும், அவரது ஆணையை ஏற்று

ஸர்தார் குஜராத் மக்களைத் தியாக வேள்வியில் குதிக்கச்செய்தார். தாண்டி யாத்திரையும், உப்புச் சத்தியாக்கிரகமும் இந்தியச் சரித்திரத்தில் மறக்க முடியாத சம்பவங்கள். குஜராத்தில் காந்திஜி உப்புச் சத்தியாக்கிரகம் துவக்கப்போகிறார் என்று நிச்சயமானதும் ஸர்தார் படேல் தம் மாகாண மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார். அதன் சாராம்சம் இதுதான் :

> "உலக சரித்திரத்திலேயே கண்டிராத ஒரு புதுமை இன்னும் சில தினங்களில் நடக்கப் போகிறது. அஹிம்சா பலத்தினால் ஒரு யுத்தம் குஜராத்தில் ஆரம்பிக்கப்போகிறது. தியாகத்திற்கும் மரணத்திற்கும் பயந்தவர்கள் தேச யாத்திரைக்குக் கிளம்புங்கள் ; ஆஸ்தியிலும் பணத்திலும் கருத்துடையவர்கள் அவற்றைக் காப்பாற்றிக்கொள்ள வெளியேறுங்கள். ஆனால் ஒன்று ; உண்மையான குஜராத்தி எவனும் போர் முரசைக் கேட்டதும், உயிரில் ஆசைகொண்டு, கதவைத் தாழிட்டுக்கொண்டு தன் வீட்டில் பதுங்கியிருக்கமாட்டான் என்பதுமட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரியும்."

குஜராத் மக்களுக்குமட்டுமா இந்தச் செய்தி? பாரத தேச முழுதும் இச்செய்தியைக் கேட்டு மெய் சிலிர்த்து எழுந்தது. உப்புச் சத்தியாக்கிரகம் நடந்ததும் அதன் பலனாக, "காந்தி - இர்வின்" ஒப்பந்தம் ஏற்பட்டதும் பழங்கதை.

---

## வக்கீல் படேல்

குஜராத் மாகாணத்திலே மிகவும் பிடிவாதக் குணம் வாய்ந்த மக்கள் நிறைந்த பிரதேசம் நாடியாட் தாலூகா. அஞ்சா நெஞ்சமும் வீரமும் நிறைந்த மக்கள் அவர்கள்; 1857-ஆம் ஆண்டில் நடந்த இந்தியச் சுதந்தர எழுச்சியில் பிரபலமாகப் பங்கெடுத்துக் கொண்டவர்கள். அந்தத் தாலூகாவிலே கரம்ஸாத் என்ற ஊரிலே ஜாவேரிபாய் படேல் என்பவரின் மூன்றாவது குமாரராக வல்லபபாய் படேல் 1875-ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் 31உ அவதரித்தார். பட்டிதார் வகுப்பைச் சேர்ந்த ஜாவேரிபாய் ஒரு சாதாரண விவசாயியாகவே வாழ்ந்துவந்தார். அவருக்கு ஐந்து ஆணும், ஒரு பெண்ணும் பிறந்தனர். 'தஹி பென்' என்ற அந்தப் பெண் மகவு அல்பாயுஸாகவே இறந்துவிட்டது. சோமாபாய், நர்ஸிபாய், வித்தல்பாய், வல்லபபாய், காசிபாய் என்ற ஐவரில் வித்தல்பாயும், வல்லபபாயும் அரசியலில் ஆர்வங்கொண்டு, பாரத நாட்டின் இரட்டையர்களாகப் பிரகாசித்தார்கள். வித்தல்பாய் சட்டசபைக்குச் சென்று அதன் தலைமைப் பதவியேற்றுச் சிறப்பாக வாழ்ந்து தேசசேவை செய்தவர். வல்லபபாயோ பாமரமக்களைத் திரட்டிச் சர்க்காருடன் நேரடியாகப் போர் நடத்தி, பெருமையும் செல்வாக்கும் பெற்றார். வரிகொடா இயக்கம் நடத்தி வெற்றிபெற்ற ஸர்தார், சட்டசபைகள் மூலம் பிரிட்டனை எதிர்க்கவேண்டும் என்று காங்கிரஸ் திட்டம் வகுத்ததும், 'பார்லிமெண்டரி போர்டி'ன் தலைமைப் பதவி ஏற்று, எழு மாகாணங்களில் மந்திரி சபைகளை அமைத்து வெற்றிபெற்றார்.

பள்ளிக்கூடத்தில் வல்லபபாய் படுசுட்டி. முரட்டுப் பையன்களுக்குத் தலைவரும் அவர்தான். சுமாரான படிப்புடன் வாத்தியார்களை எதிர்த்துப் போராடும் குணமும் இருந்துவிட்டால் எப்படிப் படித்து உருப்படியாக முடியும்? பள்ளிக்கூடத்திற்குப் பள்ளிக் கூடம் மாறி, ஒருவாறு மெட்ரிகுலேஷன் படிப்பில் தேறினர் வல்லபபாய்.

அதன் பின்பு வக்கீல் பரீட்சைக்குப் படித்து வக்கீலாக வாழ்க்கை துவக்கினர். துடிதுடிப்பும் முரட்டுத்தனமும், விதண்டாவாதமும் தர்க்க ஞானமும் உள்ள படேலுக்குச் சிவில் கேஸ்களைக் கண்டால் பிடிக்காது. கிரிமினல் கேஸ்களில் கவனம் செலுத்துவதுடன், பிரதிவாதிகளின் கட்சியை ஏற்று வாதிப்பதில் அவருக்கு அலாதி ஆசையுண்டு.

தமது சொந்த ஊராகிய கரம்ஸாத்திற்குப் பக்கத்தில் மூன்று மைலிலுள்ள காறு என்ற கிராமத்திலுள்ள ஓர் உயர்குடியில் பிறந்த ஜாவேர்பா என்ற மாதர் திலகத்தை வாழ்க்கைத் துணைவியாக ஏற்று அவர் போர்ஸாத்தில் குடியேறினர். எதிர்காலத்தில் ஒரு சிறந்த போர்வீரனைத் திகழப்போகும் அவருக்குக் குடும்ப பந்தம் இருக்கக்கூடாது என்று ஆண்டவன் எண்ணினன் போலும்? மணிபென் என்ற ஒரு பெண் மகவையும், தயாபாய் என்ற ஆண் மகவையும் கொடுத்துவிட்டு அவரது மனைவி 1908-ஆம் ஆண்டில் தமது பூத உடம்பை நீத்தார்.

வக்கீலாக வாழ்க்கை நடத்த ஆரம்பித்தபோதே வல்லபபாய் சர்க்காரைத் திணர அடிக்க ஆரம்பித்து விட்டார். கிரிமினல் வழக்கில் சிரத்தையுடன் வாதிக்கும் அவர் அநேகமாகப் பிரதிவாதிகள் கட்சியில்தான் ஆஜராவது வழக்கம். அவரது வாக்குவன்மையினல் கேஸ் ஜயித்துவிடும்; அவரது வாதத்தைக் கண்டு அதிகாரிகள் பிரமிப்படைந்தார்கள். சட்டமும் நீதியும் குலைந்துபோய் நீதிஸ்தலம் அநீதி ஸ்தாபனமாகி விடுமோ என்றுகூடப் பயந்தார்கள். அவரிடமிருந்து தப்ப போர்ஸாத்திலிருந்த ரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் தமது கோர்ட்டை ஆனந்திற்கு மாற்றிக்கொண்டார். தானும் ஆனந்தில் குடியேற வல்லபபாய் உத்தேசித்ததும், கோர்ட் மீண்டும் போர்ஸாத்திற்கே மாற்றப் பட்டது. ஒவ்வொரு கேஸிலும் வெற்றி பெறவே வல்லபபாயின் கீர்த்தி குஜராத் பூழுவதும் பரவிற்று. அவரது வருமானமும் பெருகிற்று.

பணமும் கீர்த்தியும் சேரவே, வல்லபபாய் தமது சட்ட ஞானத்தை விருத்தி செய்துகொள்ள ஆசையுற்று லண்டனுக்குச் செல்ல விரும்பினா. தாயற்ற தமது இருசேய்களையும் பந்துக்களிடம் ஒப்பித்துவிட்டு அவர் லண்டன் சென்று பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்தார். அநுபவமும் ஞானமும் நிறைந்த அவருக்குப் பரீட்சை ஒரு பிரமாதமா? முதன்மையாகத் தேறியதுடன் ஐம்பது பவுன் பரிசும் பெற்றுத் தாய்நாடு திரும்பினர்.

இந்தியா திரும்பியதும் வல்லபபாய் ஆமதாபாத்தில் குடியேறித் தொழில் நடத்தத் துவங்கினர். அவர் அங்கு குடியேறிய இரண்டு மூன்று வருஷங்களுக்கெல்லாம் காந்திஜியும் ஆமதாபாத்தையே தமது முகாமாகத் தேர்ந்தெடுத்து சாபர்மதி நதிக்கரையில் ஆசிரமம் நிறுவினர்.

ஐரோப்பிய நாகரிகத்தில் மூழ்கி வாழ்ந்த படேலுக்கு அந்தக் காலத்தில் கோர்ட்டு முடிந்ததும் நேரடி

யர்கக் 'குஜராத் கிளப்' சென்று, சீட்டும் சதுரங்கமும் ஆடுவதுதான் சிறந்த பொழுதுபோக்கு. நகரிலுள்ள வக்கீல்களும் பெரிய மனிதர்களும் குஜராத் கிளப்பில் கூடி அரட்டையடிப்பது வழக்கம். ஆங்கில மோகங்கொண்டவர்களின் கொம்மாளந்தான் அங்கே அதிகம். காந்திஜி ஆமதாபாத்தில் குடியேறி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் படேலுக்கு அவருடன் பரிச்சயம் செய்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆயுதபலத்தால் கெய்ஸர் மன்னன் ஐரோப்பிய நாடுகளை ஆட்டிவைத்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் அஹிம்சையையும், சத்தியத்தையும் போதித்து ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டுமென்று நமக்குச் சொல்லித்தர ஆபிரிக்காவிலிருந்து ஒரு வக்கீல் வந்தால், ஐரோப்பியப் பண்பாட்டில் ஈடுபட்டிருந்த வக்கீல்கள் அவரை நையாண்டி செய்யமாட்டார்களா? காந்திஜி குஜராதிதான் என்றாலும் தென் ஆபிரிகாவில் அவர் கையாண்ட போர்முறைகள் இந்தியாவுக்கு உதவாது என்றே படித்தவர்களில் பலர் எண்ணினர். காந்திஜி குஜராத்கிளப்புக்கு விஜயம்செய்து அங்குள்ள பிரமுகர்களிடம் பழக்கம் ஏற்படுத்திக்கொள்ள விரும்பினார். நாடு சுதந்தரமடையத் தமது திட்டத்தைச்சமர்ப்பித்து அவர்களுடைய ஒத்துழைப்பைப்பெற காந்திஜி ஒரு சமயம் அங்குவந்தார். அவர் வந்தபோது வல்லபாய் படேல் சுவாரஸ்யமாகச் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார். காந்திஜியின் அமைதியையும், சங்கோஜத்தையும் காண அவருக்குச் சிரிப்புதான் வந்தது. கிண்டல் பார்வையுடன் அவரைப் பார்த்துவிட்டு மீண்டும் விளையாட்டில் ஈடுபட்டார் படேல். ஆனால் இரண்டாண்டுகளுக்குப் பிறகு அவர் மனம் மாறி



கோட்டையும் ஹாட்டையும் உதறி எறிந்துவிட்டுக் குடுத்தாவையும், பஞ்சகச்ச வேஷ்டியையும் அணிந்து, வனவாசம் செல்லும் ராமனுடன் புறப்பட்ட லக்ஷ்மணனைப்போல வெளிப்பட்டு தேச சேவையில் ஈடுபட்டார். அன்றிருந்து அவருக்குக் காந்திஜிதான் உபாசனா மூர்த்தி; அவரது வாக்குதான் கட்டளை.

காந்திஜியின் கொள்கையில் மயங்கி அவரது கோட்பாடுகளில் கட்டுண்டு படேல் காந்தி பக்தராகிவிட்டார் என்று சொல்லுவதற்கு இல்லை. காந்திஜியின் மேதையில் ஈடுபட்டு, அவரது வசீகர சக்தியினால் இழுக்கப்பட்டுப் படேல் அரசியலில் ஈடுபட்டார் என்று சொல்லுவதுதான் பொருந்தும். கண்ணை மூடிக்கொண்டு, காந்திஜி போடும் திட்டங்களைப் படேல் நிறைவேற்ற முன்வருகிறார் என்றும் சொல்லிவிட முடியாது. ஒவ்வோர் அம்சத்தையும் ஆராய்ந்து தர்க்கித்து தான் திருப்தியடைந்த பின்புதான், அதை ஏற்றுக்கொண்டு நாட்டின் மக்களுக்கு ஆணையிட முன்வருவார் படேல். "ஸர்தார் எனது முறைகளையும் திட்டங்களையும் எதிர்த்து வாதிக்கும்போது, எங்கே என் திட்டம் அமலுக்கு வராது தோற்றுவிடுமோ என்று நான் பயப்படுவதுண்டு. ஆனால் கடைசியில் அவர் அப்படியே நிறைவேற்ற முற்படுகிறார்" என்று காந்திஜி படேலைப்பற்றிக் கூறுவது உண்டு.

ஆமதாபாத்தில் குடியேறிய காந்திஜி தமது கொள்கைகளை மக்கள் மனத்தில் பதியும்படி முதல் முதலில் செய்துகாட்டியது பீஹாரில்தான். அங்கு விவசாயக் கூலிகளின் நிலைமை படுமோசமாக

இருந்தது. அன்பர்களின் அழைப்புக்கிணங்க, காந்திஜி அங்கே சென்று நிலைமையைப் பரிசீலனை செய்தார். எங்கேயோயுள்ள ஒரு பாரிஸ்டர் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டால், பீஹார் நிலச்சுவான்தார்களும் மாகாண அதிகாரிகளும் சும்மாயிருப்பார்களா? காந்திஜியின்மீது தடை உத்தரவு பிறந்தது. அவர் அதை மீறினார். மோதிஹார் கோர்ட்டில் விசாரணை நடந்தது. அங்கு காந்திஜி நடந்துகொண்ட முறையும் அவர் தமது கட்சியை எடுத்துச்சொன்ன அழகும் உள்ளம் உருக்கும் காட்சியாயிருந்தது. அதிகாரிகள் மனம் மாறவில்லையென்றாலும் நாடு முழுவதும் அந்தச் செய்தி கேட்டு மெய்சிலிர்த்தது.

அந்தச் சமயம் ஆமதாபாத் குஜராத் கிளப் காரியதரிசிகளாக வல்லபாய் படேலும், ஹரிலால் தேசாயும் இருந்தார்கள். பீஹார் சம்பவத்தால் ஹரிலால் தேசாய்க்குக் காந்திஜியிடம் ஓர் ஈடுபாடு ஏற்பட்டது. அடுத்துவந்த ஆண்டு சபைத் தேர்தலில் அவர் தமது சகாக்களைக் கலந்துகொண்டு காந்திஜியை குஜராத் கிளப்பின் தலைவராகத் தேர்ந்தெடுத்தார். காந்திஜியும் அதை ஏற்றுக்கொண்டார். அதன் பிறகுதான் படேலின் வாழ்க்கையில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. காந்திஜியுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்ட பின்பு அவரது மேதையிலும் எளிமையிலும் தூய்மையிலும் ஈடுபட்ட படேல் தம் ஆடம்பரத்தையும், நாகரிக மோகத்தையும் விட்டுவிட்டு எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டார்.

---

## விவசாயிகளின் தலைவர்

கெய்ராவில் 1917-ஆம் ஆண்டில் வானம் பொய்த்துவிட்டது. ஆனால் வரி வசூலிப்பதில் மட்டும் சர்க்காரின் கெடுபிடி மிகவும் அதிகமாக இருந்தது. அக் கொடுமையைச் சகித்துக்கொண்டு இருப்பதைவிட எதிர்த்து மடிவதேமேல் என்று நிச்சயித்து, மக்கள் வரிகொடா இயக்கத்திற்குத் துணிந்துவிட்டார்கள். மக்கள் துயரை உணர்ந்து தலைமை வகித்து இயக்கத்தை நடத்த காந்திஜி முன்வந்தார். ஆனால் அவரால் அங்கே தங்கி முழு கவனமும் செலுத்திப் போராட்டத்தை நடத்த முடியவில்லை. அந்தச் சமயம் பீஹாரில் அவர் விவசாயிகளின் துயரை நீக்க வேலை செய்துவந்தார். ஆகவே தமது போராட்ட முறைகளைக் கையாண்டு வெற்றிபெறவல்ல ஒரு சிறந்த ஊழியரைத் தேடிக்கொண்டிருந்தார் காந்திஜி, அஹிம்சையை ஒரு போர்ச் சாதனமாக உபயோகிப்பது இந்த நாட்டிற்கே புதிது. எதிர்க்கட்சியோ ஆயுத பலமும் சட்ட பலமும் உள்ள சர்க்கார். தம் உடனிருப்பவர்களோ அறியாமையும் வறுமையும் நிறைந்த விவசாயிகள். காந்திஜியின் கொள்கைகளை ஓரளவு புரிந்துகொண்ட படேல் முன்வந்து, இயக்கத்தை நடத்தினார். காந்திஜியின் கட்டளையை ஏற்று அதை நிறைவேற்றி வெற்றியும் பெற்றார். கெய்ரா சத்தியாக்கிரகந்தான் இந்தியாவில் முதன் முதல் நடந்த அஹிம்சைப் போர். காந்தீயப் போர்முறைகளைப் புரிந்துகொண்டு அவற்றை அனுஷ்டித்த முதல் தளகர்த்தர் ஸர்தார் படேல்தான். அன்றிருந்து நாடு விடுதலை பெறும்வரை ஒவ்வொரு போராட்டத்

திலும் காந்திஜியின் சர்தாராக நின்று சுதந்தரப் போராட்டத்தில் ஒவ்வொரு கட்டத்தையும் நடத்தி வந்தார் படேல்.

ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த சமயம். போர்ஸாத்தில் தண்டப் போலீஸை வைத்து வரி விதித்தனர் சர்க்கார். தேசபக்திக்குத் தண்டனை என்ற அந்தக் காலத்தில் சர்க்கார் அதிகாரிகள் தமது ஆணைக்கு எதிர்ப்பு ஏற்படும்போதெல்லாம் நீதி தவறி நடக்கச் சித்தமாயிருந்தார்கள். சுயநலமும் எஜமான விசுவாஸமுங்கொண்ட ஜில்லா நிர்வாகிகள் தேசத்தில் பொங்கி யெழுந்துவரும் தேசபக்தி வெள்ளத்தை அணைபோட்டுத் தடுக்க அநியாயம், அடக்குமுறை என்ற ஆயுதங்களைத் தாங்கி நின்றார்கள். காந்திஜி ஒத்துழையாமை இயக்கம் நடத்த நிச்சயித்ததும் அவர் தலைமையை ஆரம்ப நாளிலிருந்தே ஏற்று நடந்துவரும் குஜராத்திகள், தேசத்துக்கே வழிகாட்டும் முறையில் அணிவகுத்து நின்று ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முற்பட்டார்கள். கெய்ரா சத்தியாக்கிரகத்தினால் அவர்கள் எதிரியின் ஆயுதபலத்தையும் தங்களுடைய ஆத்ம பலத்தையும் ஓரளவு புரிந்துகொண்டிருந்தார்கள். அந்தச் சத்தியாக்கிரகத்தில் ஏற்பட்ட அனுபவமும் ஸர்தார் படேலின் தலைமையும் இருக்கும்போது, தேசத்தில் போர்முரசு ஒலிக்கையில் அவர்களால் எப்படி வாளாவிருக்க முடியும்?

கனன்று எரியும் மக்களது ஆவேசத்தை அடக்கிவிட அதிகாரிகள் அடக்குமுறையைக் கையாண்டனர். போர்ஸாத், ஆமதாபாத், பர்டோலி முதலிய இடங்களில் தண்டப் போலீஸை நிறுத்திவைத்து மக்களிடம் வரி வசூலிக்கவும் அதிகாரிகள் துணிந்தனர்.



போர்ஸாத்தில் காலிகளும் கயவர்களும் போலீஸாரின் கையாட்களாக மாறி மக்களை ஹிம்சிக்க ஆரம்பித்தனர். நீதியை நிலைநிறுத்தி ஏகாதிபத்திய ஆட்சியில் அமைதிக்குப் பங்கமேற்படாது காக்கவந்த போலீஸாரும் வரம்பு மீறி எதேச்சையாக நடந்து மக்களை வாட்டினர்.

மக்களின் கூக்குரலும் பத்திரிகைகளின் ஓலமும் மாகாண நிர்வாகிகளின் காதில் விழவில்லை. அமைதியும் நீதியும் நிலவச் செய்யச் சென்றுள்ள தங்கள் பிரதிநிதிகள் தவறுசெய்வார்களா என்ற எண்ணமோ! அல்லது, தேசபக்தியுடன் சுதந்தரம் பேச வந்தவர்களுக்கு உரிய தண்டனை இதுதான் என்று அவர்களின் நினைப்போ, என்னவோ தெரியாது! தமது அதிகாரத்தின் ஆணவத்தைவிட மக்களின் ஒற்றுமையே வலிமை வாய்ந்தது என்பதை அப்போது அவர்கள் உணரவில்லை. தினந்தினம் வளர்ந்துவரும் கொடுங்கோன்மையையும் மக்கள் படுந்துயரையும் அறிந்த வல்லபபாய் படேல் போர்ஸாத்துக்கு ஓடிச் சென்று நிலைமையை ஆராய்ந்தார். அங்கு நடந்த அநீதிகளைக் கண்டு அவர் மனங்கொதித்தார். உடனே தாமே பொறுப்பேற்று கிளர்ச்சியை நடத்த முன் வந்தார். அதிகாரிகளின் விபரீதப் போக்கை அம்பலப்படுத்திச் சர்க்காரின் கவனத்தை இழுத்தார். வல்லபபாய் தலையிட்டபின்பு, சர்க்கார் பராமுகமாக இருக்கவில்லை. அவருடைய குற்றச் சாட்டுகளை ஏற்றுக் கொள்ளாமல் மழுப்பிற்று. என்றாலும் உடனே நிலைமையைச் சீர்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொண்டது. தண்டப் போலீஸ் 'வாபஸ்' ஆயிற்று.

# நாகபுரிப் போராட்டம்

ஒத்துழையாமை இயக்கத்தின்போதே வல்லபபாய் தமது வக்கீல் தொழிலை விட்டுவிட்டுத் தேச சேவையில் ஈடுபட்டுவிட்டார். ஆனால் அவர் தமது மாகாண மக்களின் நலனைப்பற்றியே சதா சிந்தித்துச் சேவை செய்துவந்தார். படேலுடைய போர்க்குணத்தையும் சாகஸத்தையும் பிற மாகாண வாசிகள் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் நாகபுரியில் நடந்த கொடிப் போராட்டத்தின்போதுதான் ஏற்பட்டது. சௌரிசாராவில் நடந்த பலாத்காரச் செயல்களைக் கண்டித்து, காந்திஜி இயக்கத்தை நிறுத்திவிட்டார். ஆனாலும் ஆங்காங்கு தொண்டர்கள் தேசியப் பிரசாரம் செய்துகொண்டிருந்தார்கள். இயக்கம் நிறுத்தப்பட்டுவிட்டதால் அதிகாரிகளும் தமது தீவிரத்தை அடக்கிக்கொண்டார்கள். ஆனால் நாகபுரியிலுள்ள ஒரு சில வெள்ளை அதிகாரிகளுக்கு மட்டும் மனக்கொதிப்பு அடங்கவில்லை. 1923-ஆம் வருஷ இறுதியில் நாகபுரியில் சில தொண்டர்கள் தேசியக் கொடியேற்றி ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். பொது ஜனங்களும் அதில் உற்சாகமாகக் கலந்துகொண்டார்கள். ஊர்வலம் பல வீதிகளைக் கடந்துசென்று அதிகாரிகள் வசிக்கும் சிவில் லைன்ஸ்' என்ற பகுதியை அடைந்தது. குடையைக் கண்டு மாடு மிரளுவதைப் போல, ஏற்கெனவே அந்த ஊர்வலத்தைக் கண்டு மனம் வெதும்பிக் கிடந்த போலீஸார், 'சிவில் லைன்'ஸிலும் தொண்டர்கள் புகுந்ததைக் காணச் சகியாது ஊர்வலத்தைத் தடுத்தார்கள். அது ஒதுக்கப்பட்ட



பிரதேசமெனக் கூறி, ஆங்கு தேசபக்தர்கள் நுழையக் கூடாது என்று தடை உத்தரவும் போட்டார்கள். தேசியக் கொடியைத் தாங்கித் தமது உரிமையை ஸ்தாபிக்க முயன்ற தொண்டர்களைக் கைது செய்து சிறைத் தண்டனையும் விதித்தார்கள். சாதாரண சம்பவத்தை அதிகாரிகள் மிகைப்படுத்தி நடவடிக்கை எடுத்துக்கொள்ளவே நாகபுரி ஊழியர்கள் தங்கள் உரிமையை ஸ்தாபித்துக்கொள்ள, தேசத் தலைவர்களின் ஆசியும் அனுமதியும் பெற்று, ஒரு பெரும் போராட்டத்திற்குத் திட்டம் வகுத்துவிட்டார்கள். அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள நாடெங்குமிருந்து தொண்டர்கள் வந்து சேர்ந்தனர். நாகபுரி கொடிப் போராட்டம் அகில இந்தியப் பிரச்னையாக உருவெடுத்ததைக் கண்டு, நிலைமையைப் பரிசிலனை செய்யவும் இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தவும், காங்கிரஸ் மகாசபை வல்லபபாய் படேலையும் அவரது சகோதரர் வித்தல்பாய் படேலையும் நியமித்தது. படேல் சகோதரர்கள் இயக்கத்துக்குத் தலைமை தாங்கியதுமே போராட்டத்தின் போக்கு மாறிற்று. அதிகாரிகள் பிகுவை மாற்றிக்கொண்டு சமரஸம் பேச முன்வந்தார்கள். சிறையிலிருந்த தொண்டர்கள் விடுதலையடைந்தார்கள். சமரசப் பேச்சு முடிந்ததும் சில தொண்டர்கள் கொடியேற்றி ஊர்வலம் வந்தார்கள். அந்த ஊர்வலத்தை அதிகாரிகள் தடை செய்யவில்லை. தடை உத்தரவு அமலில் இருந்துங்கூட, அவர்கள் தொண்டர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. எனவே இயக்கம் நிறுத்தப்பட்டது. ஆனால் சர்க்கார் சார்பிலுள்ள சில பத்திரிகைகள் மட்டும் இயக்கம் தோல்வியுற்றது என்று பறைசாற்ற

ஆரம்பித்தன. தடை உத்தரவு அமலில் இருப்பதால் சர்க்கார் விட்டுக்கொடுக்கவில்லையென்றும் அலைகள் கொக்கரித்தன.

சமரசம் பேசிக் கண்ணியமாக இயக்கத்தை முடித்த ஸர்தார் படேலுக்கு இந்தத் துஷ்ப் பிரசாரம் சகிக்கவில்லை. அதிகாரிகளின் போக்கைப் பற்றியும், நடந்த நிகழ்ச்சிகள் பற்றியும் அவர் ஆணித்தரமாக ஓர் அறிக்கை வெளியிட்டார். எதிரிகள் வாயடைத்து நின்றனர். படேலின் சாகஸத்தையும் நேர்மையையும் ஏற்கெனவே தெரிந்துகொண்டுள்ள மக்கள் அவரது ஆற்றலையும் எதிரிகளை அடக்கும் சாமர்த்தியத்தையும் அந்தப் போராட்டத்தில் கண்டு தலை வணங்கினார்கள்.

ஒத்துழையாமை இயக்கத்தினால் எதிர்பார்த்த பலன் கிடைக்காமற் போகவே, காங்கிரஸ் தலைவர்களில் ஒரு சாரார் சட்டசபை பிரவேசத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். காங்கிரஸ் சட்டசபைகளைக் கைப்பற்றி, சர்க்கார் நிர்வாகத்திலும் தலையிட்டு முட்டுக்கட்டை போடவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். ஆனால் இந்த மாதிரிப் போராட்டத்தினால் விசேஷமாக வெற்றி கிடைக்காது என்றே வல்லபபாய் படேலும் ராஜாஜியும் எண்ணினார்கள். காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தால்தான் பரிபூரணமான வெற்றி கிடைக்கும் என்று இவர்கள் எண்ணினார்கள். ஆனால் மாறுதல் வேண்டிநின்ற தலைவர்களும் சாமானியப்பட்டவர்கள் அல்ல. மோதிலால் நேரு, தேசபந்து தாஸ் ஆகியோர்தான் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்தவர்கள். விவாதம் வலுத்தது. கடைசியில் அகில



இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிடம் இந்தப் பிரச்னை வந்தது. நேரடியாகச் சட்டசபைப் பிரவேசத்தில் சிரத்தை காட்டாவிட்டாலும், சுயராஜ்யக் கட்சிக்கு ஆதரவு தர, காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்தது. 1924-ஆம் வருஷம் நடந்த ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் முதல் முதலாகக் கலந்துகொண்டார்கள். வல்லபபாய் படேலுக்கு இந்தத் துறையில் நம்பிக்கையில்லை. என்றாலும், சக ஊழியர்களின் விருப்பத்திற்கிணங்க ஆமதபாத் நகரசபைத் தேர்தலில் அவர் கலந்துகொண்டார். அந்த ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் பெருவாரியாக வெற்றிபெற்றனர். பின்பு நகரசபைத் தலைவராக வல்லபபாய் படேல் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்க்கும் போர்முறையாகச் சட்டசபைப் பிரவேசத்தைக் காங்கிரஸ் கட்சி எடுத்துக்கொண்ட போதிலும் நகரசபைகள், சட்ட சபைகள் மூலம் ஓரளவு பொதுஜனங்களுக்கு உதவிசெய்யமுடியும் என்பதைக் காங்கிரஸ்காரர்கள் நிரூபித்துக்காட்டினார்கள். 1924-ஆம் ௵ முதல், 1928-ஆம் ௵ வரையில் படேல் ஆமதபாத் நகரசபைத் தலைவராகயிருந்து அற்புதமான சேவை புரிந்தார். அதன் பின்புங்கூட நகரசபை நிர்வாகிகளுக்கு அவர் ஆலோசகராக இருக்கும் செல்வாக்கைப் பெற்றிருந்தார். பூமாலையும் தேநீர் விருந்தும் பெற்று பொம்மைபோல நகரசபைக் கூட்டத்தில் வீற்றிராமல் அந்தச் சபையையே ஒரு சிறு குடியரசாக்கி அதன் தலைவராக இருந்து அரசு செலுத்திவந்தார் படேல்.

# பர்டோலிப் போராட்டம்

படேல் ஆமதாபாத்தில் வசித்தபோதிலும் அவர் தம்முடைய ஜில்லாவாசிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார். கஷ்டப்படும் குஜராத்திகள் அவரிடம் பரிகாரம் தேடிவருவது சர்வ சகஜமாக இருந்தது. 1927-ஆம் ஆண்டில் குஜராத்தில் ஒரு பெரும் வெள்ளம் ஏற்பட்டது. பயிர் பச்சைகள் அழிந்ததுடன் கன்று காலிகளும் மடிந்தன; குஜராத் விவசாயிகள் பெருந் துயருற்றார்கள். சர்க்காரோ ஜனங்களின் கஷ்ட நஷ்டங்களைக் கவனிக்கவேயில்லை. ஆனால் வல்லபபாய் படேல் வெள்ளக் கஷ்ட நிவாரண நிதியொன்று திரட்டிக் கஷ்டப்பட்டோருக்கு உதவி செய்தார்.

இதன் நடுவே, சர்க்கார் 'புத்திசாலித்தனமான' ஒரு காரியத்தைச் செய்தது. முப்பது வருஷங்களுக்கு ஒரு முறை சாகுபடி நிலங்களின் தரங்களைப் பரிசீலனை செய்து 'செட்டில்மெண்டு' செய்வதைச் சர்க்கார் சம்பிரதாயமாகக் கைக்கொண்டு வருகிறது. நிலத்தின் வருமானத்தைப் பொறுத்து வரி நிர்ணயம் செய்வதாகச் சம்பிரதாயம். ஆனால் சாதாரணமாய் இந்தச் 'செட்டில்மெண்டு' அதிகாரிகள் நிலங்களைப் பார்க்காமலே விளைச்சல் அதிகம் என்று கணக்கிட்டு வரியை உயர்த்திவிடுவது வழக்கம். ஒவ்வொரு செட்டில்மெண்டின்போதும் வரி உயர்வு ஏற்படுவது சகஜம். இந்தமாதிரிச் 'செட்டில்மெண்டு' நிர்ணயம் அந்த ஆண்டு பர்டோலித் தாலுகாவுக்கு வந்தது. வானம் பொய்த்துவிட்டதால் அந்த ஆண்டு விளைச்சலே



இல்லாமல் போய்விட்டது. முந்தின ஆண்டுகளிலும் விசேஷமான விளைச்சல் இல்லை. ஆனால் அதிகாரிகள் இவற்றையெல்லாம் கவனிக்கவில்லை; வழக்கம்போல வரி உயர்வுக்கு நிச்சயம் செய்து வரியை இருபத்தைந்து சதவிகிதம் உயர்த்திவிட்டார்கள். 'இது அநியாயமானது' என்று விவசாயிகள் சொன்னார்கள். ஆனால் பலனில்லை. புது வரிநிர்ணயப்படி வரி வசூலிக்குமாறு கலெக்டர் கிராம அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். வரி உயர்வைக் கண்டித்த கிராமவாசிகளின்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் நிச்சயித்தார்.

கிராமவாசிகள் என்ன செய்வார்கள்! கஷ்ட காலத்தில் தங்களுக்கு வழிகாட்டும் வல்லபபாய் படேலிடம் ஓடினர். வல்லபபாய் படேல் நிலைமையை நன்கு பரிசீலனைசெய்து, சர்க்காரின் முடிவு நியாயமற்றது என்று தெரிந்ததும் தாமே நேரடியாகச் சர்க்காருக்கு எழுதினார். அப்போதும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. அதிகாரிகளின் சிபாரிசைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டதே தவிர ஜனங்களின் கஷ்டத்தைப் பொருட்படுத்தவேயில்லை. எனவே வரிகொடா இயக்கம் ஒன்றே இதற்குச் சரியான பரிகாரம் என்று ஜனங்கள் நிச்சயித்தார்கள். அதற்குப் பூர்வாங்கமாக ஒரு மகாநாடு கூட்டி வல்லபபாய் படேலைத் தலைமை வகிக்க அழைத்தார்கள்.

வல்லபபாய் படேல் இயக்கத்தை உடனே ஆரம்பிக்கவில்லை. அதனால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களை ஜனங்களுக்கு அவர் எடுத்துச் சொன்னார். கிராமம் கிராமமாகச் சென்று ஜனங்களின் மனோபாவத்தைத் தெரிந்துகொண்டார். எத்தகைய தியாகத்துக்கும் மக்கள் துணிந்து நிற்பதைக்கண்டு, காந்திஜி

யின் ஆசியைப் பெற்றுத் தாமே தலைமை வகித்து சத்தியாக்கிரகம் செய்ய அவர் நிச்சயித்தார்.

சத்தியாக்கிரகம் ஆரம்பிக்குமுன் ஸர்தார் படேல் கிராமவாசிகளுக்கு விடுத்த அறிக்கையின் சாரம் இதுதான் :

“நாளையிலிருந்து நம்முடைய அந்தஸ்து மாறிவிடும். அமைதியான வாழ்க்கை இங்கு இராது. அஹிம்ஸா பலத்துடன் நீங்கள் ஒரு பெரிய சர்க்காரை எதிர்த்து நிற்கப்போகிறீர்கள். ஆனால் உங்களுடைய எதிர்ப்பைக் கண்டு சர்க்கார் சீறி எழும். உங்களுக்குள்ளிருக்கும் சொந்த மனஸ்தாபங்களையும் பரஸ்பர மாத்சரியங்களையும் நீங்கள் மறந்துவிடவேண்டும். நீங்கள் எல்லோரும் ஒரு கட்சி. உங்களிடம் வரி வசூலிக்கும் சர்க்கார் எதிர்க்கட்சி. அதிகாரிகள் மாட்டைப் பிடித்துக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது, நிலத்தை ஜப்தி செய்துவிட்டால், என்ன செய்வது,என்று உங்களில் பலர் பயப்படக்கூடும். மாட்டையும் நிலத்தையும் ஜப்திசெய்து என்ன செய்வது? நிலத்தை அவர்கள் இங்கிலாந்துக்கு எடுத்துக்கொண்டு போய்விடுவார்களா? நிலத்தைச் சர்க்கார் ஏலம் போடக்கூடும். உங்களில் யாருமே ஏலம் எடுக்க முன்வராவிட்டால், சர்க்கார் என்ன செய்வார்கள்? அந்நியன் யாராவது ஏலம் எடுத்தாலும் இங்கு யாருமே நிலத்தைச் சாகுபடி செய்வதில்லை என்று நீங்கள் உறுதியுடனிருந்தால் அத்தனை நிலமும் தரிசாகவே கிடக்கும். நீங்கள் திடச்



சித்தத்துடன் போரிட்டால் குஜராத் மாகாணம் முழுவதும் உங்களுக்கு ஆதரவாக நிற்கும்.

“ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு பாசறையாக மாறவேண்டும். அஹிம்ஸைப் போருக்குக் கட்டுப்பாடுதான் பிரதானம். ஒவ்வொரு கிராமத்திலும் சர்க்காரின் பிரதிநிதிகளாகக் கணக்கனும் மணியக்காரனுந்தான் உண்டு. ஆனால் நம்முடைய பிரதிநிதியாக வயதுவந்த ஒவ்வொரு வாலிபனும் முன்வரவேண்டும்.”

படேலின் போர்முரசைக் கேட்டுப் பொதுஜனங்களும் திரண்டு முன்வந்தார்கள். சர்க்காரும் முஸ்தீப்புச் செய்தது. ‘வரிகொடுக்க மறுப்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்போம், ஆடு மாடுகளை ஜப்தி செய்வோம்’ என்றெல்லாம் அதிகாரிகள் அறிக்கை விட்டார்கள். வல்லபபாய் படேல் கிராமம் கிராமமாகச் சென்று ஜனங்களை உற்சாகப்படுத்தினார். கட்டுப்பாடாக நின்று போரிடும்படிக் கேட்டுக்கொண்டார். ‘சர்க்காரின் அறிக்கைகளைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள். அதிகாரிகள் செய்யும் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு பயப்பட்டுவிடாதீர்கள். நம்முடைய கட்டுப்பாட்டைக் கண்டு அவர்கள் வழிக்கு வந்தே யாகவேண்டும்’ என்று சொல்லிக் கிராமவாசிகளைத் தைரியமூட்டினார்.

அதிகாரிகள் சும்மாயிருக்கவில்லை. தங்கள் மிரட்டலுக்குக் கிராமவாசிகள் பயப்படவில்லை என்று தெரிந்ததும் ஊரில் பிரதானமாக இருப்பவர்களைக் கைது செய்தார்கள். தொண்டர்களைப் போலீஸ் ‘லாக்கப்’பில் வைத்தார்கள். ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டுபோய்ப் பட்டியில் அடைத்தார்கள். தங்களுடைய மாடுகள் பட்டினியுடன் பட்டியில் அடைத்துக் கிடப்பதைக்

கண்டு கிராமவாசிகள் மனம் துடித்தார்கள்; ஆனாலும் மசிந்துவிடவில்லை. அதிகாரிகளுக்கு ஏமாற்றம் அதிகரிக்கவே நேரடியாக ஜனங்களை ஹிம்சிக்கத் துணிந்துவிட்டார்கள். எல்லைப்புறப் பட்டாணியர்களைக் கைக்கூலி பேசி அழைத்துவந்தார்கள். கிராமப் பெண்கள் ஜலம் எடுக்கவரும் கிணற்றடியில் அவர்களை நிறுத்திவைத்துப் பெண்களை மிரட்டினார்கள். சிற்சில இடங்களில் இந்தப் பட்டாணியர்கள் மிகவும் முரட்டுத்தனமாக நடந்துகொண்டனர். பெண்கள் ஜலம் எடுக்கக் கிணற்றுக்கு வர அஞ்சினார்கள். ஆண்களே குடமேந்தி வீட்டுக்கு வேண்டிய ஜலம் எடுத்துச் சென்றார்கள். "எதிர்ப்புக்கு நீங்கள் அஞ்சக்கூடாது. நீங்கள் தைரிய லக்ஷ்மிகள். வீட்டுக்குள் அதிகாரிகள் நுழைந்து சட்டிபானைகளை ஜப்திசெய்தால் உங்கள் கையிலிருக்கும் பித்தளை வளையல்களைக் கழற்றிக்கொடுங்கள். அவற்றைக் கையில் அணிந்துகொள்ளச் சொல்லுங்கள். சட்டிபானைகள் எடுத்துச் சென்றுவிட்டதால் பட்டினி போட்டுவிடமுடியாது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்" என்று படேல் ஒரு பெண்கள் கூட்டத்தில் பேசினார்.

சுமார் 17,000 குடும்பங்கள் இந்தச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டன. ஆயிரக் கணக்கான, எருமைகளையும் பசு மாடுகளையும் அதிகாரிகள் பட்டிக்கு ஓட்டிக்கொண்டுபோய் அடைத்துவைத்தார்கள். சரியான போஷணையின்றிப் பல மாடுகள் அங்கேயே இறந்தன. வேறு சில, நோய்வாய்ப்பட்டு வெளுத்துப் போயின. சில இளைத்து எலும்புந் தோலுமாக நின்றன. அதைக் கண்டு சில விவசாயிகள் மனம் வருந்தினார்கள். "ஆடுமாடுகளைக் காப்பாற்ற நாம்



போராடவில்லை, நம்முடைய உரிமைகளைக் காப்பாற்றவே போராடுகிறோம். நம்முடைய ஆடுமாடுகளைத்தான் அவர்கள் சிறைப்படுத்த முடியும். நம்முடைய ஆத்மாவைச் சிறைப்படுத்த அவர்களால் முடியாது. கறுப்பு நிறத்தைக்கண்டால் நமது கலெக்டர் துரைக்குப் பிடிக்காது. ஆனதால்தான் அவைகளைப் பட்டினிபோட்டு வெளுக்கப் பார்க்கிறார். ஆனால் 'கறுப்பு எருமையும் நிறம் மாறாது; கறுப்புக் குஜராத்தியும் மனம் மாறமாட்டான்' என்பது அந்த வெள்ளைத் துரைக்குத் தெரியாது" என்று ஒரு கூட்டத்தில் படேல் பேசினார். அப்புறம் ஜனங்கள் தங்களுடைய எருமைகளைப்பற்றி ஏன் சிந்திக்கப் போகிறார்கள்? போராட்டமோ வலுத்தது.

மாதக் கணக்காய் மன உறுதி தளராமல் அந்த விவசாயிகள் போராட்டத்தை நடத்தினார்கள். கடைசியில் சர்க்கார் வழிக்கு வந்தது. ஒரு விசாரணைக்கோர்ட்டு ஏற்படுத்தி, வரியைக் குறைக்க நிச்சயித்தது. காந்திஜியின் அநுமதிபெற்று வல்லபபாய் படேலும் போராட்டத்தை நிறுத்தினார். 25 சதவிகித உயர்வை விசாரணைக் கோர்ட்டு ஆறேகால் சதமாகக் குறைத்தது. இருந்தாலும் அதை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டார்கள்.

பர்டோலியில் சத்தியாக்கிரகம் நடந்துகொண்டிருக்கும்போது தேசத்தின் எதிர்காலத்தைப்பற்றி இதரத்தலைவர்கள் சிந்தித்துக்கொண்டிருந்தனர். எதிர்கால இந்தியாவின் அரசியல், குடியரசாக இருக்கவேண்டுமா, பூரண சுதந்தர நாடாக இருக்கவேண்டுமா என்பதை ஆலோசித்து வந்தனர். காங்கிரஸ் மகாசபை, பண்டித மோதிலால் நேருவின் தலைமையில்,

ஒரு கமிட்டியை நியமித்து எல்லாக் கட்சியினரும் ஏற்றுக்கொள்ளும் அரசியல் திட்டம் ஒன்றை வகுக்குமாறு கேட்டுக்கொண்டது. பர்டோலியில் சத்தியாக்கிரகம் வெற்றிபெற்றது. ஆனால் போராட்டத்தில் வீடு வாசல்களை இழந்து கிராமத்தை விட்டு வெளியேறிய மிராசுதார்கள் திரும்பிவர முடியவில்லை. ஜப்திசெய்யப்பட்ட நிலங்களைச் சர்க்கார் உரியவர்களிடம் திருப்பித்தரவில்லை. இருந்தாலும் போர் நின்றது. இழந்த சொத்தை மீட்பதுபற்றி எவருமே பேச்செடுக்கவில்லை. ஏலம் எடுத்தவர்களும் நிலத்தை சுவாதீனப்படுத்திப் பயிரிட முன்வரவில்லை. பச்சைப் பசேலெனக் கிடக்கும் நிலங்கள் தரிசாக மாறின.

அஹிம்சையைப் பலமாகக் கொண்டு மிகவும் சாஹசத்துடன் போரிட்டு பர்டோலிமக்கள் வெற்றி பெற்றார்கள். அதைக்கண்டு காந்திஜி மனம் பூரித்தார். தன்னுடைய போராட்ட முறையில் வெற்றி நிச்சயம் என்று தெரிந்துகொண்ட தளகர்த்தன் சந்தோஷப்படுவது இயற்கைதானே! பாமர மக்களை ஒன்று திரட்டிப் போர்முரசு கொட்டி ஆயுதபலந் தாங்கிய பிரிட்டிஷ் அரசைப் பணியவைத்த வல்லபபாய் படேலைப் பாராட்டினார். மாபெரும் கூட்டமொன்று கூட்டி, அதில் வல்லபபாய் படேலுக்கு 'ஸர்தார்' என்று பட்டம் சூட்டினார். காந்தீயத் தளகர்த்தரான ஸர்தார் படேல் அன்றிருந்து பர்டோலிக்கு மட்டுமல்ல, காங்கிரஸ் மகா சபையின் ஸர்தாராகவே விளங்குகிறார்.

## உப்பு சத்தியாக்கிரகம்

பர்டோலி சத்தியாக்கிரகம் ஓய்ந்தது. சில மாதங்கள் சென்றன. இதற்குள் காங்கிரஸ் மகாசபை பூரண சுதந்தரப் பிரகடனம் செய்து பிரிட்டிஷ் சர்க்காருக்கு எச்சரிக்கை விடுத்தது. உடனே ஒரு போராட்டத்தை நடத்த காந்திஜியைத் தளகர்த்தராகத் தேசம் நியமித்தது. காந்திஜி உப்பு சத்தியாக்கிரகம் செய்ய நிச்சயித்தார். தமது போர்முறைகளில் பழக்கப்பட்ட குஜராத்தையே யுத்த அரங்கமாகவும் தேர்ந்தெடுத்தார். 1930-ம்-௵ மார்ச்சு௴ 12-ஆம் தேதியன்று சாபர்மதி ஆசிரமத்திலிருந்து கால் நடையாகவே யாத்திரை செய்து, சமுத்திரக் கரையில் சுமார் நூறுமைலுக்கப்பாலுள்ள டாண்டி என்னும் கிராமத்துக்குச் சென்று உப்பு எடுப்பதாகக் காந்திஜி திட்டம் போட்டார். காந்திஜி குஜராத்தில் 'உப்பு யாத்திரை' செய்ய நிச்சயித்ததும் ஸர்தார் படேலின் பொறுப்பும் அதிகமாயிற்று.

"மகத்தானதொரு போராட்டம் வரப்போகிறது. உங்களுடைய தியாகத்தின் பலத்தில்தான் அதன் வெற்றியும் தோல்வியும் இருக்கிறது. சொத்து சுதந்தரத்தில் ஆசையுள்ளவர்கள் அதைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஆஸ்தியில் கவனம் உள்ளவர்கள் எடுத்துக்கொண்டு வெளியே போய்விடுங்கள். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம், உயிருக்குப் பயந்துகொண்டு குஜராத்தி என்று சொல்லிக்கொள்பவன் எவனும் சுயநல ஆசையுடன் ஊரைவிட்டு ஓடமாட்டான்" என்று ஸர்தார் படேல் ஒரு கூட்டத்தில் பேசினார்.

அதன் பலன் குஜராத்தில் மட்டுமல்ல, பாரத நாடு முழுவதிலும் ஏற்பட்டது. ஜனங்கள் ஆவேசத்துடன் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள். மகத்தான தியாகம் செய்து போராட்டத்தில் வெற்றி காணத் துடித்தார்கள். ஸர்தார் படேலை ராஜாங்கத் துவேஷக் குற்றஞ்சாட்டி, ராஸ் எனும் கிராமத்தில் 8-3-1935-இல் அதிகாரிகள் கைது செய்தார்கள். விசாரணை நடந்தது; ஸர்தார் மூன்று மாத சிறைத் தண்டனை ஏற்றார்.

காந்திஜி டாண்டிக்கு நடந்துசென்றார். ஒரு பிடி உப்பை எடுத்துச் சர்க்காரைத் திணரடித்தார். உடனே கைதியானார். நாடெங்கும் இயக்கம் தொடங்கிற்று. உப்பு வரியை ரத்து செய்ய வேண்டும்; இன்றேல் நாட்டில் ஒரு போராட்டம் ஏற்படும் என்று காந்திஜி கூறியபோது வைசிராய் அலட்சியமாக இருந்தார். அது விபரீதமாக வளர்ந்துவிட்டதைக் காணவே, அவர் காந்திஜியை விடுதலைசெய்து சமரஸம் பேசினார். இதன் நடுவே ஸர்தார் படேல் மூன்று தடவை வெளியே வந்து, மீண்டும் மீண்டும் சிறை சென்றார். குஜராத்தில் நடக்கும் போராட்டத்துக்குப் படேல் தான் காரணமென்று அதிகாரிகள் ஆத்திரப்பட்டார்கள். அவருடைய வீட்டைச் சோதனை போட்டார்கள். வயது முதிர்ந்த அவருடைய தாயார் சமையல் செய்துகொண்டிருக்கும்போது உள்ளே புகுந்து உலை நீரை இழுத்து அந்த அம்மையாரையும் இழுத்துத் தள்ளி ஹிம்சித்தார்கள். அவர்களுடைய ஆத்திரம் தணிந்தது. ஆனால் அந்தச் செய்திகளைக் கேட்டு மக்கள் ஆத்திரங்கொண்டு எழுந்தார்கள். போராட்டத்தின் உத்வேகம் அதிகரித்தது.



காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டதன் பலனாக, லண்டனில் நடந்த இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் காங்கிரஸ் கலந்துகொள்வது என ஏற்பாடாயிற்று. இடையிலே, இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்கவும், வட்டமேஜை மகாநாட்டுக்கு காங்கிரஸின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், காங்கிரஸ் மகாசபை கராச்சியில் கூடுவதாக ஏற்பாடாயிற்று. அந்தக் காங்கிரஸுக்குத் தலைமை வகிக்க ஸர்தார் படேல் ஏற்றவர் என்று பாரத மக்கள் தீர்மானித்தார்கள்.

மிகவும் நெருக்கடியானதோர் கட்டத்தில் காங்கிரஸ் மகாசபை கராச்சியில் கூடிற்று. காந்தி - இர்வின் ஒப்பந்தத்தினால் சத்தியாக்கிரகம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. என்றாலும் பல இடங்களில் அதிகாரிகள் ஒப்பந்தத்தை மீறி நடந்துகொண்டார்கள். கான்பூரிலும் வேறு சில நகரங்களிலும் ஹிந்து - முஸ்லிம் கலவரங்களினால் பல கோர கிருத்யங்கள் நடந்தன. பண்டித மோதிலால் நேரு நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். புரட்சி வீரர்களான பகவத்சிங், ராஜ்குரு, சுகதேவ் ஆகியவர்களைச் சர்க்கார் தூக்கிலிட்டதால் இளைஞர் உலகமே குமுறிக்கொண்டிருந்தது. நாடு முழுவதும் குமுறிக்கொண்டிருக்கும் ஓர் எரிமலையின் உச்சியில் நிற்பதுபோலிருந்தது.

"பூரண சுதந்தரந்தான் நமது லட்சியம். நான் பாரத நாட்டிலுள்ள எல்லோருடைய க்ஷேமத்துக்காகவும் பாடுபட விரும்பினாலும், வாயற்ற கோடிக்கணக்கான விவசாயிகளின் சுகவாழ்வுதான் என்னுடைய முக்கிய சிரத்தை. அஹிம்சையும் சத்தியமும் அவர்களுக்கு சமூகத்தில் ஒரு ஸ்தானத்தை

ஏற்படுத்திவிட்டன. அவர்கள் தங்களுடைய நிலைமையை உணர்ந்து தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளும் காலம் வந்துவிட்டது" என்று தமது தலைமைப் பிரசங்கத்தில் வல்லபபாய் படேல் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் சரித்திரத்திலேயே, கராச்சி காங்கிரஸ் தான் மிகவும் முக்கியமானது. அங்குதான் எல்லா மக்களும் சமஉரிமை பெற்று சுபிட்சமாக வாழவேண்டுமென்ற ஜீவாதார உரிமைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, கராச்சி காங்கிரஸ் முடிந்ததும் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ள, காங்கிரஸின் ஒரே பிரதிநிதியாகக் காந்திஜி லண்டன் சென்றார். இதன் நடுவே இர்வின் பிரபு வைஸ்ராய் பதவியிலிருந்து விலகி வெலிங்க்டன் பிரபு வைஸ்ராயாகப் பதவியேற்றார். அவர் வந்ததுமே காந்தி - இர்வின் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டு, தாங்கிரஸை நசுக்க ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டார். லண்டனில் விசேஷ பலன் ஏதும் ஏற்படவில்லை; காந்திஜி வெறுங்கையுடன் நாடு திரும்பினார். அடுத்த போராட்டம் நிச்சயம் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டதும், ஸர்தார் படேல் தேசமக்களைத் தட்டியெழுப்பித் திரட்டிவிட்டார்.

காந்திஜி இந்தியா திரும்பு முன்னரே, நேரு போன்ற தலைவர்கள் சிறை சென்றுவிட்டார்கள். ஆங்காங்கு அடக்குமுறை தாண்டவமாடிற்று. ராஷ்டிரபதி படேலும் கைதியாகிப் பாதுகாப்பில் வைக்கப்பட்டார்.

## சட்டசபைக் கட்சித்தலைவர்

இரண்டு வருஷம் சிறைவாசத்துக்குப் பின்பு 1934-ல் ஸர்தார் படேல் விடுதலையடைந்தார். அப்போது நாட்டில் சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஒரு கிளர்ச்சி மீண்டும் எழுந்தது. காந்திஜி அரசியலிலிருந்து விலகி ஹரிஜன சேவையில் தீவிரமாக ஈடுபட்டார். சட்டசபைப் பிரவேசத்தில் காந்திஜிக்கும் படேலுக்கும் நம்பிக்கை கிடையாது. ஆயினும் தோழர்களின் வற்புறுத்தலுக்கிணங்க, காங்கிரஸ், மத்திய சட்டசபைக்கு அபேக்ஷகர்களை நிறுத்தி, வெற்றியும் பெற்றது.

மாகாண சுயஆட்சி அமலுக்கு வரும்போதுதான் காங்கிரஸ் தீவிரமாக வேலைசெய்து மந்திரி சபைகளைக் கைப்பற்ற வேண்டுமென்று நிச்சயித்தது. அபேட்சகர்களைப் பொறுக்குவது முதல், ஒவ்வொன்றையும் கூர்மையாகப் பரிசீலனை செய்து வேலை நடத்தும் பொறுப்பை ஏற்கக்கூடியவர் ஸர்தார் படேல் ஒருவர்தான் என்று காங்கிரஸ் நிச்சயித்தது. ஸர்தார் 1935-இல் பார்லிமெண்டரி போர்டின் தலைமைப் பதவி ஏற்று, ஏழு மாகாணங்களில் மந்திரி சபைகளை அமைத்தார். மாகாணங்களில் பதவி ஏற்ற மந்திரிகள், சிறந்த ஊழியர்கள், தியாகிகள், அறிவாளிகள். காங்கிரஸ் மகா சபை வகுக்கும் திட்டத்தை நிறைவேற்றும் ஆசையும் ஆவலும் உள்ளவர்கள். எல்லா மாகாணங்களிலும் ஒரே மாதிரி அமைப்பும் கொள்கையும் இருக்கவும், மாகாணத்துக்கு மாகாணம் தொடர்பு இருக்கவும் 'மத்திய' பார்லிமெண்டரி

போர்டு' பெரிதும் உதவியது. ஸர்தார் படேல் ஆலோசனையாளர் என்ற முறையில் அதன் தலைமைப் பதவி ஏற்றுக்கொண்டாலுங்கூட அவரே ஏழு மாகாணங்களையும் நிர்வகித்து வந்தார் என்று சொல்வதே பொருந்தும்.

புது அரசியல் திட்டத்தின்படி மாகாணங்களில் ஓரளவு ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டுங்கூட, கவர்னர்களிடம் விசேஷ அதிகாரப் பொறுப்பு இருந்ததால், எந்த நிமிஷத்திலும் நிர்வாகத்தில் சர்க்கார் தலையிட்டு, சர்க்காரின் போக்கை மாற்றிவிடவும், மந்திரிகளை வெறும் பொம்மைகளாக்கிவிடவும் கவர்னர்களால் முடியும். ஆனால் கவர்னர்கள் தம்தம் விசேஷ அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதில்லை என்ற வாக்குறுதி கொடுத்த பின்பே மாகாணங்களின் நிர்வாகப் பொறுப்பை காங்கிரஸ் ஏற்றது. "மந்திரி பதவி யேற்று அலங்கார புருஷர்களாக சபையில் வீற்றிருக்கவோ, பட்ட கஷ்டங்களுக்குப் பதிலாக சுகம் அனுபவிக்கவோ இப்போது காங்கிரஸ் பதவி ஏற்கவில்லை. நம்முடைய சுதந்தரப் போருக்கு, மேலும் பலம் தேடவே இப்போது நாம் பொறுப்பு ஏற்கிறோம்" என்று ஸர்தார் படேல் மந்திரி சபைகளை அமைக்கும்போது குறிப்பிட்டார். மந்திரிகளும் தங்களுடைய பொறுப்பு உணர்ந்து தொண்டாற்றினார்கள். ஆனால் ஐக்கிய மாகாணத்திலும், பீஹாரிலும் மத்திய மாகாணத்திலும், ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகள் விஷமம் செய்துகொண்டுதான் இருந்தார்கள். அதற்குச் சரியான சூடு கொடுத்து, காங்கிரஸ் ஒரு தூய்மையான ஸ்தாபனம் என்பதை நிரூபித்த பெருமை ஸர்தார் படேலையே சேரும்.



பதவி ஏற்றதும், சிறையில் வாடிக் கிடக்கும் அரசியல் கைதிகள் எல்லோரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் திட்டமிட்டது. அதில் அனேகமாக வெற்றி பெற்றது என்றே கூறவேண்டும். ஆனால் ஐக்கிய மாகாணத்திலும், பீஹாரிலும் கவர்னர்கள் தங்களுடைய மந்திரிசபைகளின் உத்தேசத்தை ஏற்க மறுத்து விட்டார்கள். சிறையில் கிடந்த அந்தப் பத்துப் பதினைந்து கைதிகள் வெளியே வந்துவிட்டால் நாட்டின் அமைதிக்கே பங்கம் ஏற்பட்டுவிடும் என்று கவர்னர்கள் காரணம் கூறினார்கள். சர்க்காருடன் நேருக்கு நேர் போராடிய காங்கிரஸ் மகாசபையே சர்க்காரின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும்போது அரசியல் குழப்பம், அராஜகம் என்பதற்கெல்லாம் இடமேது? அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று மந்திரிகள் வற்புறுத்தினார்கள். கவர்னருக்கும் மந்திரி சபைக்கும் அபிப்பிராய பேதமும் தகராறும் வளர்ந்து, மந்திரி சபை ராஜிநாமாச் செய்வது வரையில் நெருக்கடி வளர்ந்து விட்டது. கடைசியில் ஸர்தார் படேலும், கவர்னர் ஜனரலும் தலையிட்டுச் சமரஸம் பேசவேண்டியதாயிற்று. மந்திரிசபைகளும் ராஜிநாமாவை 'வாபஸ்' பெற்றுக்கொண்டன.

மத்திய மாகாணத்திலோ கவர்னர் கையாண்ட முறையே வேறு விதமானது. அதனால் தேச மக்களுக்கு ஸர்தார் படேலுடைய நேர்மையையும் கண்டிப்பையும் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பமும் கிடைத்தது. காங்கிரஸ் ஊழியர்களுக்குள் இருந்த மனஸ்தாபத்தைக் கிளறிவிட்டு மித்திரபேதம் செய்து

வேடிக்கை பார்த்தார் அந்த மாகாணக் கவர்னர். மத்திய மாகாண சட்டசபையிலே, மகாராஷ்டிரம், மகாகோசலம் ஆகிய பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள், தனித்தனி கோஷ்டியாகவே இருந்தார்கள். காங்கிரஸ் மகா சபையின் பொதுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அவர்கள் ஒத்துழைத்தாலும், தம்தம் பிரதேசவாரி நலன்களைக் கவனிப்பதில் அவர்கள் சிறிது அதிக உற்சாகமே காட்டிவந்தார்கள். இதனால் அடிக்கடி, போட்டியும் அபிப்பிராயபேதமும் கிளம்புவதுண்டு.

மந்திரி சபையின் தலைவரான டாக்டர் காரே ஒரு மகாராஷ்டிரர். அவர் எல்லோருடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தாலும் நிர்வாகப் பொறுப்பில் சிறிது எதேச்சையாக நடந்து கொண்டதால், வெகு சீக்கிரம் தம்முடைய சகாக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டார். இதனால் ஒரு அரசியல் நெருக்கடியே ஏற்பட்டது. அவருடைய போக்கு காங்கிரஸின் கொள்கைகளுக்கே விரோதமானது என்பது சட்டசபை அங்கத்தினர்களுடைய அபிப்பிராயம். மத்திய மாகாணத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை மிகக் கவலையுடன் ராஷ்டிரபதியும், காந்திஜியும், ஸர்தார் படேலும் கவனித்து வந்தார்கள். டாக்டர் காரேயின் போக்கு கண்டிக்கத் தக்கதுதான் என்பது அவர்களுக்குத் தெரிந்துங்கூட அவசரப்பட்டு அவர்கள் ஏதும் செய்துவிடவில்லை. இதன் நடுவே டாக்டர் காரே தம்முடைய மந்திரி சபையைக் கலைத்து, தம்முடன் ஒத்துழைக்கக்கூடிய சிலரைக் கொண்டு ஒரு புது மந்திரிசபை அமைக்க முயன்றார். ஆனால் அது



அவ்வளவு சுலபமாக இல்லை. ஆகவே அவர் கவர்னருடன் கூடிப் பேசி, தமக்குச் சாதகமாக இல்லாத மகாகோசலப் பிரதிநிதிகளான பண்டிட் சுக்லா மிஸ்ரா ஆகியவர்களை 'டிஸ்மிஸ்' செய்யுமாறு கவர்னரைக் கேட்டுக்கொண்டார். காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்படுவதைக் கேட்டு மகிழ்ச்சி அடையாத வெள்ளையரும் உண்டோ! டாக்டர் காரேக்கு கவர்னர் மிகவும் சாதகமாக இருந்தார். மந்திரி சபையைக் கலைத்து புது மந்திரி சபை அமைக்குமாறு டாக்டர் காரேயை கவர்னர் கேட்டுக்கொண்டார்.

நிலைமை விபரீதமாயிற்று. தலைவர்கள் நிலைமையைச் சமாளிக்கத் தலையிட வேண்டியதாயிற்று. டாக்டர் காரேயுடன் வாதித்து, அவர் தம்முடைய தவறைத் திருத்திக்கொள்ள தலைவர்கள் சந்தர்ப்பம் அளித்தார்கள். ஆனால் டாக்டர் காரே தாம் செய்ததே சரியென்று பிடிவாதமாக இருந்தார். கடைசியில் ஸர்தார் படேல், பார்லிமெண்டரி போர்டின் தலைவர் என்ற முறையில் அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டார். டாக்டர் காரே மந்திரிசபையிலிருந்து மட்டுமல்லாமல் அரசியலிலிருந்தே விலக வேண்டியதாயிற்று.

அதேபோல, பம்பாயிலும் நாரிமன் என்ற பிரபல காங்கிரஸ் ஊழியர், கட்சிக்கு விரோதமான வேலையில் ஈடுபட்டார். அவர்மீதும் ஸர்தார் படேல் நடவடிக்கை எடுத்துக்கொண்டார். 'ஸர்தார் ஒரு சர்வாதிகாரி, அவருடைய போக்கு எதேச்சாதிகாரமானது' என்றெல்லாம் ஒரு சிலர் கூக்குரலிட்டார்கள். டாக்டர் காரேயும், நாரிமனும் பொதுஜன அன்பைப் பெற்ற

வர்கள். படேலும், இந்திய மக்களின் அபிமானத்தைப் பெற்றவர். படேலுடைய நேர்மைக் குணத்தை காந்திஜி நன்றாயறிவார். ஆனாலும், இந்த விஷயத்தில் அவர் யாரைக் குறை கூறுவது என்று திகைத்தார். உண்மைக்குப் புறம்பான எதையும் காந்திஜியினால் ஏற்றுக்கொள்ள முடியாது. கடைசியில் அவருடைய தூண்டுதலால் ஸ்ரீ பகதூர்ஜியின் தலைமையில் ஒரு விசாரணைக் கமிட்டி நியமிக்கப்பட்டது. 'ஸர்தார் படேல் எடுத்துக் கொண்ட நடவடிக்கை நேர்மையானது, நியாயமானது. காருண்யமானது' என்று அந்தக் கமிட்டி தீர்ப்புக் கூறியது. அப்போதுதான் படேலின் கண்டிப்பைப் பொதுமக்கள் அறிந்துகொள்ள முடிந்தது. எதிராளியின் பொதுஜன பலத்தையோ, சக ஊழியர் என்ற சலுகையையோ எடுத்துக்கொண்டு தவறு செய்தவர்களை அவர் கண்டிக்காமல் விட்டுவிடுவதில்லை. 'நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று தீர்ப்புக்கூறி வாழ்ந்த நக்கீரனைப்போல, காங்கிரஸ் மகாசபையின் கீரனாக படேல் இருக்கிறார். அதனால் ஒரு சிலர் அவரை இரும்பு மனம் படைத்தவர், பிடிவாதக்காரர் என்றெல்லாம் குற்றம் சாட்டுவதுண்டு. நாட்டுக்கு நலன் என்று தாம் எண்ணுவதைச் செய்து காட்டுவதில் படேல் பிடிவாதம் காட்டுகிறார். அதற்காக அவர் தம்முடைய சகாக்களுடன் வாதாடுகிறார். ஆனால் அவர் என்றுமே காந்திஜியின் அபிப்பிராயத்துக்கு விரோதமாகச் சென்றதில்லை 'அவரை நான் கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறேன் என்று சொல்வதற்கில்லை. அவருடைய போக்குச் சில சமயம் எனக்குப் பிடிப்பதில்லை. ஆனால் அவர் தீர்க்க திருஷ்டியுள்ளவர்.



இந்திய மக்களுடைய மனசையும் போக்கையும் நன்றாயுணர்ந்தவர். அவரால்தான் இந்த நாட்டின் விடுதலையைச் சாதிக்க முடியும். அவருடைய தலைமையில்தான் நமக்கு விமோசனம் உண்டு' என்று படேல் காந்திஜியைப்பற்றிக் குறிப்பிடுவதுண்டு.

## சமஸ்தானப் போராட்டம்

பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண சுயாட்சி ஏற்பட்டது சமஸ்தானங்களிலுள்ள மக்களுக்கு கண் விழிப்பூட்டியது. ஒரு சில சமஸ்தானங்களைத் தவிர பெரும்பான்மையான சமஸ்தானங்களில் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் சிரத்தை கொள்ளவேயில்லை. காங்கிரஸ் ஆட்சியில்தான் மக்களுக்குக் கதிமோட்சம் ஏற்படும் என்பதைத் தெரிந்துகொண்டதும் 1937-38-ஆம் ஆண்டுகளில் பல சமஸ்தானங்களில் மக்கள் சுதந்தரக் கிளர்ச்சி செய்தார்கள். அதன் எதிரொலி கத்தியவாட் சமஸ்தானங்களிலும் கேட்டது. அந்தச் சமயம் கத்தியவாட் ராஜகீய பரிஷத்தின் தலைவராக ஸர்தார் படேல் இருந்தார். சமஸ்தான மக்களின் கிளர்ச்சி நியாயமானது. சமஸ்தானங்களில் சுயாட்சி ஏற்படவேண்டும் என்பதே அவர் அவர்.

கத்தியவாட்டில் சிறிது முற்போக்கான சமஸ்தானம் ராஜ்கோட். அதுதான் காந்திஜி வளர்ந்த இடம். காந்திஜியின் தகப்பனார் அங்கு திவானாக இருந்தவர். ராஜ்கோட் மக்களின் எழுச்சியை, அப்போது திவானாக இருந்த காடெல் என்ற வெள்ளை அதிகாரியால் சகிக்க முடியவில்லை. ஜன எழுச்சியை அடக்கி மக்களை மருளச் செய்ய அடக்குமுறையைக் கையாண்

டார் அவர். அதை ஆமோதித்தது டில்லி சர்க்காரின் அரசியல் இலாகா. எதேச்சாதிகாரத்தின் எல்லையைத் தொடச் சமஸ்தானாதிபதி தயங்கிய போது அவருடைய விருப்பத்திற்கு மாறாக அங்குள்ள பிரிட்டிஷ் ரெஸிடெண்டின் தயவுகொண்டு, அந்த வெள்ளைத் திவான் எதேச்சாதிகாரம் நடத்தத் தொடங்கினார். மக்களின் கட்சியை எடுத்துப்பேச, ஸர்தார் படேல் ராஜ்கோட்டிற்குச் சென்றார். சமஸ்தானாதிபதியைக் கண்டு பேசி ஒரு சமரசம் ஏற்படுத்தினார். ஆனால் திவான் அதை மதித்து நடக்கவில்லை. ஆகவே திவானை நீக்கிவிட சமஸ்தானாதிபதி விரும்பினார். தமது பிரதிநிதியை விரட்டிவிட ஏகாதிபத்தியம் ஒரு சிறு சமஸ்தானாதிபதிக்கு இடந்தருமா? பிரிட்டிஷ் ரெஸிடெண்டு சமஸ்தானாதிபதியை மிரட்டினார். டில்லி அரசாங்கம் குறுக்கிட்டது. நிலைமை முற்றிவிடவே, காந்திஜியும் மக்களின் சார்பாக, ராஜ்கோட் விவகாரத்தில் தலையிட வேண்டியதாயிற்று. அதன் பிறகு ராஜ்கோட் விவகாரம் அகில இந்தியப் பிரச்னையாக மாறிற்று. ஸர்தாரின் ஒப்பந்தத்தை நிலை நிறுத்தக் காந்திஜி உபவாசம் ஏற்கவேண்டியதாயிற்று. கடைசியில் சர்க்கார் அடிபணிந்தது.

சமஷ்டி சர்க்காரில் சமஸ்தானங்கள் சேருவது பற்றிய பிரச்னை பலமாக எழுந்தது. அது சம்பந்தமாகப் படேல் 1938-ஆம் ௵ மார்ச்சு ௴ ஒரு கூட்டத்தில் பேசியபோது பின்வருமாறு குறிப்பிட்டார்:

"சமஸ்தானங்களில் யதேச்சாதிகாரந்தான் இருக்கிறது. அங்குள்ள மக்கள் பிரஜா உரிமையின்றி வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தக்க பிரதிநிதித்வம் அளிக்காமல் சமஷ்டி சர்க்காரில் சமஸ்தானங்கள் சேர விரும்பினால், காங்கிரஸ் அந்தச் சர்க்காரையே பகிஷ்கரிக்கும். சமஸ்தான மக்களின் நலனைப்பற்றியே எண்ணாமல் பிரிட்டிஷ் சர்க்காரும் சமஸ்தானங்களும் ஒப்பந்தங்கள் பேசுகின்றன. ஜனங்களின் சுகவாழ்விலும் அவர்களுடைய உரிமையிலுந்தான் காங்கிரஸுக்குச் சிரத்தை உண்டு. சமஸ்தானாதிபதிகளின் ஆட்சியையே நாம் மாற்றி அமைக்கவேண்டும். ஜனங்களுடைய ஆதரவுதான் தங்களுடைய பலம் என்பதைத் தெரிந்துகொள்ளாமல் சில சமஸ்தானாதிபதிகள் பேசுகிறார்கள். ஜனங்களை மீறி அவர்கள் ஏதும் செய்யமுடியாது."



## ஆகஸ்டுப் புரட்சி

இதன் நடுவே ஐரோப்பாவில் பல அரசியல் நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ஜர்மனி பல நாடுகளை ஆக்ரமித்துப் பிடித்துக்கொண்டது. பிரிட்டனும் ஐரோப்பிய யுத்தத்தில் கலந்துகொண்டது. 1939-௵ இந்தியாவையும் பிரிட்டன் ஐரோப்பியப் போரில் இழுத்துவிட்டது. இந்தியாவிலும் போர்முரசு ஒலித்தது. அப்போதுதான் இந்திய சர்க்காரின் யுத்த லட்சியத்தைச் சொல்லும்படிக் காங்கிரஸ் கேட்டது. சர்க்காரின் போக்கும் ஏற்பாடுகளும் காங்கிரஸுக்குப் பிடிக்கவில்லை. சில மாகாணங்களில் மந்திரி சபையின் அநுமதியின்றியே கவர்னர்கள் யுத்த முஸ்தீப்புக்கு உதவிசெய்ய முற்பட்டார்கள். காங்கிரஸ் – சர்க்கார் பிளவு ஏற்பட்டு எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ்

மந்திரி சபைகள் ராஜிநாமாச் செய்து வெளியேறின. அதன்பின்பு காந்திஜி நடத்திய தனிப்பட்ட நபர் சத்தியாக்கிரகத்தில் ஸர்தார் படேல் 1940-ஆம் ஆண்டு நவம்பரில் கைது செய்யப்பட்டுச் சிறை சென்றார். சிறையில் அவர் உடல் நலம் கெடவே, 1941-இல் வைத்திய சிகிச்சைக்காக அவர் விடுதலை செய்யப்பட்டார்.

ஆகஸ்டுப் புரட்சி தேச சரித்திரத்தில் ஓர் அற்புத நிகழ்ச்சி. 1942ஆம் ஆண்டில் காந்திஜியின் ஆலோசனைக்கிணங்க, 'பிரிட்டிஷாரே, இந்தியாவைவிட்டு வெளியேறுங்கள்' என்று கர்ஜித்தது காங்கிரஸ். 1942-ஆம் வருஷம் ஆகஸ்டு மீ காங்கிரஸ் காரியக் கமிட்டியினர் அதை ஒரு தீர்மானமாக்கி பம்பாயில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் முன்பு சமர்ப்பித்தனர். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் ஸர்தார் படேல் பேசியதன் சாரம் இதுதான்: "கிழக்கே படையெடுத்துவரும் எதிரியைச்சமாளித்துவிட பிரிட்டனும் அமெரிக்காவும் எண்ணுகின்றன. நாற்பது கோடி இந்தியர்களுடைய ஒத்துழைப்பின்றி இந்திய மண்ணில் எதிரியை முறியடிக்க அவர்கள் எண்ணுவது முட்டாள்தனமாகும். இந்த யுத்தம் ஜனநாயகப் போராட்டம் என்பதையும் சுதந்தரப் போராட்டம் என்பதையும் ஜனங்கள் உணர வேண்டும். பிரசாரமூலம் ஜனங்களைத் தூண்டி ஏகாதிபத்திய நலன்களைச் சாதித்துக் கொள்வது முடியாத காரியம். இப்போது நடக்கும் யுத்தத்தில் இந்தியாவைப் பிரிட்டன் இழுத்துவிட்டு மூன்று வருஷங்களாகிறது. இந்தச் சமயத்தில் நெருக்கடி ஒன்றும் ஏற்படுத்தக் கூடாது என்று எண்ணிக் காங்



கிரஸ் ஒதுங்கி நின்றது. ஆனால் காங்கிரஸின் நல்லெண்ணத்தைப் பிரிட்டன் உணரவில்லை. இப்போது எதிரி நமது தலைவாசலில் வந்துவிட்டான். இனிச் சும்மாயிருந்தால் ஆபத்துத்தான். நம்முடைய கொள்கையைச் சொல்லித் தற்காப்புச் செய்துகொள்ள முனைவதுதான் புத்திசாலித்தனமான செய்கை......."

தீர்மானம் நிறைவேறியது. ஆனால் அடுத்தபடியாக என்ன செய்வது என்பதுபற்றித் தலைவர்கள் ஆலோசனை செய்துகொண்டிருக்கும்போதே சர்க்கார் எல்லோரையும் கைதுசெய்து, 'கண்காணாத' இடத்துக்கு அழைத்துச் சென்றது. சில மாதங்கள்வரையில் தலைவர்கள் எந்தச் சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார்கள் என்றே தெரியாமல் இருந்தது. தலைவர்களுடன் அவரவர் குடும்பத்தார் மட்டும் கடிதப்போக்கு வைத்துக்கொள்ள முடிந்தது. அந்தக் கடிதங்களை பம்பாய் சர்க்கார் மிகவும் ஜாக்கிரதையாகப் பட்டுவாடா செய்து வந்தார்கள். தலைவர்கள் எழுதும் கடிதங்களை பம்பாயில் பிரித்து வேறு கவரில் அடைத்து, அவற்றை விலாசதாருக்கு அனுப்பினார்கள். கடைசியில் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் எல்லோரும். ஆமத்நகர் கோட்டையில் அடைபட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்துவிட்டது.

காந்திஜியும் அவருடைய கோஷ்டியில் ஒரு சிலரும் புனாவிலுள்ள ஆகாகான் மாளிகையில் காவலில் வைக்கப்பட்டார்கள். பம்பாயில் நடந்த ஆகஸ்டு மகாநாட்டுக்குப் பிறகு நாடெங்கும் பலத்த கிளர்ச்சி நடந்தது. அஹிம்ஸா வழியில் பல ஆண்டுகள் கட்டுப்

பாடான வாழ்க்கை நடத்திய பல தேசபக்தர்கள்கூட, மனம் கலங்கிவிட்டார்கள். சிலர் இரத்தப்புரட்சியில் ஈடுபட்டார்கள். அடக்குமுறை என்ற ஒரே ஆயுதத்தினால் சர்க்காரும் கண்மூடித்தனமாக நடந்து, நாட்டில் ஒவ்வொரு அடி நிலத்திலும் தேசபக்தர்களுடைய இரத்தம் தெறிக்கச் செய்தார்கள். ஆனாலும் கடைசியில் ஆயுதபலம் தோற்றது. மக்களுடைய உறுதி தளரவில்லை. நாற்பத்துநான்கு மாத அடக்குமுறை ஆட்சிக்குப் பிறகு, சர்க்கார் இந்திய மக்களுடன் சமரஸம் பேசிக்கொள்வதுதான் சிறந்த மார்க்கம் என்ற முடிவுக்கு வந்தார்கள். அதன் பலனைத்தான் சிம்லாவில் அரசியல் தலைவர்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளும் 1945-ஆம் ஆண்டு மத்தியில் கூடினார்கள்.

## புது சகாப்தம்

இந்தியாவின் சுதந்தரத்தை லக்ஷியமாகக் கொண்ட காங்கிரஸ் தலைவர்களுடன் சமரஸம் பேசி, இந்தியாவுக்கு ஒரு புது அரசியல் திட்டத்தை வழங்க வேண்டும் என்றுதான் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் எண்ணினார்கள். ஆனால் மனப்பூர்வமாகவும் பெருந்தன்மையுடனும் நடந்துகொள்ள அவர்களுடைய ஏகாதிபத்தியப் பண்பு இடம் கொடுக்கவில்லை. சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, பிற்போக்காளர்களையும் தேச விடுதலையில் நம்பிக்கை இல்லாதவர்களையும் மகாநாட்டில் கலந்துகொள்ள அரசாங்கம் அழைப்பு அனுப்பியது. காங்கிரஸ் தலைவர்கள் சகிப்புத்தன்மையால் எவ்வளவோ விட்டுக்கொடுத்தும், ஜின்னா



சாகேபின் பிடிவாதத்தினால் மகாநாடு தோல்வியுற்றது. மகாநாடு கூடும்போது படேல் பிரிட்டிஷாருக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தார். அதன் சாராம்சம் இதுதான்: "காங்கிரஸ் ஸ்தாபனம் ஜாதி மத பேதமின்றி நாட்டின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஸ்தாபனம். அதில் கிறிஸ்தவர், முஸ்லிம், சீக்கியர் ஆகிய பல மதத்தினர் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். தேச விடுதலைக்காகவோ, புது அரசியல் சீர்திருத்தம் வழங்கவோ, இந்திய மக்களுடன் சமரஸம் பேச பிரிட்டிஷ் சர்க்கார் விரும்பினால், காங்கிரஸுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்தால் போதும். தியாகம் என்றால் என்னவென்று தெரியாத ஒரு பிற்போக்குக் கும்பலை சிறுபான்மை வகுப்புகளின் பிரதிநிதிகள் என்று காட்டி அவர்களுடன் சமமாக அமர்ந்து ராஜிபேச எந்தத் தேச பக்தனும் விரும்பமாட்டான்." இதை ஆரம்பத்திலேயே தலைவர்கள் தெளிவாக பிரிட்டிஷ் சர்க்காருக்கு எடுத்துக் காட்டியிருந்தால் நாட்டில் விபரீதம் ஏதும் விளைந்திருக்காது. ஜனநாயக தத்துவத்தில் பெரிதும் நம்பிக்கைகொண்ட தலைவர்களும், எதிரியின் மனோபாவத்தை மதித்து நடக்க வேண்டும் என்ற அஹிம்ஸா மூர்த்தியான காந்திஜியும் சர்க்காரின் ராஜிப்பேச்சுக்கு இணங்கினார்கள். ஆனால் அவர்களுடைய பெருந்தன்மையை ஏகாதிபத்தியமும், அதன் தாஸர்களும் புரிந்துகொள்ளவில்லை. போராடிப் போராடிக் காங்கிரஸ்காரர்கள் அலுத்துப் போய்விட்டார்கள். அரசியல் சீர்திருத்தம் என்று ஒரு செப்படிவித்தை செய்து அவர்களை ஏமாற்றிவிடலாம் என்றே சர்ச்சில் கோஷ்டியினர் எண்ணினார்கள். இந்திய மக்களுக்குச் 'சுயாட்சி

சாஸனம்' வழங்கி, சர்வதேச அரங்கத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கௌரவத்தையும் செல்வாக்கையும் அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே அவர்களுடைய ஆசை. ஆனால் தேசத் தலைவர்கள் கண்ணியமான சமரஸத்தையே விரும்பினார்கள். பிரிட்டிஷாரிடமிருந்து சௌஜன்யமாகப் பிரிந்து வாழ விரும்பினார்கள். பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளோ, 'ஒன்று தாம் ஆளவேண்டும். அல்லது நாட்டில் பிளவும் குழப்பமும் செய்துவிட்டு வெளியேற வேண்டும்' என்றே எண்ணினார்கள். அதற்கான சூழ்ச்சிகளும் செய்தார்கள். அவர்களுக்கு 'ஒத்து ஊத' ஒரு சதிகாரக் கும்பலும் இங்கே இருந்தது.

போராடி ஜயிப்பதிலேயே நம்பிக்கையுள்ள படேல், ஜவாஹர் போன்ற வீரர்களுக்கு ராஜிப் பேச்சில் நம்பிக்கை கிடையாது. எனினும் காந்திஜியின் ஆணைக்கிணங்கி அவர்கள் மௌனமாக இருந்தார்கள். "1942 ஆம் ௵ இந்தியாவை விட்டுப் பிரிட்டிஷாரை வெளியேறச் சொன்னோம். இப்போது, நாட்டிலும், சர்வதேச அரங்கத்திலும் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் பிரிட்டிஷார் ஆசியாவை விட்டே வெளியேறி விடவேண்டும் என்றே சொல்லவேண்டியிருக்கிறது" என்று ஒரு கூட்டத்தில் ஸர்தார் படேல் பேசினார். அதைக் கேட்டு ஏகாதிபத்தியதாசர்கள் சீறினார்கள். சோர்வடைந்திருந்த இந்திய மக்களோ தலைவர்களுடைய ஆணையேற்றுப் போரில் கலந்துகொள்ளத் துடித்து எழுந்தார்கள்.

## இடைக்கால சர்க்கார்

இதன் நடுவே பிரிட்டிஷ் அரசியலிலும் மாறுதல் ஏற்பட்டது. யுத்த காலத்தில் பிரிட்டிஷ் மக்களுடைய அன்புக்கும், மரியாதைக்கும் பாத்திரமாக இருந்த சர்ச்சில் அடுத்துவந்த தேர்தலில் படுதோல்வியடைந்தான். அவனுடைய கட்சியினர் செல்வாக்குக் குறைந்து நின்றார்கள். பெருவாரியான வோட்டுகளைப் பெற்று, சர்க்காரை நடத்தப் பதவி ஏற்ற தொழிற் கட்சியினர், பிரிட்டிஷ் சர்க்கார் சுமுகமாக நடக்க வேண்டுமென்றால், முதல்முதலாக இந்தியாவுடன் ஒரு கண்ணியமான ஒப்பந்தம் செய்துகொள்வது அவசியம் என்பதைக் கண்டார்கள். தொழிற்கட்சியினருக்கு ஆரம்பகாலத்திலிருந்தே இந்தியப் பிரச்னையில் அனுதாபம் உண்டு. ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்தே பிரிந்து, இந்தியா போய்விட வேண்டும் என்பதை அவர்கள் ஆதரிக்கவில்லை. தொழிற் கட்சியின் நல்லெண்ணத்தைத் தெரிவிக்கும் முறையில் 1946-ஆம் ௵ ஆரம்பத்தில், பார்லிமெண்டரி அங்கத்தினர் சிலர் இந்தியாவுக்கு வந்து பல்வேறு அரசியல் தலைவர்களைக் கண்டு பேசினார்கள். அவர்கள் பிரிட்டிஷ் சர்க்காரின் அதிகார பூர்வமான பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும் தேச மக்களின் மனோபாவத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஆலோசனை கூறும் நிலைமையிலிருந்தார்கள்.

பார்லிமெண்டரி தூதுகோஷ்டி இங்கிலாந்து திரும்பிய சில நாட்களுக்கெல்லாம் பிரிட்டிஷ் பிரதம மந்திரி இந்திய மக்களுடன் சமரஸம் பேச சர்க்காரின்

சார்பாக ஸர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஸர் அலெக்ஸாண்டர், பெதிக்லாரென்ஸ் பிரபு ஆகியவர்களடங்கிய மந்திரி சபை தூது கோஷ்டியை இந்தியாவுக்கு அனுப்பப்போவதாக பார்லிமெண்டில் பேசினார். பெதிக் லாரென்ஸ் பிரபு இந்திய மந்திரி; மற்ற இருவர்களும் பிரிட்டிஷ் மந்திரி சபை அங்கத்தினர்கள். அவர்களும்கூட காங்கிரஸ் தலைவர்களுடன் முஸ்லிம் லீக் தலைவர்களையும் கூப்பிட்டுப் பேசினார்கள். காங்கிரஸ்தான் இந்தியாவின் ஏகப் பிரதிநிதி என்று ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை. ஆனால் மீண்டும் ஒரு முறை சூழ்ச்சிக்கு ஆளாகி ராஜிப்பேச்சில் தோல்வியுற காங்கிரஸ் தலைவர்கள் தயாராக இல்லை. முஸ்லிம் லீக் தலைவர்களுடன் சமமாக அமர்ந்து ராஜிபேசி ஓர் இடைக்கால சர்க்காரை அமைக்க ஒப்புக்கொண்டாலும், தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்தவும் அவர்கள் தவறவில்லை. ராஜி ஏற்பட்டுவிடும் என்ற நிச்சயம் ஏற்பட்டதும், ஜின்னா சாகேப் மீண்டும் பிணங்கிக்கொண்டார். தேசத்தில் நான்கில் ஒருபங்குக்கும் குறைவாக உள்ள முஸ்லிம்களின் பிரதிநிதிகளுக்குச் சர்க்காரில் பாதி ஸ்தானம் வேண்டும் என்று சலுகை கோரினார். காங்கிரஸ் எது சொன்னாலும், நியாய வரம்பின்றி எதிர்க்கட்சி பேசிக்கொண்டேயிருந்தார். மந்திரி சபை தூதுக் கோஷ்டியின் சமரஸ முயற்சியும் பலனற்றுவிடும் என்றே தோன்றிற்று. இதன் நடுவே, காங்கிரஸின் செல்வாக்கு தினே தினே வளர்ந்துகொண்டு வருவதைக் கண்ட ஜின்னா சாகேப் நாட்டில் அராஜகம் விளைவித்தாவது தன்னுடைய கட்சியை ஸ்தாபிக்க நிச்சயித்துக்கொண்டார். சமரஸப் பேச்சு உருவாகி



ஓர் இடைக்கால சர்க்கார் ஏற்பட்டுவிடும் என்றிருக்கும் தறுவாயில், 1946-ஆம் ஆகஸ்டு மீ 16உயன்று முஸ்லிம்கள், நாடெங்கும், 'அரசியல் மத விடுதலை கோரி நேரடி நடவடிக்கை' தினமாகக் கொண்டாடவேண்டுமென்று ஓர் அறிக்கை விடுத்தார். அன்று முஸ்லிம்கள் என்ன செய்யவேண்டும் என்று விளக்கமாக ஏதும் அவர் அறிக்கையில் சொல்லவில்லை. ஆனால் அவருடைய சிஷ்யர்கள் விபரீதமானதொரு வியாக்யானத்தை அதற்குக் கற்பனை செய்துகொண்டார்கள். அதன் பலனாக, அன்று கல்கத்தா நகரில் தேச சரித்திரத்திலேயே கண்டிராததொரு வகுப்புக் கலகம் ஏற்பட்டது. ஹிந்துக்களும் முஸ்லீம்களும் நேற்றுவரையில் சௌஜன்யமாக வாழ்ந்த வாழ்க்கையை மறந்து, வெறிபிடித்து ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு மாண்டார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் வீடிழந்து, சொத்திழந்து திக்கற்றுப் போனார்கள்; நூற்றுக்கணக்கான பெண்கள் குண்டர்களின் அட்டூழியங்களுக்கு ஆளாகிக் கற்பு இழந்தார்கள்; லக்ஷக் கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள சொத்துக்கள் தீக்கிரையாயின.

முஸ்லிம் லீகர்க்ளின் தேசத் துரோகமான செய்கைகள் ஒருபுறமிருக்க, காங்கிரஸ் தலைவர்கள் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுடன் மனம் விட்டுப் பேசியதின் பயனாக ஒரு சமரஸம் ஏற்பட்டது. காங்கிரஸ் இடைக்கால சர்க்காரை அமைக்க ஒப்புக்கொண்டது. ஆனால் லீகர்கள் மீண்டும் முரண்டிக்கொண்டார்கள். போபால் நவாப் போன்றவர்கள் காங்கிரஸுக்கும் லீக்குக்கும் சமரஸம் செய்துவைக்க முயன்றதும் பலன் அளிக்கவில்லை. ஜவாஹர்லால், 1946 ௵ ஆகஸ்டு

மாத முடிவில் வைசிராயைச் சந்தித்தபோது, லீகர்கள் மந்திரி சபையில் சேருவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கும் முறையில் ஒரு தற்காலிக சர்க்காரை அமைக்க ஒப்புக்கொண்டார். அதன் பலனாக செப்டம்பர் மாத முதல்வாரத்தில் இடைக்காலமந்திரிசபை ஏற்பட்டது.

இந்த மந்திரிசபை சர்வ அதிகாரமும் பெற்று, வைசிராயின் தலைமையில் வேலை செய்யும் என்றும் இந்தச் சபையின் உபதலைவராக ஜவாஹர் இருப்பார் என்றும் பிரிட்டிஷ் சர்க்கார் பிரகடனப்படுத்திற்று. இதைக் கண்டு லீகர்கள் பிரமித்தார்கள். தாங்கள் தவறு செய்துவிட்டதை உணர்ந்து வயிறு எரிந்தார்கள். ஜின்னா சாகேப் மீண்டும் வைசிராயைப் பேட்டி கண்டார். இடைக்கால மந்திரி சபை வைசிராயின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட ஒரு பொம்மை சர்க்காராக இருக்கும் என்றே அவர் எண்ணினார். ஆனால் பூரண அதிகாரம் பெற்ற நிர்வாக சபை என்று தெரிந்ததும், காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கை அவர் கற்பனை செய்து கொண்டு பார்த்தார்; தாங்களும் சபையில் பங்கெடுத்துக்கொள்ள நிச்சயித்தார். உடனே, மந்திரிசபைத் தூதுகோஷ்டியின் திட்டத்தை லீக் பூரணமாக நிராகரித்தாலும், இப்போதுள்ள சந்தர்ப்பத்தில், இடைக்கால மந்திரி சபையில் லீகர்கள் கலந்துகொள்ளலாம் என்றும், இரண்டாவது பகுதியான அரசியல் நிர்ணயசபை ஷரத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றும் கூறிக்கொண்டு, மந்திரி சபையில் இடம் பெற ஜின்னா சாகேப் வைசிராயிடம் காவடி எடுத்தார். லீகர்களுக்கு எவ்வளவு சலுகை வேண்டுமோ அவ்வளவும் கொடுத்து காங்கிரஸைத் திணரடிக்க வேண்டும்



என்பதே சர்ச்சில் கோஷ்டியைச் சேர்ந்த வைசிராய் வேவலின் எண்ணமும். ஜின்னா சாகேபின் ஆசைக்கு அவர் இணங்கியதுடன் லீக் சார்பாக மந்திரிசபைத் தலைவரான ஜவாஹரிடமும் ராஜி பேசினார். நேர்மையான வழியில் எப்போதும் நம்பிக்கையுள்ளவர்கள் நம்முடைய தலைவர்கள். லீகர்களுடைய விஷமத்தனத்தையும் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் பித்தலாட்டங்களையும் அவர்கள் தெரிந்துகொள்ளாமல் இல்லை. இருந்தாலும் லீகர்களை மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள அவர்கள் இணங்கினார்கள். அக்டோபர் மாத மத்தியில், அதாவது இடைக்கால மந்திரி சபை ஏற்பட்டுச் சுமார் ஒன்றரை மாதத்துக்குப் பிறகு லீகர்கள் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். உள்ளே நுழைந்ததுமே, முட்டுக்கட்டை போடவேண்டும் என்ற எண்ணம் லீகர்களுக்கு. முதன் முதலாக, நிதி, வெளிநாட்டு இலாகா, போக்குவரத்து, உள்நாட்டு நிர்வாகம் போன்ற முக்கிய இலாக்காக்களைத் தங்கள் வசம் கொடுத்துவிடவேண்டும் என்றும், பெரும்பான்மையான மக்களின் பிரதிநிதிகளான காங்கிரஸ்காரர்களிடம் அவை இருந்தால் சிறுபான்மை வகுப்பினர் நிர்ப்பயமாகவும் அமைதியாகவும், இந்தியாவில் வாழமுடியாது என்று வம்புசெய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுடைய கோரிக்கைக்கு ஒத்து ஊத வைசிராயும் ஆரம்பித்தார். காங்கிரஸ் தலைவர்களுடைய பொறுமை எல்லைமீறிப் போய்விட்டது. ஆனாலும் அவர்கள் எதிரிக்கு விட்டுக்கொடுத்து நல்வழிப்படுத்தும் கொள்கையை விடவில்லை. நிதி இலாகாவையும், போக்குவரத்து இலாகாவையும் லீகர்களுக்குத் தர இசைந்தார்கள். வெளிநாட்டு இலாகா

ஜவாஹரிடமிருந்தது. உள்நாட்டு நிர்வாகம் ஸர்தார் படேலிடமிருந்தது. இவர்களிடமிருந்தும் இந்த இலாக்காக்களைப் பறித்துவிடவே ஜின்னாசாகேப் சூழ்ச்சி செய்தார். ஜனநாயகப் பண்பில் தேறித்திளைத்த ஜவாஹரும் படேலும் ஒரு சில மக்களுக்குத் துரோகம் செய்வார்கள் என்று யாராவது சந்தேகிக்க முடியுமா! இவர்கள் சிறுபான்மையினரைப் பாதுகாக்காவிட்டால், வகுப்பு வெறிகொண்ட ஜின்னா போன்றவர்கள் நேர்மையாக நடந்துகொள்வார்கள் என்று எப்படி நிச்சயம் சொல்வது? தவிர லீகர்கள் மேலும் மேலும் சலுகைகள் கோரிக்கொண்டிருப்பதை தலைவர்கள் விரும்பவில்லை. இந்த இலாகாக்களை லீகர்களுக்கு மாற்ற முடியாது என்றும், வைசிராய் வற்புறுத்தினால், மந்திரி சபையிலிருந்தே காங்கிரஸ் வெளியேறிவிடச் சித்தமாக இருப்பதாகவும் ஸ்பஷ்டமாகத் தெரிவித்துவிட்டார்கள். வாயை மூடிக்கொண்டு லீகர்கள் பதவி ஏற்றார்கள்.

மந்திரி சபையின் ஏகோபித்த முடிவுகளுக்கு தாங்கள் பொறுப்பேற்க முடியாது என்றொரு ஷரத்தைப் போட்டுக்கொண்டே லீகர்கள் டில்லிக்குள் வந்தார்கள். பதவி ஏற்ற பின்பும், பீஹாரிலும் வங்காளத்திலும் பாஞ்சாலத்திலும், மக்களிடையே அவர்கள் மதவெறி யூட்டும் துவேஷப்பிரசாரம் செய்துகொண்டேதான் இருந்தார்கள் நேரடி நடவடிக்கை தினத்தன்று நடந்த கல்கத்தாப் படுகொலைக்கு எதிரொலியாக பீஹாரில் வகுப்புக்கலகம் எழுந்தது. அதையொட்டி நவகாளியில், கொலை, கொள்ளி, மதமாற்றம், கற்பழித்தல் போன்ற பல அட்டூழியங்கள் நடந்தன. சர்க்காரை நடத்துவதிலும், ஒவ்வொரு சிறு சம்பவத்



துக்கும், முஸ்லிம்களின் சலுகை என்று பேதம் காட்டி தினசரி வேலையே சரியாக நடக்கமுடியாமல் செய்து வந்தார்கள் இந்த லீகர்கள். அரசியல் நிர்ணய சபையைத் தாங்கள் ஏற்க முடியாது என்று பகிரங்கமாகக் கூறினாலும், லீகர்கள் அல்லாத முஸ்லிம்கள் தேர்தலில் கலந்துகொண்டால், தங்களுடைய சுயநலத்துக்கு ஆபத்து வந்துவிடுமே என்று பயந்துபோனார்கள். ஆகவே, இந்த அரசியல் நிர்ணயசபையில் தங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும், தேர்தலுக்கு நின்று, சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி நிற்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு அரசியல் நிர்ணயசபைத் தேர்தலில் கலந்துகொண்டார்கள். முஸ்லிம்களின் நலன்களுக்கே பாதகமான செய்கையில் லீக் போய்க்கொண்டிருக்கிறது என்பதை அந்தச் சமூகத்திலுள்ள அறிஞர்கள் அறிந்தாலும் அதைத் தடைசெய்ய வழியறியாமல் திகைத்துக்கொண்டிருந்தார்கள். லீகர்களின் துவேஷ வெறிக்கும் ஆவேசத்துக்கும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் தூபம் போட்டுக்கொண்டேயிருந்தார்கள்.

'நாங்கள் அதிகார மாற்றம் செய்கிறோம்' என்று சொல்லும்போதே நாட்டின் அமைதி குலைந்துவிட்டதே, நாட்டிலிருந்தே நாங்கள் வெளியேறிவிட்டால், இங்குள்ளவர்கள் மதவெறிகொண்டு ஒருவரை ஒருவர் வெட்டி மாய்ந்துவிடப் போகிறார்களே' என்று பிரிட்டிஷ்காரர்களில் சிலர் மாய்மாலக் கண்ணீர் விட்டார்கள். 'எதுவரினும் சமாளிப்போம், எப்படியும் அன்னியர் ஆதிக்கத்தை நீக்கிவிடுவோம்' என்ற உறுதியுடன் காங்கிரஸ் தலைவர்கள் இருந்தார்கள். இந்த நெருக்கடியான சமயத்தில்தான் மீரட்டில் காங்கிரஸ் மகாசபை கூடவிருந்தது. அங்கும் வகுப்புக் கலகத்தைக் கிளப்பி லீகர்கள் அமளி செய்தார்கள்.

# எடுத்ததை நடத்தியே தீருவோம்

பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் பூர்ண ஆதரவு இருக்கும் வரையில் காங்கிரஸின் செல்வாக்கு ஓங்காமல் முட்டுக்கட்டை போடமுடியும் என்றே லீகர்கள் எண்ணினார்கள். தங்களுடைய கூட்டுறவு இல்லாமல் காங்கிரஸ் எதையும் சாதித்துவிட முடியாது என்று மனப்பால் குடித்தார்கள். நெருக்கடியான சமயத்தில் காங்கிரஸ்காரர்களும் லீகர்களும் ஒன்று சேர்ந்துவிட்டால் என்னசெய்வது என்ற பயம் பிரிட்டிஷாரைப் பிடித்துக்கொண்டது. ஏகாதிபத்தியப் பாதுகாப்புக்காக இந்தியாவில் சில தளங்களை அவர்கள் வைத்துகொள்ளவேண்டியது அவசியம். ஆகவே நாட்டைத் துண்டாடி பாகிஸ்தானைச் சிருஷ்டி செய்வதில் அவர்கள் சிரத்தை காட்டினார்கள். லீகர்களும் மயங்கினார்கள்.

தாங்கள் கலந்துகொள்ளாவிட்டால், அடுத்து வரும் அரசியல் நிர்ணய சபையின் ஆரம்பக்கூட்டமே நடத்தமுடியாது என்றும் லீகர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். "வானமே இடிந்து விழுந்தாலும், இயற்கை நியதி தவறினாலும், நாங்கள் செய்த முடிவு நிறைவேறும். திட்டப்படி டிசம்பர்மாதம் 9-ஆம் தேதியன்று அரசியல் நிர்ணய சபை ஆரம்பமாகும்" என்று ஸர்தார் படேல் கூறியதும்தான் லீகர்கள் வாயடைத்துப் போனார்கள்.

மீரட் காங்கிரஸில் ஸர்தார் படேல் பேசும்போது லீகர்கள் நாட்டுக்கு எவ்விதமான துரோகச் செயல்கள் புரிகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுவிட்டு 'அத்தனைக்கும் அவர்கள் பலன் அனுபவிக்கத்தான் போகி



றார்கள். வினை விதைத்தவன் வினையறுப்பான். பலாத்காரத்தில் நம்பிக்கைகொண்டவர்களிடம், வாள் வீச்சுக்கு எதிர்க்கத்தியே சரியான படிப்பினை தரும்' என்று எச்சரிக்கை செய்தார். அவருடைய பேச்சின் ஒரு பகுதி வருமாறு:

"நாட்டின் சுதந்திர முன்னேற்றத்துக்கு, சிறுபான்மையினருடைய பிரச்னையைக் காட்டி முட்டுக்கட்டை போடமாட்டோம்" என்று பிரதமமந்திரி ஆட்லி வாக்குறுதி கொடுத்தபிறகே, மந்திரி சபையில் சேர காங்கிரஸ் மகாசபை சம்மதித்தது. நாட்டின் க்ஷேமத்திலேதான் எங்களுக்கு நம்பிக்கை. மந்திரிசபை தூதுகோஷ்டியின் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ள மறுத்த லீகர்கள், பூர்ண அதிகாரம்பெற்ற மந்திரிசபை ஏற்படப்போகிறது என்று தெரிந்ததும், தங்களுடைய சித்தத்தை மாற்றிக்கொண்டார்கள். இடைக்கால மந்திரி சபையின் உபதலைவராக நேருஜி இருப்பார் என்று அறிவித்ததும் அவர்களுடைய வயிற்றெரிச்சல் அதிகமாயிற்று. இந்தப் பதவியினால் என்ன பலன் என்று கேட்ட அதே லீகர்கள், ஹிந்துவும் முஸ்லிமும் மாறி மாறி, இந்த உபதலைவர் பதவியை வகிக்கவேண்டும் என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். லீகர்கள் மந்திரிசபையில் பதவி பெற்றாலும் நேரு சர்க்கார் அல்லது காங்கிரஸ் சர்க்கார் என்றே உலகமக்கள், இந்த இடைக்கால மந்திரி சபையைக் குறிப்பிடுவார்கள். அதை பிரிட்டிஷ் மந்திரிசபையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

"நேரு சர்க்கார் ஏற்பட்டபின்பும், வகுப்புக் கலகத்தையும் அரசியல் குழப்பத்தையும் அடக்க, சர்க்கார் ஏன் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று பல மாகாணங்களிலுள்ள மக்கள் கேட்கிறார்கள். 1942-ஆம் ௵ நாம் அஹிம்ஸாப் போராட்டம் நடத்தத் தீர்மானம் செய்தபோதே சர்க்கார் தங்களுடைய ஆயுதபலத்தை ஒன்று திரட்டி நம்மீது பிரயோகித்தார்களே, இன்று நாட்டில் அமைதியை நிலைநாட்ட சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை! இப்போது ஜனங்களுக்கு வெறியூட்டும் முறையில் பிரசங்கங்களைச் செய்து, பகிரங்கமாகக் கலகம் செய்யவும், நேரடி நடவடிக்கை என்று வகுப்புத் துவேஷ அட்டூழியங்கள் செய்யவும் ஒரு சாரார் துணிந்திருக்கும்போது சர்க்கார் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறதே? இப்படி எல்லாம் மக்கள் நாலாபக்கங்களிலிருந்தும் கேட்கிறார்கள். இப்போது அரசியல் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. தவிர, அப்போது பிரிட்டிஷ் ஆட்சி மிகவும் நெருக்கடியான நிலையிலிருந்தது. யுத்தத்தைக் காரணமாகக் கொண்டு, பல விசேஷ அதிகாரங்களையும் அவசரச் சட்டங்களையும் பிறப்பித்து, நாட்டில் ஒரு ராணுவ ஆட்சியையே நடத்திவந்தது அப்போது இருந்த சர்க்கார். மூன்றாவதாக, நாம் அடிமைகளாக இருந்தோம். பிரிட்டிஷார் நம்மை ஆண்டுவந்தார்கள். சர்க்காரை எதிர்க்கும் மக்கள் பிரிட்டிஷ் ஆட்சி முறையை, அடக்குமுறையைத்தான் எதிர்த்து வந்தார்கள். ஆனால் இப்போதோ பிரிட்டிஷார் அதிகாரமாற்றம் என்ற செப்படிவித்தை காட்டி,



நாம் ஒருவருக்கு ஒருவர் அடித்துக்கொள்ளும்படிச் செய்துவிட்டு ஒதுங்கிநின்று வேடிக்கை பார்க்கிறார்கள். பரிபூரணமாக நாம் சுதந்தரம் அடையவேண்டும் என்றால் முதலாவதாக நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளத் தெரிந்துகொள்ள வேண்டும். நாட்டில் ஏற்பட்ட கலகத்தை அடக்க இந்தச் சர்க்காருக்கு முடியாவிட்டால், ராஜினாமா செய்துவிட்டு வெளியேறட்டுமே என்று பலர் எங்களைக் கேட்கலாம். இந்த இடைக்காலசர்க்காருக்கு சில விசேஷ அதிகாரங்களும் சலுகைகளும் கிடைத்திருப்பது என்னவோ உண்மைதான்.

"இந்தக் கலகங்களுக்கு அரசியல் சிக்கல்களே காரணம். நாட்டுமக்களிடம் நிர்வாகத்தைக் கொடுக்க விரும்பினாலும், முஸ்லிம்களுக்கு விசேஷ சலுகைகாட்டி, இங்கு புரையோடிய புண் ஒன்று இருக்கும்படிச் செய்யவே பிரிட்டிஷார் விரும்புகிறார்கள். முஸ்லிம்களிடம் நாட்டின் நிர்வாகம் போய்விட்டால் அதைவிட மோசமானது வேறு ஏதும் இல்லை. பிரிட்டிஷார் எப்படியும் வெளியேறித்தான் ஆகவேண்டும். போகிற போக்கில், இவர்கள் புதிதாக ஏதாவது சிக்கல்களைச் செய்துவிடாது தடுக்கவே இப்போது கிடைத்துள்ள பதவிகளில் நாங்கள் இருக்கவேண்டியிருக்கிறது. இந்தச் சர்க்காரை எந்த நிமிஷத்திலும் முறியடிக்க எங்களால் முடியும். ஆனால் சூழ்ச்சி செய்யும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் முகத்தில் கரியைப் பூசிவிட்டே, சர்க்காரைக் கலைக்க நாம் தயாராவோம்.

"கல்கத்தாவிலும், கிழக்கு வங்காளத்திலும், நாட்டின் வேறுபல இடங்களிலும் ஏற்பட்ட இரத்தக் களறியை, குண்டர்களின் செய்கை என்றோ, மதவெறி கொண்ட ஒரு சாராரின் கூற்று என்றோ முடிவு கட்டிவிட முடியாது. இதற்கு ஒரு சாராரின் அரசியல் அபிலாஷையும் ஆதிக்க வெறியுமே காரணம். ஆயிரக்கணக்கான மக்கள் இறந்ததைக்கூட நான் பெரிதாகக் கருதவில்லை. பலாத்காரமாக மதமாற்றம் செய்வதையும், பெண்களின் மானபங்கத்தையும் என்னால் சகிக்க முடியவில்லை. இந்த அக்கிரமங்களை எந்த முஸ்லிம் தலைவராவது கண்டித்தாரா? பலாத்காரத்தினாலும், இரத்தவெறியினாலும் வெற்றியடைந்துவிட முடியும் என்று இவர்கள் கனவு காணக்கூடும். ஹிட்லரும் ஒரு சமயம் அப்படித்தான் நினைத்தான். ஆனால் இன்று அவன் எங்கே! பலாத்காரமும் அநீதியும் நிலைத்து நிற்காது. இந்தக் கலகங்களால், நம்முடைய பரிதாப நிலையைப் பார்த்து, உலகமக்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள். பலாத்காரத்தினால் பாகிஸ்தானை சிருஷ்டித்துவிட முடியும் என்று முஸ்லிம்கள் நினைத்தால் அது தவறாகும். அந்தப் பாகிஸ்தான் உருவாகுமுன்பே நாட்டிலுள்ள பலருடைய வாழ்க்கை பாழாகும். நாட்டின் அமைதி குலைந்து போகும். நாம் செய்யும் செய்கையில் அமைதியும் அன்பும் இருக்கவேண்டும். நாம் அஹிம்சையில் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கும்போது, பலாத்காரத்தை எதிர்ப்பது எப்படி என்று சிலர் திகைக்கலாம். தற்காப்புக்காகவோ, பிறரைக்



காப்பாற்றவோ, ஆயுதபலம் தேவை என்று வரும்போது, நாம் அதை உபயோகிப்பதில் தவறில்லை. கத்தி வீச்சைத் தடுக்க கத்திதான் பயன்படும்.

"எல்லாரும் ஒன்றுசேர்ந்து, நாட்டின் புது அரசியலை உருவாக்குவதுதான் புத்திசாலித்தனம். சுயநலத்துடன் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டேயிருப்பதில் பலன் இல்லை. அரசியல் நிர்ணய சபை குறிப்பிட்ட தேதியில் கூடியே தீரும். அதில் கலந்துகொள்ள லீகர்கள் விரும்பாவிட்டால், இடைக்கால சர்க்காரிலும் அவர்கள் இருக்கமுடியாது. அவர்கள் வெளியேறி தங்களுடைய லட்சியசாதனைக்கு ஆவன செய்யட்டும்."

## சுதந்தர உதயம்

மீரத் காங்கிரஸுக்குப் பிறகு நாட்டில் பல இடங்களில் துவேஷப் பிரசாரமும், வகுப்புக் கலகங்களும் ஏற்பட்டன. தேசபக்தர்களுடைய பொறுமையைச் சோதிக்கும் முறையிலேதான் லீகர்களுடைய போக்கு இருந்தது. இதன் நடுவே நேருஜியையும், லீகர்களையும் பிரிட்டிஷ் பிரதமர் லண்டனுக்கு வரவழைத்துச் சமாதானம் பேசினார். அதனால் ஏதும் பலன் கிடைக்கவில்லை. அந்நியன் ஆதிக்கம் நீங்கிவிட்டால், உள்நாட்டுப் பிரச்னைகளைச் சமாளிப்பது சுலபம் என்று காந்திஜி அடிக்கடி வற்புறுத்திக்கொண்டேயிருந்தார். அதற்குப் பலன் கிடைக்கும் காலமும் வந்தது. 1947ஆம் பிப்ரவரி மீ 20யன்று பார்லிமெண்டில் பேசும்போது, பிரதம மந்திரி ஆட்லி, "இந்திய அரசியல் சிக்கலைத் தீர்க்கும் பொறுப்பை அவர்களிடமே விட்டுவிட்டு

எப்படியோ ஒருவிதமாக அதிகாரத்தை மாற்றிக் கொடுத்துவிட்டு 1948ஆம் ஜூன் மாத இறுதிக்குள் பிரிட்டிஷ் சர்க்கார் வெளியேற நிச்சயித்துவிட்டது" என்று குறிப்பிட்டார். அதிகாரமாற்ற வேலைகளை துரிதமாகச் செய்ய மவுண்ட்பாட்டன் பிரபுவுக்குச் - சில விசேஷ அதிகாரங்களை அளித்து, அவரையே கவர்னர் ஜனரலாக நியமனம் செய்து இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்.

மவுண்ட்பாட்டன் பிரபு மார்ச் மாதத்தில் கவர்னர் ஜனரலாகப் பதவி யேற்றார். வந்ததுமே அவர் எல்லாக் கட்சிப் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசினார். அரசியல் சிக்கலைத் தீர்த்து, நாட்டில் அமைதி காணுவது அசாத்தியம் என்றே அவருக்குத் தோன்றிற்று. ஆகவே, நாட்டைத்துண்டாடி பாகிஸ்தான், இந்தியா என்று இரு பகுதிகளாக்கிவிடுவதே உசிதமான பரிகாரம் என்று அவர் நினைத்தார். அதனால் முஸ்லிம்லீகர்களும் திருப்தி அடைவார்கள். பிரிட்டிஷாருக்கும் சாதகம் உண்டு. நாட்டிலும் அமைதி ஏற்படக்கூடும். நாட்டைத் துண்டாட காங்கிரஸ் தலைவர்கள் சம்மதிக்கவில்லை. ஆனால் தினே தினே லீகர்கள் செய்துவரும் துவேஷப் பிரசாரத்தால் புதிது புதிதாகக் கிளம்பும் பிரச்னைகளைக் கண்டு, அவர்கள் பிரிவினைத் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டார்கள். பாகம் செய்து கொண்டாலாவது, அமைதியான வாழ்க்கை ஏற்படாதா என்ற ஆசையில் அவர்கள் மவுண்ட்பாட்டன் திட்டத்தை ஏற்றார்கள். ஆனால் சமீபகாலமாக, தங்களுடைய ஒவ்வொரு கோரிக்கைக்கும் பலன் கிடைத்து வரவே லீகர்கள் மேலும் மேலும் சலுகை கோரிக் கொண்டேயிருந்தார்கள். பாகிஸ்தான் என்று நாட்டின் ஒரு பகுதி பிரிக்கப்பட்டாலும், எஞ்சியுள்ள இந்தியப் பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்குத் தாங்கள் தான் தர்மகர்த்தர்கள் என்று லீகர்கள் சொல்லிக் கொண்டார்கள். எப்படியாவது கொலையும், கொள்ளையும் தவிர்த்து முஸ்லிம்களின் ஆவேசத்தை அடக்கி, நாட்டில் அமைதியை ஏற்படுத்தவேண்டும் என்றே தலைவர்கள் எண்ணினார்கள்.



கடைசியில் நாடு துண்டாடப்பட்டது. லீகர்கள் தங்களுடைய கற்பனை ஊருக்குச் சென்றார்கள். ஆனாலும் மண்ணாசை கொண்டு, சில முஸ்லிம் சமஸ்தானாதிபதிகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தார்கள். முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள பகுதியைப் பிரித்து அங்கு முஸ்லிம் ஆட்சி ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. என்றாலும் டில்லியிலே வீற்றிருந்து இந்தியா முழுவதையுமே, கட்டியாள வேண்டுமென்பதேதான் லீகர்களின் ஆசை. ஆகவே, பவால்பூர், போபால், காஷ்மீர், ஹைதராபாத், ஜூனகாத் போன்ற சமஸ்தானங்களில் தங்களுடைய விஷப்பிரசாரத்தை லீகர்கள் ஆரம்பித்தார்கள். பிரிட்டிஷ் ஆதிக்கம் நீங்கப்போகிறது என்னும்போதே, பிரிட்டிஷ் சர்க்கார் மிகவும் சாமர்த்தியமானதொரு பிரகடனம் செய்தார்கள். அதில் முக்கியமானது சமஸ்தானங்களுடைய அந்தஸ்தைப் பொருத்தது. "பிரிட்டிஷ் ஆதிக்கம் நீங்கியதும், சமஸ்தானங்கள் சுதந்தரம் அடைந்துவிடுகின்றன. இருந்தாலும் தேசத்தின் ஐக்கிய பலத்தை எண்ணி, சமஸ்தானங்கள் ஏதாவது ஒரு யூனியனுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். இதுதான் அந்த ஷரத்தின் சாரம். பல சமஸ்தான மன்னர்கள், பிரிட்டிஷ் ஆட்சியில் வைசிராய்க்கு

அடங்கியிருந்ததுபோலவே, இந்திய யூனியனுடன் இருக்க ஒப்புக்கொண்டார்கள். ஆனால் முஸ்லிம் சமஸ்தானாதிபதிகளில் சிலர்மட்டும் சுதந்தரப் பிரகடனம் செய்தார்கள். இந்திய யூனியனுக்குத் தங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமை கிடையாது என்றார்கள். காஷ்மீரிலோ நிலைமை வேறாக இருந்தது, அங்கு முஸ்லிம்கள் பிரஜைகள். அந்தச் சமஸ்தானாதிபதியோ ஒரு ஹிந்து அரசர். ஆகவே அவர், மக்களின் அபிலாஷைப்படி பாகிஸ்தானுடன் சேருவதே நியாயமென்றும், காஷ்மீரின் கலாசார, பூகோள அமைப்பு, பாகிஸ்தானுடன் சேர்ந்தது என்றும் ஒரு பிரசாரத்தை லீகர்கள் ஆரம்பித்தார்கள்.

மவுண்ட்பாட்டன் திட்டப்படி, 1947௵ ஆகஸ்டு ௴ 15யன்று தேசம் இரு துண்டாயிற்று. இடைக்கால சர்க்காரின் தலைவராயிருந்த பண்டித நேருவே தமது சகாக்களுடன் இந்திய யூனியனின் சர்க்காரை நிர்வகிக்கவும் பிரதம மந்திரியானார். இந்திய மக்களின் விருப்பப்படி மவுண்ட்பாட்டன் பிரபுவும் மேலும் சில மாதங்கள்வரையில் கவர்னர் ஜனரலாகப் பதவி வகிக்க ஒப்புக்கொண்டார். புதிதாகத் தோன்றிய பாகிஸ்தானுக்கும் அவரே கவர்னர் ஜனரலாக இருக்க வேண்டும் என்று கேட்பதுபோலப் பாசாங்கு செய்த முஸ்லிம் லீகர்கள், கடைசி நிமிஷத்தில் ஜின்னா சாகேபையே கவர்னர் ஜனரலாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

டொமினியன் சர்க்கார் ஏற்பட்ட சில மாதங்கள் வரையில் காஷ்மீரும் ஹைதராபாத்தும் ஒரு முடிவுக்கும் வராமல் இருந்தன. பவால்பூர் பாகிஸ்தானுடன் சேர்ந்தது. சுற்றிலும் இந்திய யூனியனைச் சேர்ந்த சமஸ்தானங்களையுள்ள ஜூனாகாத் சமஸ்தானமும்



பர்கிஸ்தானுடன் சேர்ந்தது. ஜூனாகாத் சமஸ்தானம் ஒரு ஹிந்து சமஸ்தானம். சுற்றிலும் இந்திய யூனியன் பிரதேசம். அந்த சமஸ்தானாதிபதி ஒரு முஸ்லிம் என்பதற்காக, அது பாகிஸ்தானில் சேருவதை எவரும் சம்மதிக்கவில்லை. மக்களுடைய விருப்பப்படி சமஸ்தான அரசியலை மாறவேண்டிய காலம் வந்துவிட்ட பின்பு சமஸ்தானாதிபதியின் ஏதேச்சாதிகார அபிலாஷைக்கு இடமேது! ஆனால் பாகிஸ்தான் அதை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு இந்தியாவை வம்புக்கு இழுத்தது; சர்வதேச சமாதானக் கௌன்ஸிலில் இந்தியாவைப்பற்றி புகார் கூறி முறையிட்டது.

பாகிஸ்தான் ஆட்சிமுறையும், அங்கு நிர்வாகத்தை நடத்தும் தலைவர்களுடைய அவல ஆசையும் நன்கு தெரிந்துகொண்ட காஷ்மீர் மகாராஜா, இந்தியா யூனியனுடன் சேரவே விரும்பினார். நீதியும்நேர்மையும் தெரிந்து அவர் இந்திய யூனியனுடன் சேர்ந்துவிட முடிவுசெய்து விடவில்லை. இந்தியா யூனியனுடனிருந்தால் தம்முடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்ற ஆசையே காரணம். இரண்டு யூனியன்களுக்கும் நடுவில் இருக்கும் அந்தச் சமஸ்தானம் எதில் வேண்டுமானாலும் சேரலாம். ஆனால் முஸ்லிம் நாடான காஷ்மீர் பாகிஸ்தானுடன்தான் சேரவேண்டும் என்று பாகிஸ்தானியர்கள் கோரினார்கள். காஷ்மீரிகளிடம் உள்ள அபிமானத்தினாலோ, க்ஷேமத்திலோ எழுந்த கோரிக்கையல்ல இது; கேவலம் நாடாசைதான் காரணம். காஷ்மீரிகளைத் தம்வசப்படுத்த லீகர்கள் நயமாகப் பிரசாரமுறைகளைக் கையாண்டார்கள். முஸ்லிம் சமுதாய உணர்ச்சி என்று என்னஎன்னவோ பேசித் தூபம் போட்டார்கள். காஷ்மீரிகள் பாகிஸ்தானியர் பேச்சில்

மயங்கிவிடவில்லை. காஷ்மீர் மன்னனை பயமுறுத்திப் பணியவைக்கவும் பாகிஸ்தானியர் பின்வாங்கவில்லை. கடைசியில் மலைஜாதியினரைத் தூண்டிவிட்டு, அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து, காஷ்மீர்மீது படையெடுத்தார்கள். அதுவரையில் பாகிஸ்தானியர்களுடைய சூழ்ச்சிகளைச் சகித்துக்கொண்டு, சமாளித்துக் கொண்டிருந்த காஷ்மீர் அரசர் சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி கோரிக் கிளர்ச்சி செய்துவந்த தேசிய மகாசபைத் தலைவர்களைக் கலந்துகொண்டு இந்திய யூனியனுடன் சேர நிச்சயித்தார். இதை உடனே நேரு சர்க்காருக்குத் தெரிவித்து, பாகிஸ்தான் படையெடுப்பிலிருந்து, காஷ்மீரைக் காக்க, இந்திய ராணுவ உதவியையும் கோரினார். உடனே ஷேக் அப்துல்லாவின் தலைமையில் ஒரு தற்காலிக சர்க்காரையும் நியமித்து, சர்க்கார் நிர்வாகத்திலிருந்து விலகிக்கொண்டார். ஷேக் அப்துல்லா காஷ்மீரிகள் இந்தியர்களுடன் வாழ்வதே சிறந்தது என்று கூறினார். அவருடைய அபிப்பிராயத்தைக் காஷ்மீரிகள் சில மாதங்களுக்குப்பின் நடந்த தேசிய மகாநாட்டில் ஆமோதித்தார்கள்.

காஷ்மீர் தங்களுடைய பிடிப்பிலிருந்து நழுவிவிட்டதைக் கண்ட பாகிஸ்தானியர் ஹைதராபாத்தில் தங்களுடைய கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தார்கள். ஹைதராபாத்தை பாக்கிஸ்தானுடன் சேர்த்துக்கொள்ள பூகோள அமைப்பு இடம் கொடாவிட்டாலும், இந்தியா யூனியனுக்குப் பணியாத ஓர் அடங்காப் பிடாரி சர்க்காருடைய சுதந்தர நாடாக அந்தச் சமஸ்தானத்தைச் சிருஷ்டித்துவிடச் சூழ்ச்சி செய்தார்கள். இந்திய யூனியன் சர்க்



காரும் ஹைதராபாத் சமஸ்தான விஷயத்தில் விசேஷ சலுகைகள் காட்டினார்கள். தீர்க்கமாக ஆலோசித்து முடிவுக்குவர, தமக்குக் கொஞ்சகாலம் ஆகலாம் என்றும் அதுவரையில் பிரிட்டிஷ் ஆட்சியுடன் இருந்த மாதிரியே மத்தியசர்க்காருடன் சமஸ்தானத்தொடர்பு இருக்கவேண்டும் எனக் கோரி, நிஜாம் ஒரு தற்காலிக உடன்படிக்கை செய்துகொண்டார். அந்த ஒப்பந்த காலம் 1948ஆம் நவம்பர் மாதம் முடியுமட்டும் இருந்தது. ஒரு வருஷ வாய்தா வாங்கிக் கொண்ட ஹைதராபாத் நிஜாம் சமஸ்தானத்தின் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்கவில்லை. சில அடங்காப் பிடாரிகளுடைய உதவிகொண்டு சுதந்தரப் பிரகடனம் செய்யவும், இந்திய யூனியனுடன் சமயம் நேர்ந்தால் எதிர்த்துப் போராட ராணுவத்தைப் பலப்படுத்துவதிலுமே கவனம் செலுத்தினார். அவருடைய ஆசைக்கு அனுசரணையாக பாகிஸ்தான் சர்க்காரும் இருந்தது. இங்கிலாந்திலிருந்து ஏராளமான ஆயுதங்களைத் திருட்டுத்தனமாகக் கொண்டுவந்து குவித்துக் கொள்ளவும் சமஸ்தான ராணுவத்துக்குப் பயிற்சியளிக்கவும் பாகிஸ்தான் சர்க்கார் உதவியளித்தது. சமஸ்தானத்தில் முஸ்லிம் அல்லாத மக்களின் வாழ்வே பாதிக்கும் வண்ணம் முஸ்லிம்களின் எழுச்சி ஏற்பட்டது. ஹைதராபாத்தில் முஸ்லிம்கள், குறிப்பாக ரஜாக்கர்கள் என்ற முஸ்லிம் வாலிப படையினர் செய்த ஆர்ப்பாட்டங்களினால், நாட்டின் அமைதிக்கே பங்கமேற்பட்டது. ஹைதராபாத்திலுள்ள ஹிந்துக்களில் பலர் ரஜாக்கர் கொடுமை தாங்காது இந்திய யூனியனில் குடியேறினார்கள்.

## சமஸ்தானச் சிக்கல்

ஆரம்பத்திலிருந்தே உள் நாட்டிலாகா ஸர்தார் படேலின் நிர்வாகத்தில்தானிருந்தது. டொமினியன் சர்க்கார் ஏற்படுத்துவதற்குச் சில வாரங்களுக்கு முன்பு புதிதாக ஏற்பட்ட சமஸ்தான இலாகா நிர்வாகத்தையும் ஸர்தார் படேல் எடுத்துக் கொண்டார். காஷ்மீர், ஜூனாகாத், ஹைதராபாத் போன்ற சமஸ்தானங்களின் போக்கை அவர் கூர்ந்து கவனித்துவந்தார். பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்த ஐநூறுக்கும் அதிகமான சமஸ்தானங்களை அவர் ஒன்று திரட்டி யூனியன் ஆட்சியின்கீழ் கொண்டு வந்துவிட்டார். காங்கிரஸ் சுதந்தரப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்தே முஸ்லிம்களையும், சமஸ்தானாதிபதிகளையும் காட்டியே பிரிட்டிஷார் சுதந்தரக் கோரிக்கையைத் தட்டிக் கழித்தார்கள். அரசியல் சீர்திருத்தங்களைப் புகுத்தும்போதெல்லாம் சமஸ்தானப் பிரச்னையைப் பெரிதாக்கிப் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்தார்கள். பாகிஸ்தான் ஏற்பட்டதுமே முஸ்லிம் அடங்காப்பிடாரிகளுடைய கோரிக்கையும் நிறைவேறிற்று என்றுதான் சொல்ல வேண்டும். சமஸ்தானப் பிரச்னையை தம்முடைய இலாகா காரியதரிசி ஸ்ரீ வி. பி. மேனனுடைய உதவியைக் கொண்டு மிகவும் சுலபமாக ஸர்தார் படேல் தீர்த்துவிட்டார் என்றே சொல்லவேண்டும்.

அவர் கத்தியவாட் சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் தலைவராக இருந்த காலத்திலிருந்தே சமஸ்தானாதிபதிகளைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டவர். ராஜகோட் சத்தியாக்கிரஹ காலத்தில்



சமஸ்தானங்களில் பிரிட்டிஷாருக்கு இருக்கும் செல்வாக்கையும், அங்கு அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளையும் நன்றாகப் புரிந்துகொண்டிருந்தார். ஆகவே சமஸ்தான இலாகா நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டதும் அவர் பல பல சமஸ்தானங்களைச் சேர்த்து தொகுதி தொகுதியாக அமைக்க முற்பட்டார். பல சமஸ்தானங்களில் ஜனங்கள் பொறுப்பாட்சி கோரி கிளர்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். அந்த சமஸ்தானாதிபதிகளில் பலர் இந்திய யூனியனுடன் புதிய ஒப்பந்தம் செய்துகொள்ளச் சமயம் நேர்ந்தபோது, தம் தம் சமஸ்தானங்களைப் பக்கத்திலுள்ள மாகாணங்களுடன் சேர்த்துக்கொள்ளச் சம்மதித்து, நிர்வாகப் பொறுப்பையே இந்திய யூனியனிடம் கொடுத்துவிட்டார்கள். வேறு பல பெரிய சமஸ்தானாதிபதிகளோ, தங்களுக்குள்ளேயே யூனியன்கள் அமைத்துக்கொண்டார்கள்.

ஆகவே இந்திய யூனியன் ஏற்பட்டு ஒரு வருஷத்துக்குள் நூற்றுக்கணக்கான சமஸ்தானங்கள் ஒரு சில தொகுதிகளாக மாறி, ராஜப்பிரமுகர்களுடைய ஆட்சியின் கீழ், தனித்தனி மாகாணம்போல மாறிவிட்டன. மைசூர், பரோடா, கொச்சி, திருவாங்கூர், போபால் போன்ற சமஸ்தானங்கள் தனித்து நின்றாலும் இந்திய யூனியனிடம் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டன.

இந்திய யூனியன் நிர்வாகத்தின்கீழ் 17 சமஸ்தானங்களும், 9 மாகாணங்களும், 7 சமஸ்தான யூனியன்களும் அமைந்தன. பல சமஸ்தானங்களும், பல ஜாதியரும், பல பிரிவுகளும் கொண்ட இந்தியா தேசத்தை ஒன்றுசேர்ப்பது அசாத்தியம் என்று சொல்லிவந்த பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுடைய

முகத்தில் கரியைப் பூசி, இந்தியா மக்கள் அனைவரும் ஒன்றுதான் என்றும் அவர்களுடைய கலாசாரமும் அரசியல் அபிலாஷையும் ஒன்று என்றும் நிரூபித்து ஓர் ஐக்கிய இந்தியாவைச் சிருஷ்டித்த பெருமை ஸர்தார் படேலையே சேரும்.

ஹைதராபாத் சமஸ்தானத்தையும் வழிக்குக் கொண்டுவர ஸர்தார் படேல் சமயம் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அங்குள்ள நிர்வாகிகளுடைய சூழ்ச்சிகளை அம்பலப்படுத்திய பின்பே அதன்மீது நடவடிக்கை எடுக்க விரும்பினார். தற்காலிக ஒப்பந்தம் காலாவதியாகுமுன்பே, ஒரு புது ஒப்பந்தம் செய்துகொள்ள ஹைதராபாத் சமஸ்தானத்துக்கு இந்திய சர்க்கார் அவகாசம் கொடுத்தது. அந்த சமஸ்தானம் கோரிய விசேஷ சலுகைகளையும் அளித்தது. வெளிநாடுகளில் தங்களுடைய பிரதிநிதிகளை ராஜாங்க தூதர்களாக நியமிக்கக் கோரியதையும் அனுமதித்தது. ஆனால் ஒப்பந்தப் பேச்சுக்களை ஒத்திப் போட்டுக்கொண்டு காலங்கடத்திக்கொண்டே வந்தார்கள் ஹைதராபாத் நிர்வாகிகள். தங்களுக்கு அளித்த சலுகைகளையும் அவர்கள் துஷ்ப்பிரயோகம் செய்தார்கள்.

மவுண்ட்பாட்டன் பிரபு 1948 ௵ ஜூன் ௴ 21 உ யன்று தமது பதவியிலிருந்து விலகினார். ராஜாஜி கவர்னர் ஜனரலாகப் பதவி ஏற்றார். வெள்ளையரின் கடைசிப் பிரதிநிதியான மவுண்ட்பாட்டன் சென்றதுமே ஹைதராபாத்தைச் சுதந்தர நாடாகப் பிரகடனம் செய்துவிடவேண்டும் என்பது ரஜாக்கர்களின் ஆசை. ஏற்கனவேயே அவர்கள் இந்திய யூனியனை எதிரி நாடுபோலப் பாவித்து,



சமஸ்தானத்துக்குள் இந்திய நாணயச் செலாவணியைத் தடை செய்திருந்தார்கள். இந்திய சர்க்காரை ஆயுதபலம்கொண்டு எதிர்க்கவும் துணிந்து ஸிட்னி காட்டன் என்ற ஓர் ஆஸ்திரேலிய வர்த்தகரின் உதவியினால் இங்கிலாந்திலிருந்து விமானமூலம் திருட்டுத்தனமாக சமஸ்தானத்துக்குள் ஆயுத தளவாடங்களைச் சேகரித்துக்கொண்டார்கள். கடைசியாக, ஹைதராபாத் சுதந்தரத்தில் இந்தியா தலையிடுவது அநியாயம் என்று சர்வ தேச சங்கத்தில் முறையிடவும் துணிந்தார்கள். இதற்கு பாகிஸ்தானியரும் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளில் சிலரும் பக்கபலமாக இருந்தார்கள்.

ஹைதராபாத்தின் விபரீதப்போக்கைக் கண்டு இந்திய சர்க்கார் வருத்தம் தெரிவித்தது, கண்டித்தது; பொருளாதார முற்றுகையிட்டது. இதற்கும் ஹைதராபாத் சர்க்கார் மசியவில்லை. ஹைதராபாத்தின் உள்நாட்டு அமைதியை உத்தேசித்து இந்திய ராணுவத்தை செகந்தராபாத்தில் நிறுத்திவைக்கவும் சமஸ்தான சர்க்கார் மறுத்தது. கடைசியாக செப்டம்பர் மாதம் 12 உ யன்று இந்திய ராணுவம், ஹைதராபாத்தில் நுழைந்தது. இதன் நடுவே சர்வ தேச பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குச் சென்ற ஹைதராபாத் பிரதிநிதி சபைக் கூட்டத்தில் இந்தியா, ஹைதராபாத்மீது ஆக்கிரமித்துவிட்டது என்று கூகூவென்று கத்தினார். ஹைதராபாத் சைனியமோ, இந்திய ராணுவத்தினரை எதிர்த்து நின்று போராடினார்கள். ஐந்து நாட்கள் எதிர்த்து நின்ற பின்பு ஹைதராபாத் கடைசியில் பணிந்தது. சர்க்கார் நிர்வாகத்தை இந்திய ராணுவத்தார் ஏற்றுக் கொண்டார்கள்.

ஹைதராபாத் நிஜாம் 1948-ஆம் ௵ செப்டம்பர் மாதம் 23-ஆம் தேதியன்று ரேடியோ மூலம் பேசிய போது, கொடுங்கோலர்கள் ஆட்சியிலிருந்து தம்மையும், தம்முடைய சமஸ்தான மக்களையும் 'இந்திய ராணுவம் மீட்டதற்கு நன்றிசெலுத்தினார். அவர் சொன்னார்:

"இன்று ஹைதராபாத் மீது, இந்தியா படை எடுத்து ஆக்ரமித்துவிட்டதாகப் பல இடங்களில் பேசுகிறார்கள். ஹைதராபாத் தூது கோஷ்டி ஒன்று சர்வ தேச பாதுகாப்புக் கௌன்சிலில் கூடச் சென்று முறையிட்டது. நான் இன்று சுயேச்சை பெற்று, ஆஸாப்ஜா பரம்பரையின் கண்ணியத்துக்கு ஏற்ற முறையில் ஹைதராபாத் சமஸ்தானத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்படிச் செய்த பெருமை இந்திய யூனியனையே சேரும். ராணுவ வெறிகொண்ட ஒரு சிறு கும்பல் ஆயுத பலத்துடன் ஹைதராபாத் சர்க்காரின்மீது ஆட்சி செலுத்திற்று. முன்பு இங்கு பிரதம மந்திரியாக இருந்த சட்டாரி நவாபையும், என்னுடைய சட்ட ஆலோசகராக இருந்த வால்டர் மாங்டனையும், இந்தக் கும்பல் மிரட்டியதுடன் சட்டாரி நவாப், தமது பதவியை ராஜினாமாச் செய்து சமஸ்தான எல்லையை விட்டே வெளியேறும்படிச் செய்தது. அதன் பிறகு, இது சர்க்காரையே கைப்பற்றியது."

சமஸ்தானத்தில் அமைதி நிலவச்செய்ய இந்திய சர்க்கார் எடுத்துக் கொண்ட 'போலீஸ் நடவடிக்கை'யை நிஜாமே ஆமோதித்தபோது, பாகிஸ்தானியர்களும் அவர்களிடம் பற்றுள்ள வேறு சிலரும்



துவேஷப் பிரசாரம் செய்துகொண்டேயிருப்பது ஏமாற்றத்தில் எழுந்த கூக்குரலைத் தவிர வேறு அல்ல. இந்திய சர்க்காருடைய சக்தியைப் பற்றியும் தலைவர்களுடைய ஆற்றலைப்பற்றியும் அவர்கள் குறை கூறிக்கொண்டிருப்பதை எவருமே லட்சியம் செய்யவில்லை.

ஹைதராபாத் பிரச்னையை ஸர்தார் படேல் மிகவும் சாதாரணமாகவே பாவித்தார். "புரையோடிய புண் கூட அல்ல. கீறி விடக்கூடிய சாதாரணப் புண்தான் இது" என்று ஒரு சமயம் அவர் ஹைதராபாத் பிரச்னையைப்பற்றிக் குறிப்பிட்டார். தேசம் சுதந்தரமடைந்தபோது 1947-ஆம் ௵ ஆகஸ்டு௴ 15 யன்று மக்களுக்கு ஸர்தார் விடுத்த அறிக்கையில், "நாம் மகத்தான தியாகம் செய்து பெற்றுள்ள சுதந்தரத்தை மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றவேண்டும். நாட்டிலுள்ள ஏழை முதல் பணக்காரன் வரையில் எல்லாரும் சம அந்தஸ்துப் பெற்று, உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெற்று, சௌக்கியமாக வாழ நாம் பணியாற்ற வேண்டும். நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் கோடிக் கணக்கான மக்கள் எல்லாருக்கும் உண்ணச் சோறும், உடுக்க உடையும், இருக்க வீடும், அறியாமை நீங்கி அறிவுச் செல்வம் பெற வசதியும் தர, சர்க்கார் பாடுபடவேண்டும் என்பதை நாம் உறுதி செய்துகொள்ளவேண்டும்" என்று குறிப்பிட்டார். இந்தியாவில் வாழும் எல்லா மக்களையும் குறிப்பிட்டே படேல் இவ் வார்த்தைகளைச் சொன்னார். காஷ்மீரும் ஹைதராபாத்தும் தவிர மற்ற சமஸ்தானப் பிரச்னைகளை சுலபமாகத் தீர்த்த அவருக்கு இந்தச் சமஸ்தானங்களையும் வழிக்குக் கொண்டுவர

முடியாது என்பதில்லை. இந்திய ராஜ தந்திரிகளுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஓர் உரைகல் போலவே இந்தப் பிரச்னை வளர்ந்துவிட்டது.

பாகிஸ்தானுடைய அட்டூழியங்களை அம்பலப் படுத்தவே, காஷ்மீர் பிரச்னையை இந்தியா பாதுகாப்புக் கௌன்ஸிலின் முன்பு சமர்ப்பித்தது. ஜனநாயக தத்துவத்தில் பற்றுள்ள இந்திய ராஜ தந்திரிகள் மக்களுடைய அபிப்பிராயத்துக்கே மதிப்புக் கொடுத்தார்கள். காஷ்மீரப் பிரச்னையைத் தீர்க்க பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குச் சென்றாலும் காஷ்மீர் மக்கள், சமஸ்தானாதிபதியின் அபிலாஷைக்கு விரோதமாக, பாகிஸ்தானுடன் சேரவே விருப்பம் தெரிவித்திருந்தால், தம்முடைய ராணுவத்தை 'வாபஸ்' பெற்றுக்கொண்டு, காஷ்மீர் அரங்கத்திலிருந்தே இந்திய சர்க்கார் வெளியேறியிருக்கும்.

ஹைதராபாத்தின் கட்சியில் நியாயம் இருக்கிறதா, அதற்குச் சர்வதேசப் பாதுகாப்புச் சங்கத்தில் முறையிட்டுக் கொள்ளும் உரிமை யுண்டா, என்பதை எல்லாம் பரிசிலனை செய்யவி நம்பாமலே, பாகிஸ்தானியர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் பார்லிமெண்டிலும், பாதுகாப்புச் சங்கத்திலும் இந்தப் பிரச்னையைக் கிளப்பினார்கள். ஹைதராபாத் பிரச்னை உள்நாட்டு விவகாரம் என்று இந்திய சர்க்கார் கூறியும் அவர்கள் கேட்கவில்லை. கடைசியில் நிஜாம் பணிந்தார். ஆனாலும் அதன் எதிர்காலத்தை நிச்சயிக்கும் பொறுப்பு ஹைதராபாத் மக்களிடமே உண்டு என்று இந்திய சர்க்கார் கூறி, அரசியல் நிர்ணயசபை கூட்டவும் ஏற்பாடு செய்தார்கள். தற்காலிகமாக சமஸ்தானத்தை நிர்வகிக்க,



பூரண அதிகாரம்பெற்ற ராணுவ கவர்னர் ஒருவரையும்நியமித்தார்கள்.

சென்ற 1948-ஆம் ஆு டில்லியில்நடந்த காந்தி ஜயந்திக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஸர்தார் படேல், பாதுகாப்புக் கௌன்ஸிலையும், காஷ்மீர், ஹைதராபாத் சமஸ்தானங்களையும்பற்றிப் பின்வருமாறு பேசினார்:

"சர்வதேச பாதுகாப்புக் கௌன்சில் என்பது வெறும் கேலிக் கூத்துச் சபை என்றே எனக்குத் தோன்றுகிறது. இதுவரையில், அது எந்தப் பிரச்னையையுமே தீர்த்துவைக்கவில்லை. அதை சர்வதேச குளறுபடிச் சங்கம் என்று குறிப்பிடுவதே பொறுத்தமாகும்."

"நாம் காந்தியத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டால் பல பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியும். மத்தியஸ்தருடைய தீர்ப்புக்கு விடுவது காந்திய தத்துவத்தில் ஒரு முக்கிய அம்சமாகும். இதைச் சர்வதேச அரசியல்வாதிகள் ஏற்றுக்கொண்டால் உலக சமாதானம் சுலபமாக சாத்தியமாகும். சர்வதேச பாதுகாப்புக் கௌன்சிலை சிருஷ்டித்த வல்லரசுகள் தங்களுக்குள் இருக்கும் பேதங்களையே மாற்றிக் கொள்ளாதிருக்கும் வரையில் உலக சமாதானம் எப்படிச் சாத்தியமாகும்? சர்வதேச ஒற்றுமை எப்படி ஏற்படும்? காஷ்மீரில் அமைதியும் சந்தோஷமும் அதிசீக்கிரம் ஏற்படவேண்டும் என்றே சர்வதேச சங்கத்துக்கு இதைக் கொண்டு போனோம். ஆறுமாதத்துக்கு மேலாகியும், நமக்குக் கிடைத்த பலன் என்ன? பாகிஸ்தானியருடைய துவேஷப் பிரசாரமும், காஷ்மீர் எங்கிருக்கிறது, அதில் நம்முடைய

சிரத்தை என்ன, அதனால் இந்தியா பாகிஸ்தான் உறவு எப்படிப் பாதிக்கிறது என்று தெரிந்துகொள்ளாத பலரும்கூட இந்தத் துவேஷப் பிரசாரத்தினால் மனமயக்கம் கொண்டதுந்தான் மிச்சம். ஆறுமாதத்துக்கு மேலாக, அந்தக் கௌன்சிலில் இந்தப் பிரச்னையைப் பேசித் தீர்த்தார்கள்; அதற்குமேல் இங்கே நடப்பதை நேரடியாகத் தெரிந்துகொள்ள ஒரு கமிஷனை அனுப்பினார்கள். அந்தக் கமிஷன் இந்தியா, பாகிஸ்தான், காஷ்மீர் ஆகிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தது. தற்காலிகமாகச் சண்டையை நிறுத்துமாறு ஒரு வேண்டுகோள் விடுத்தது. சண்டையை நிறுத்த நாம் ஒப்புக்கொண்டோம். ஆனால் எதிரிகளோ மறுத்துவிட்டார்கள். நாம் சண்டையிட்டுக்கொண்டு நம்முடைய பிரச்னையைத் தீர்த்துக்கொள்வதுதான் கடைசி மார்க்கம் என்றால் அதை நாமே செய்துகொள்ளலாமே! இது கையாலாகாத சபையாக இருக்கும்போது பாதுகாப்புச் சங்கம் என்ற பெயர் எதற்கு?

"பாதுகாப்புச் சங்கத்திடம் ஹைதராபாத் பிரச்னையைக் கொண்டுபோகத் தாம் விரும்பவில்லை என்கிறார் நிஜாம் மன்னர். அப்படியிருந்தும், இந்தப் பிரச்னை பாதுகாப்புச் சங்கத்திடம் சென்றுவிட்டது. நிஜாம் வேண்டாம் என்றால், அது, இந்தப் பிரச்னையை ஆராய்ந்து பார்க்கப்போகிறோம் என்று விடாப்பிடி செய்கிறது. உண்மையிலே அங்கு பாதுகாப்புக்கான (மத்தியஸ்த) வேலை எதும் நடக்கவில்லை. அரசியல் குளறுபடிதான் நடக்கிறது. அங்கு நடக்கும்



விவாதங்களைக் கவனித்தால் உலக சமாதானத்துக்குப் பதில் சர்வதேச சங்கடங்கள்தான் வளரும் என்று தோன்றுகிறது. இந்தச் சங்கத்தில் நாம் அங்கம் வகிப்பதில் என்ன பயன்?

"ஹைதராபாத் சிக்கலை நாம் மிகவும் சுலபமாகத் தீர்த்து விட்டோம். புண்ணைக் கீறிக் குணப்படுத்துவதுபோல இந்தச் சிக்கல் தீர்ந்துவிட்டது. இரத்தக் களறியில்லாமல், காலதாமதமில்லாமல், சுலபமாக வேலை முடிந்துவிட்டது. ஆனால் இந்தப் பாதுகாப்புக் கௌன்ஸில் எதையாவது சுலபமாகத் தீர்த்திருக்கிறதோ? பாலஸ்தீனம், இந்தோனேஷியா முதலிய பல நாடுகள் இந்தக் கௌன்ஸிலிடம் முறையிட்டுக் கொண்டனவே? சிக்கல்களைத் தீர்க்காவிட்டாலும் சமாதானம் செய்யவாவது இந்தச் சங்கத்தால் முடிந்ததா?

"நம் நாட்டைப் பொறுத்தமட்டில் பேசுவோம். ஹைதராபாத் பிரச்னையைப்போல காஷ்மீரச் சிக்கலையும் நம்மால் மிகச் சுலபமாகத் தீர்த்துக் கொள்ள முடியும். வீணான அவஸ்தையிலிருந்து நம்மை இந்தச் சங்கம் விடுதலை செய்துவிட்டாலே போதும்.

"நம்முடைய மரபும் பண்பும் சிறந்தது. பிற நாடுகளை ஆக்கிரமிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் நாம் ராணுவ பலத்துடன் இருக்கவில்லை. நம்முடைய பண்புக்கும், கலைக்கும் நாகரிகத்துக்குமே அது விரோதமானது. ஆயுத பலத்தினால் எந்த நாட்டையுமே இந்தியா வென்றதாகச் சரித்திரம் கூறவில்லை. நம்முடைய

தார்மிக போதனையினாலும், கலையினாலும், நாகரிகத்தினாலுமே நாம் பழையநாளில் பிற நாட்டினரை வசப்படுத்தியிருக்கிறோம். அஹிம்ஸையின் பலத்தினால் நாம் சுதந்தரம் பெற்றோம். அன்பும், தார்மிக ஆசிரவும், உலக சமாதானமுமே நம்முடைய லட்சியம். இந்த ஆயுதங்களைத்தான் காந்திஜி நமக்குத் தந்தார். ஆகாய விமானப் படையோ, கடற்படையோ நம்மிடம் இல்லை. எந்த நாட்டிலும் ஆயுத பலம் பிரதானமாக இருக்கக்கூடாது என்றே காந்திஜி விரும்பினார். ஐக்கிய நாடுகள் சபையும் அதைத்தான் சொல்கிறது. ஆனால் ஆயுதப் பரிகரணத்துக்கு எந்த நாடும் தயாராக இல்லை. அணுக்குண்டு ஆராய்ச்சியிலும், அதை ஏகபோகமாகச் சேர்த்து வைத்துக் கொள்ளவுந்தான் வல்லரசுகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன. நாம் ஆக்ரமிப்புச் சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், (பிற நாடுகள் ராணுவ பலம் வைத்துக்கொண்டிருப்பதால்) ஆயுதப் பரிஹரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. கோழைத்தனத்திலிருந்து விடுபடக் காந்திஜி நமக்குப் பயிற்சி அளித்திருக்கிறார். தேசத்தின் தற்காப்புக்காக, பிற நாடுகளின் படையெடுப்பைத் தடுப்பதற்காக நாம் ராணுவம் வைத்துக்கொள்ளத்தான் வேண்டும். காந்திஜியின் உபதேசப்படி நாம் திரிகரண சுத்தியுடன் அஹிம்ஸையை அனுஷ்டித்தால் அப்போது, இந்தியாவின் சமுதாய வாழ்க்கை மட்டுமல்ல, உலக சமுதாயத்தின் வாழ்க்கையே மாறிவிடும்."

## ஐக்கிய இந்தியா

தேசம் முழுவதும் புள்ளி புள்ளியாகக் கிடந்த ஐநூறுக்கும் அதிகமான சமஸ்தானங்களில் தனி நிர்வாகம் மறைந்து, யூனியன் ஆட்சியோ, மாகாணங்களுடன் இணைப்போ ஏற்பட்டதும் 'இந்திய சர்க்காரின் நிர்ப்பந்தத்தால் ஏற்பட்ட நிலைமை இது' என்று ஒரு சாரார் கூறினார்கள். சமஸ்தான மன்னர்களின் மனமாறுதலே இதற்குக் காரணம் என்பது சமீபத்தில் ஸர்தார் படேல் நாகபுரியில் செய்த பிரசங்கம் ஒன்றிலிருந்து தெளிவாகியது. ஸர்தார் படேலின் சட்ட ஞானத்தையும், அவர் செய்யும் அரசியல் நிர்வாகத்தையும் பாராட்டி நாகபுரி சர்வகலாசாலையினர் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவிக்க நிச்சயித்தார்கள். 1948-ஆம் ௵ நவம்பர் ௴ ஆரம்பத்தில் நடந்த சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவுக்கு விஜயம் செய்து நேரில் டாக்டர் பட்டத்தை ஸர்தார் படேல் பெற்றுக்கொண்டார். மாகாணங்களுடன் சேர்ந்து வாழ முதல் முதலாக ஒரிஸ்ஸா மாகாண சமஸ்தானங்களும், அவற்றைப் பின்பற்றி மத்திய மாகாணத்திலுள்ள சில சமஸ்தானங்களும் முன் வந்தன. ஆகவே அந்த நிகழ்ச்சி எப்படி நேர்ந்தது என்பதைப்பற்றி நாகபுரியில் நடந்த மாகாண சமஸ்தான நிர்வர்க ஆலோசனைக் கூட்டத்தை ஆரம்பித்து வைக்கும்போது படேல் குறிப்பிட்டார். அவர் சொன்னார்:

"இப்போது மத்தியமாகாணத்துடன் சேர்க்கப்பட்ட பஸ்தார் சமஸ்தானத்தைப்பற்றிச் (இந்தச் சமஸ்தானம் ஐதராபாத்துக்குக் கிழக்கே இருக்கிறது.)

சில ருசிகரமான தகவல்கள் கிடைத்தன. கனிப் பொருள்களும் இயற்கை வளங்களும் நிறைந்த சமஸ்தானத்தை, சமஸ்தானாதிபதி இந்நச் நிஜாமிடம் அடமானம் வைக்கப் போவதாகப் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருப்பதாகவும், இந்திய சர்க்கார் தலையிடாவிட்டால் நிலைமை மோசமாகி விடும் என்றும் தெரிந்தது. தகவல்கள் ஆதாரபூர்வமானவை என்பது மேலும் விசாரித்ததில் தெரிந்தது. அந்த சமஸ்தானாதிபதி இளைஞர், உலக அனுபவம் இல்லாதவர். சமஸ்தான திவானோ ஒரு வெள்ளைக்காரர். நான் அரசியல் இலாகாவில் இந்தச் சமஸ்தானத்தைப்பற்றிப் பூரா விபரம் கேட்டேன். (இந்த அரசியல் இலாகா வைசிராயின் நேர் நிர்வாகத்திலிருந்தது. இடைக்கால சர்க்கார் ஏற்பட்டுச் சில மாதங்களுக்குப்பிறகு மந்திரி சபையின் நிர்வாகத்தில் வந்தது. 1947ஞு ஜூலை மாத மத்தியில் இந்த இலாகா சமஸ்தான இலாகாவாக மாறிற்று) ஆரம்பத்தில் அவர்கள் தட்டிக் கழித்தார்கள். நான் வற்புறுத்தியதன்மேல், இலாகாவுக்குத் தெரிந்தே இந்தப் பித்தலாட்டம் நடப்பதாகத் தெரிந்தது.

வெள்ளையர் நிர்வாகம் மாறிவிடுவதற்குள்ளேயே, இந்த அடைமானத்தைப் பூர்த்தி செய்து ஹைதராபாத்துக்கு உதவி செய்ய வெள்ளையர்கள் ஆத்திரப்பட்டுக்கொண்டிருந்தார்கள். சமஸ்தான மக்களுடைய நன்மைக்குப் பாதகமாக நாம் ஏதும் செய்யக்கூடாது என்றும் அடைமானம் செய்யக்கூடாது என்றும் தடுத்தேன். சமஸ்தானாதிபதி ஒரு மைனர் என்றும் அவருக்குக் 'கார்டியன்' என்ற முறையில் அரசியல் இலாகா, அவருடைய நன்மையை உத்தேசித்தே, சமஸ்தா



னத்தை அடைமானம் வைக்கவும், பத்திரத்தில் கையெழுத்திடவும் அதிகாரம் உண்டு என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. வெள்ளையர் ஆட்சியே மறையும்போது, இவர்களுடைய தர்மகர்த்தா சேவைக்கு இடம் எங்கிருக்கிறது? ஆட்சி முறை மாறப் போவதால், அரசியல் இலாகாவின் பாதுகாப்பிலிருக்கும் மைனர்களைப்பற்றி வெள்ளை அதிகாரிகள் கவலைப் படவேண்டாம் என்றும், இப்போது இந்திய சர்க்கார்தான் அவர்களுடைய 'கார்டியன்' ஆகையால் சமஸ்தான மக்களுடைய சம்மதத்தையும் பெற்று, சமஸ்தானாபதியின் நன்மைகளைக் கவனிக்க எங்களால் முடியும் என்று நான் சொல்லிவிட்டேன். ஆனாலும் அந்த வெள்ளையர்கள் விஷமம் செய்யாமல் இல்லை. அரசியல் இலாகா கலைக்கப் படுமுன்னேயே, அந்தச் சமஸ்தானாதிபதி மைனர் பிராயம் நீங்கிவிட்டதாகச் சொல்லி, அவரிடம் சமஸ்தான நிர்வாகத்தை ஒப்பித்தார்கள்.

அதன் பிறகு நான் அவரை டில்லிக்கு வரவழைத்துப் பேசினேன். உலகமறியாத அந்த வாலிபரைப் பார்க்க எனக்கு வருத்தமாகத்தான் இருந்தது. அவருடைய நன்மை என்று கூறி, அவருக்கு விரோதமாக ஒரு காரியத்தைச் செய்து, மாற்றான் கையை வலுப்படுத்தத் துணிந்த அரசியல் இலாகாவின் சூழ்ச்சியைக் காண எனக்கு ஆத்திரம்தான் வந்தது. அடைமானப் பத்திரத்தில் சமஸ்தானாதிபதியைக் கையெழுத்திடச் சொல்வதே பாவம் என்று எனக்குத் தோன்றிற்று.

அரசியல் இலாகாவின் மூலம் வெள்ளையர்கள் எவ்வளவு ஆபத்தானதும், தேசத்துரோகமான செய்கைகள் செய்துவருகிறார்கள் என்று தெரிந்ததுமே இவர்கள் எல்லாரையும் எவ்வளவு சீக்கிரம் கப்பலேற்ற

முடியுமோ அவ்வளவும் நல்லது என்றே எண்ணினேன். நம் நாட்டிலே பிளவும் சூழ்ச்சியும் செய்துகொண்டே இருக்கவும், வெள்ளையர் நலத்துக்கான காரியங்களை எதேச்சையாகச் செய்யவும் இந்த இலாகா பெரிதும் பயன்பட்டுக்கொண்டிருந்தது. இவர்களால்தான் தேசம் குட்டிச்சுவராகிவிட்டது. தேசத்தைத் துண்டாடினாலும் சரி, வேறு மகத்தான தியாகம் செய்ய நேர்ந்தாலும் சரி, முதலில், அதிகாரத்திலுள்ள ஒவ்வொரு வெள்ளையனையும் இந்த நாட்டிலிருந்து வெளியேற்றிவிட வேண்டுமென்றே முடிவு செய்தேன். அத்துடன் ஐக்கியப்பட்ட இந்தியாதான் வலிமை பொருந்திய நாடாக வாழமுடியும் என்றும் உடனே பல சமஸ்தானங்களைக் கலைத்து ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரவும் நிச்சயித்துக் கொண்டேன். சமஸ்தானாதிபதிகள் இதற்குச் சுலபமாக இணங்குவார்களா என்ற சம்சயம் எனக்கு இல்லாமல் இல்லை.

"நாடு சுதந்தரம் பெற்று, நான் சுதந்தரமாக சமஸ்தான இலாகாவைக் கவனிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததும் நான் முதல்முதலாக ஒரிஸ்ஸாவுக்குச் சென்று அங்குள்ள சமஸ்தானாதிபதிகளைக் கூப்பிட்டுப் பேசினேன். ஐக்கியத்தினால்தான் நாம் முன்னேற முடியுமென்றும், ஒரிஸ்ஸாவிலுள்ள எல்லா சமஸ்தானங்களிலும் நிர்வாகத்தைக் கலைத்து மாகாணத்துடன் சேர்த்துவிட வேண்டும் என்றும் நான் தெளிவாக அவர்களுக்குச் சொன்னேன். நான் எவரையும் கட்டாயப் படுத்தவில்லை யென்றும் தேசத்தின் நன்மையைப் புரிந்துகொள்ளும் ஒவ்வொருவரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் போதும் என்றுமே



சொன்னேன். சிறு சமஸ்தானாதிபதிகள் உடனே இணங்கிவிட்டார்கள். பெரிய சமஸ்தானாதிபதிகளோ திகைத்தார்கள். ஆலோசிப்பதற்கு அவகாசம் கொடுத்துவிட்டு நான் டில்லிக்குச் செல்ல விமான நிலையத்துக்குச் சென்றேன். ஆனால் நான் புறப்படு முன்னேயே அவர்கள் மனம் மாறி ஒப்பந்த நகலில் கையெழுத்திட்டு என்னிடம் கொடுத்துவிட்டார்கள். பிறகு நான் நாகபுரிக்கு வந்தேன். அங்கும் சத்தீஸ்கார் சமஸ்தானாதிபதிகளைக் கூப்பிட்டுப் பேசினேன். அவர்களிடமும் இந்த இணைப்புத் திட்டத்தினால் ஏற்படும் லாப நஷ்டங்களை எடுத்துச் சொன்னேன். அவர்கள் உடனே தங்களுடைய சம்மதத்தைத் தெரிவித்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள்.

"சமஸ்தானாதிபதிகளுடைய இந்த மனமாறுதலைக் கண்டு பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் திகைத்தார்கள். ஏதோ அற்புதம் நடந்துவிட்டதாக இங்குள்ள பிரமுகர்கள் எண்ணினார்கள். இதில் என்ன ஆச்சரியம்? தேசம் விடுதலை பெற்றதும், தங்களுடைய தேசபக்தியைத் தெரிவிக்க சமஸ்தானாதிபதிகளும் உசிதமான காரியத்தைச் செய்தார்கள். அவர்களுடைய புத்திசாலித்தனத்தையும் தேசபக்தியையுமே இவை எடுத்துக்காட்டுகின்றன. கத்தியவாடில் ஏற்பட்ட சௌராஷ்டிரா யூனியன்தான் நம்முடைய லட்சியத்தின் வெற்றியின் சிகரம் என்று குறிப்பிட வேண்டும். சிறு சிறு சமஸ்தானங்களாக, இந்தியாவிலுள்ள மொத்த எண்ணிக்கையில் பாதிக்கு மேல்பட்ட சமஸ்தானங்கள் இங்குதான் இருக்கின்றன. பல்வேறு விதமான சமஸ்தானங்களை ஒன்று சேர்ப்பது அசாத்

தியமான காரியம்தான். நான் அந்தச் சமஸ்தானாதிபதிகளைச் சந்தித்துப் பேசினேன். அங்குள்ள பொது ஜனத் தலைவர்களைவிட சமஸ்தான அரசர்களே பெரிதும் ஒத்துழைத்தார்கள் என்று சொன்னால் தகும். தக்ஷிண தேச சமஸ்தானாதிபதிகளும் தாங்கள் அமைக்க விரும்பிய சமஷ்டி சர்க்காரைக் கலைத்துவிட்டு, பம்பாய் மாகாணத்துடன் தம்தம் சமஸ்தானங்களை இணைத்துவிட்டார்கள்.

"ஜனநாயக முறையும், பொறுப்பாட்சிக் கிளர்ச்சியும் வலுத்துவரும் இந்த நாட்களில் வலுக்கட்டாயமோ, பரபரப்போ இல்லாமல் மிகவும் சுலபமாக இதை எல்லாம் எப்படிச் சாதித்தோம்? அரசர்கள் காலப் போக்கைத் தெரிந்துகொண்டார்கள் என்றும் சொல்லலாம். நான் ஒரிஸ்ஸாவுக்குச் சென்றபோது, மயூர்பஞ்ச் மகாராஜர் தம்முடைய சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி வழங்கிவிட்டதாகவும், மக்களுடைய சம்மதமின்றி இந்த இணைப்புத்திட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட தாம் சம்மதப்படவில்லை என்றும் கூறினார். அதை ஏற்றுக்கொண்டாலும், ஒதுங்கி நிற்பதில் ஆபத்திருக்கிறதென்று அவருக்கு நான் எச்சரிக்கை செய்தேன். துரதிருஷ்டவசமாக, சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி வழங்கியதிலிருந்து சமஸ்தானத்துக்குள்ளேயே அவரால் செல்ல முடியவில்லை. கடைசியில் மனம் கசந்து அவர் என்னை அணுகினார். நிர்வாகத்தை மாகாண சர்க்காரிடம் ஒப்பித்துவிட விரும்புவதாகச் சொன்னார். இப்போது, அவருடன் சமஸ்தான மக்களும், சமஸ்தான பிரதமரும்கூட இணைப்பு நிர்வாகமே சிறந்தது என்று ஒப்புக்கொள்கிறார்கள்.



"பொதுவாகவே, இந்த மாறுதலால், சமஸ்தான மக்களும், சமஸ்தானாதிபதிகளும் திருப்தியடைந்திருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். சமஸ்தான அரசர்களுடைய கௌரவத்துக்கும் கண்ணியத்துக்கும் ஹானியின்றி நிர்வாக மாற்றம் நடைபெற்றது. இப்போதுள்ள மாகாண அரசியலால் தங்களுக்குத் திருப்தி என்பதை மக்களும் அரசர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சமஸ்தானங்களில் பெரியதும், கடைசியாக இந்தியா யூனியனில் சேர்ந்ததும், ஹைதராபாத்தான். அங்கு நடந்த நிகழ்ச்சிகளால் விசேஷ மாறுதலேற்பட்டுவிட்டது என்று சொல்வதற்கில்லை. தேசத்தின் படத்தில்தான் மாறுதலேற்பட்டிருக்கிறது. காலப்போக்கில்தான் நிலைமை சீர்திருந்தும். அரசியல் நிகழ்ச்சிகளைவிட மன மாறுதலால்தான் விசேஷ பலனும் ஐக்கிய பாவமும் ஏற்படுகிறது.

"நாம் அடிக்கடி ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுகிறோம். கோஷங்களால் ஜனநாயக சர்க்காரை ஸ்தாபித்துவிட முடியாது. ஜனங்களுடைய அறிவு வளர்ச்சியினாலும், பொறுப்புணர்ச்சியினாலும் பண்பினாலுமே, ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிக்க முடியும். தனிப்பட்ட சர்க்காரால் ஜனங்களுக்குச் சுலபமாக நன்மைகள் செய்யமுடியும். ஆனால் அதற்கு மக்களுடைய விசுவாசமும் நம்பிக்கையும் பெறவேண்டும். பாமரமக்களுக்கு அரசியல் தத்துவங்களைப் புரிந்துகொள்ளும் சக்தி கிடையாது. ஜனநாயக ஆட்சியினால் ஏற்படும் நன்மைகளைப் புரிந்துகொள்ள அவர்களால் முடியாது என்பதற்காக அவர்களுடைய அரசியல் உரிமைகளை பறிக்கக்கூடாது.

"இப்போது சாதாரணப் பதவிக்குக்கூடப் போட்டி போடும் மனோபாவம் நம்மில் பலருக்கு வளர்ந்திருக்கிறது. நாட்டில் திறமையான நிர்வாகம் ஏற்பட எத்தனையோ இளைஞர்களுடைய சேவை அவசியம். அதற்குத் தங்களைத் தகுதியாக்கிக் கொள்வதைவிட அதிகார மோகம் கொண்டு அலைவதால் மட்டும் பயனில்லை. கட்டுப்பாடு, ஒழுக்கம், தார்மீக வாழ்வு, இவற்றால் நாம் மேன்மையடையவேண்டும். அதனால் நாம் பயன் பெறுவதுடன் ஆசிய நாடுகளுக்கே வழி காட்டும் ஆற்றல் பெறுவோம். நம்முடைய லக்ஷியம் உயர்ந்ததாக இருக்க வேண்டும். உடனடியாகப் பலன்தரும் சில அல்ப பதவிகளுக்கு நாம் ஆசைப் படுவது உசிதமல்ல."

## கர்மவீரன்

காந்தி சாம்ராஜ்யத்தில் படேல் ஒரு சிற்றரசன் காந்திய ராணுவத்துக்கோ அவர் தளபதி. காங்கிரஸ் மகா சபையின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு காந்திஜி ஒரு முடிசூடா மன்னராகவே வாழ்ந்தார். ஆனால் அவருடைய ஆணைகளை நிறைவேற்றி வைக்கும் தலைவர்களோ பொது மக்களின் விருப்பு வெறுப்புக்கு ஆளாக நேர்ந்தது. காந்திஜியின் வாழ்க்கையிலே இரகசியம் கிடையாது அவர் அன்பையும் அஹிம்ஸையையும் சத்தியத்தையும் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டவர். பற்றற்ற வாழ்க்கையும் பிறருடைய நல்வாழ்க்கையில் கருத்தும் கொண்டு காந்திஜி வாழ்ந்தார். அவர் சமூகத்தில் ஒருவராக இருந்தாலும், வாழ்க்கையின் இன்ப துன்பங்



கள் அவரைப் பீடிக்கவில்லை. அவர் மக்களின் நடுவே யிருந்தும் தனிப்பட்டவராகவே காணப்பட்டார். ஆனால் அவர் தளகர்த்தர்களோ அப்படியில்லை. காந்திஜியின் உபதேசங்களை வாழ்க்கை விரதமாக ஏற்றுக்கொண்டவர்களும், அவருடைய ஆணையைப் போர்ச் சாகஸமாக ஏற்றுக்கொண்டவர்களும் சமூகத் தின் பிணைப்பிலிருந்து விடுபடாமலே வாழ்கிறார்கள். ஆகவே, மக்களின் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் அவர் கள் ஆளாகவேண்டியதாயிற்று.

காந்திஜியின் நட்புக் கிடைத்த பிறகு படேலின் வாழ்க்கையே மாறிவிட்டது. நாடு சுதந்தரம் பெற்று நல்லாட்சியும் அமைய வேண்டும் என்பதே காந்திஜி யின் கனவு. நல்லாட்சியைப் பற்றி எண்ணும்போ தெல்லாம் காந்திஜிக்கு, ராமனுடைய வாழ்வும், அவ னுடைய ஆட்சி முறையும்தான் நினைப்பு வரும். ராம னுடைய நேர்மையும், தர்மமும், தயையும், நீதியும் சிறப்பும் நிறைந்த அவனுடைய அரசியல் நிர் வாகத்தையும் காந்திஜி எண்ணி எண்ணி வியந்தார். மீண்டும் பாரத வருஷத்தில் ராமராஜ்யம் போன்ற அரசாங்க முறை ஏற்பட வேண்டும் என்றே அவர் ஆசைப்பட்டார்.

காந்திஜியின் லட்சிய வீரனாக ராமனைக் குறிப்பிட் டால், படேலின் லட்சிய வீரனாக ஹனுமானைக் குறிப் பிடுவதே பொருத்தமாகும். ஹனுமானைப் போலவே ஆடக்கமான வாழ்க்கையைப் படேல் நடத்திவரு கிறார். பாரத நாட்டின் சுதந்தரப் போராட்டத்தில், காந்திஜியை கதாநாயகனாக்கிவிட்டால், படேல், பிர தான உப பாத்திரமாகவே இருப்பார். ஹனுமானின் பிரவேசத்துக்குப் பிறகுதான் ராமாயணத்தில் ஓட்ட

மும் துடிதுடிப்பும் ஏற்படுகிறது. அதேபோல, நம்முடைய விடுதலைப் போராட்டத்தில், படேலின் பிரவேசத்துக்குப் பிறகுதான் உத்வேகம் ஏற்பட்டது. காந்திஜியின் புது முறைகளைப்பற்றி உலகம் வியந்து கொண்டிருந்தபோது, சாத்தியமான முறைகள் இவை என்று செயலில் காட்டிய பெருமை படேலையே சேரும். காந்திஜி, பகவத்கீதையையும் ராமாயணத்தையும் தினசரி பாராயணம் செய்தார். துன்பத்துக்கு மாற்று மருந்து ராமநாமம் என்று போதித்தார். ஆனால் படேலுக்கோ, மதக்கிரகந்தங்களைத் தொட்டுப் பார்க்கக்கூட நேரமில்லை. அவருக்கு ஆண்டவனிடம் திடமான பக்தியுண்டு. அவனுடைய செயலைப்பற்றி ஆராய்ச்சி நடத்த அவர் விரும்பவில்லை. ஹனுமானைப் போல சேவையில் அவர் மனம் செலுத்தினார். ராமனும் ஹனுமானும்போல காந்திஜியும் படேலும் நெருங்கிப் பழகி வாழ்ந்தார்கள்.

"காந்திஜியும் நானும் ஒன்றாக எண்ணினோம்; ஒன்றாக வாழ்ந்தோம். அவர் சொல்வதை நான் கண்மூடித் தனமாகப் பின்பற்றுவதாகச் சிலர் என்னைக் குறைகூறுவதுண்டு. அவருடைய ஆணைகளை நான் ஆய்ந்து பார்த்தே ஏற்றுக்கொள்வேன். ஆனால் பல தடவைகளில் நாங்கள் இருவரும் ஒரேமாதிரியே எண்ணுவோம். பரஸ்பரம் பேசிக்கொள்ளும்போது எங்கள் மன ஒற்றுமையைப்பற்றி நானே வியப்பதுண்டு. நாங்கள் இருவரும் ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாகவே இவ்வுலகிலிருந்து மறைவோம் என்று நான் எண்ணியிருந்தேன். காந்திஜியிடமும் இதை நான் வெளியிட்டதுண்டு. ஆனால் ஆண்டவனுடைய இச்சை வேறுவிதமாக இருந்தது. கடைசி நிமிஷத்தில் கூட நாங்கள் சந்தித்தோம். பேசினோம். அவருடன் பேசிவிட்டு நான் வீடு திரும்பினேன். அதன்பிறகு அவர் வேறு யாருடனும் பேசவில்லை. பிரார்த்தனைக்குச் சென்றார். அங்கே யமனை ஆலிங்கம் செய்து கொண்டார்.



"என்னுடைய ஆசை பலிக்கவில்லை. அவர் போய் விட்டார். நான் இருக்கிறேன். அவருடைய ஆசைக் கனவான ஐக்கிய இந்தியாவும், ஆட்சிமுறையும் அமைப்பதிலே என் வாழ்க்கையைக் கழிப்பேன்" 1948ஆ நவம்பர் மாதக் கடைசியில் காசியில் நடந்த பொதுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு படேல் பேசினார். தேசிய நிர்மாண வேலையில் கதருக்கும், கிராமப் புனருத்தாரணத்துக்கும் காந்திஜி முக்கியத்துவம் கொடுத்தார். ஆனால் அவற்றைவிடச் சிக்கலானதும், அபவாதத்துக்கு ஆளாகக்கூடியதுமான அரசியல் துறையின் தலைமைப் பதவியை படேல் ஏற்றுக்கொண்டார். சட்டசபைப் பிரவேசத்தையும் ஒரு போர்முறையாக அவர் எண்ணியதேதான் அதற்குக் காரணம்.

படேல் தோன்றிய பரம்பரை வீரத்துக்கும் சாகஸத்துக்கும் பிரசித்தமானது. சுதந்தர முரசு கொட்டி ஆங்கிலேயரை எதிர்த்து நின்ற ஜான்ஸி ராணி படையில் சேர்ந்து சேவை செய்தவர் படேலின் தகப்பனரான ஜாவேர்பாய். சிறுவயதிலே தந்தையின் போர்ச்சாகஸங்களைக் கேட்டுக் கேட்டு, படேல் வியப்படைந்தாம். வயது வந்ததும், தானும், அந்நியரை எதிர்த்து நின்று போராடவேண்டும் என்று அவர் அந்த நாளில் எண்ணுவதுண்டாம். பின்னைப்பிராயத்தில் ஊறி வளர்ந்த வெறுப்பும் சாகஸமும் காந்திஜியின்

தலைமையில் தேசவிடுதலைக்கான ராஜதந்திரச் செயல்களாக உருவடைந்தன. சிறு வயதிலேயே, வல்லபபாயின் முரட்டுத்தனத்தைக் கண்டு பள்ளி ஆசிரியர்கள் மருண்டார்கள். அவருடைய மன உறுதியைக் கண்டு பெரியோர்கள் வியந்தார்கள். பிற்காலத்திலும் அவருடைய செயல்களைக் கண்டு தேசமக்களும், அந்நிய நாட்டவர்களும், வியப்பும் மருட்சியும் அடைந்தார்கள். வல்லபபாயின் பிள்ளைப்பிராயத்தைப்பற்றி எத்தனையோ சம்பவங்களை குஜராத்தி எழுத்தாளர்கள் குறித்து வைத்திருக்கிறார்கள்.

சிறுவன் வல்லபபாய்க்குக் கையிலே சிரங்கு. என்ன என்னவோ மருந்துவைத்துக் கட்டினார்கள். பலனில்லை. நாளுக்குநாள் சிரங்கு பெரிதாகிக்கொண்டே வந்தது. வலியும் அதிகரித்தது. யாரோ ஒருவன் இதற்குச் சூடு போட்டால்தான் குணமாகும் என்றான். அத்துடன் பக்கத்தூரிலிருக்கும் பரிகாரியிடம் சென்று சூடு போட்டுக் கொள்ளவும் சொன்னான். பையன் அந்தப் பரிகாரியிடம் சென்றான். பரிகாரி வைத்தியம் செய்வதற்காக கம்பியை அனலில் போட்டுவைத்தான். ஆனால் சிறுவன் கையிலே காய்ச்சிய இரும்பை இழுக்க அவனுக்கு மனம் வரவில்லை. இந்தக் குழந்தை எப்படிச் சகித்துக்கொள்ளும் என்று திகைத்தான். அவனுடைய திகைப்பைப் பையன் புரிந்துகொண்டான். 'இங்கே கொண்டா. உன்னால் முடியாவிட்டால் நானே இழுத்துக் கொள்கிறேன்' என்று கம்பியை எடுத்துத் தானே வைத்துக்கொண்டான். சுறுசுறுவென்று நிணம் நாற்றம் எடுத்தது. பக்கத்திலிருந்தவர்கள் விழித்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருக்க அந்தப் பையனோ ஏதுமே நடக்காததுபோலச் சும்மா நின்று கொண்டிருந்தான்.



மேல் படிப்புக்காக வல்லபபாய் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்துக்குச் செல்ல நேரிட்டது. பேட்லாத் என்னும் அந்தக் கிராமத்தில் அவர் வேறு சில சிறுவர்களுடன் வாக்ஜிபாய் என்ற வாத்தியார் வீட்டிலேயே தங்கிப் படித்துக்கொண்டிருந்தார். எல்லாப் பையன்களையும் தன் குழந்தைகளைப் போலவே பாவித்து, வாக்ஜிபாய் உண்டியும் படிப்பும் கொடுத்தார். சிறுவர்களும் வேற்றுமையின்றி தம்தம் வீட்டிலிருப்பது போலவே எண்ணி, வீட்டு வேலையில் பங்கெடுத்துக் கொண்டார்கள். சிறுவன் வல்லபபாய்க்குப் பால் என்றால் அதிகம் பிடிக்கும். ஒரு சமயம் வாத்தியார் வீட்டிலுள்ள எருமை, பால் கறக்கவில்லை. சிறுவன் வல்லபபாய் எப்போதும் மௌனமாக இருப்பான். பிடிவாதம் செய்வதுமில்லை. ஆகவே இருக்கும் பாலை மற்றச் சிறுவர்களுக்குக் கொடுத்துவிட்டாள் குருபத்னி. சாப்பிடும்போது வாக்ஜிபாய், "இன்று ஏன் வல்லபபாய்க்குப் பால் தரவில்லை" என்று கேட்டார்.

அவர் மனைவி வீட்டிலுள்ள நிலைமையைச் சொல்லவில்லை. விளையாட்டாக, "வல்லபபாய்க்குப் பால் அதிகம் பிடிப்பதில்லை" என்று சொல்லி விட்டான். ஆனால் அது அந்தச் சிறுவன் மனசில் ஆழமாகப் பதிந்துவிட்டது. மறுநாள் வழக்கம்போல குருபத்னி வல்லபபாய்க்குப் பால் கொடுத்தாள். "எனக்குப் பால் வேண்டாம் அம்மா, பிடிக்கவில்லை." என்று விநயமாக மறுத்துவிட்டான் பையன். அவள் திகைத்துப் போனாள். பையனுடைய பிடிவாதத்தை மாற்ற என்னவோ செய்தாள். கெஞ்சினாள், கோபித்துக்கொண்டாள். ஏதும் பலனில்லை. அதன்

பிறகு வல்லபபாய் அந்த வீட்டில் பல மாதங்கள் தங்கியிருந்தார். ஆனால் பாலைச் சாப்பிடவேயில்லை.

வேண்டாம் என்ற உறுதி ஏற்பட்டுவிட்டால் வல்லபபாயால் எதையும் விட்டுவிட முடியும். சபலம் என்பதே அவரிடம் கிடையாது. வக்கிலாக இருக்கும்போது மாலை வேளைகளில் சீட்டாடிக்கொண்டு உல்லாசமாக இருந்தவர், திடீரென ஒருநாள் அங்கு செல்வதையே நிறுத்திவிட்டார். மாலை நேரத்தில் பொழுது போக்க வேறு வேலை அவருக்குக் கிடைத்துவிட்டது. வீட்டுக்கு வரும் குஜராத் விவசாயிகளின் துயரக் கதைகளைக் கேட்டுப் பரிகாரம் தேடுவது அவருக்கு சிறந்த பொழுது போக்காகி விட்டது.

வல்லபபாய்க்குச் சிகரெட் பிடிப்பதில் மோஹம் அதிகம். மௌலானா அபுல் கலாம் ஆஸாதும், பண்டித மோதிலால் நேருவும்கூட சிகரெட் பிரியர்கள் தான். விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட பிறகும்கூட அவர்கள் 'சிகரெட்' பிடித்துக்கொண்டு தானிருந்தார்கள். சிறையிலிருக்கும்போது 'சிகரெட்' குடிக்க முடியாது. வெளியே வந்ததும் அவர்கள் மீண்டும் பழக்கத்து அடிமையாகி விடுவார்கள். உப்பு சத்தியக்கிரக காலத்தில் படேல் சிறை வாசத்தை ஏற்கவேண்டியதாயிற்று. அவரைச் சிறைக்கு அழைத்துச் சென்ற போலீஸ் அதிகாரி, சிகரெட் பெட்டியைப் படேலிடம் நீட்டினார். அவரும் வாங்கிக் கொண்டார். அப்போது போலீஸ் அதிகாரி சொன்னார்: "வேண்டுமானால் இன்னும் சில எடுத்துக்கொள்ளுங்கள். இன்னும் மூன்று மாசங்களுக்கு உங்களுக்கு ஏதும் கிடைக்காதே."



அவர் விளையாட்டாகத்தான் சொன்னார். அதற்குப் படேல் சொன்னார். "வேண்டாம், இதே போதும் இனி 'சிகரெட்' குடிக்க வேண்டியிருக்காது."

மூன்று மாத சிறைத்தண்டனைக்குப் பிறகு அவர் வெளியே வந்தார். ஆனால் பிறகு சிகரெட்டைக் கையாலும் அவர் தொடவேயில்லை. 'பழக்கத்து அடிமை' என்ற வார்த்தை அவரிடம் பொய்த்து விட்டது.

படிப்பை உத்தேசித்துப் பள்ளிக்கூடத்துக்குப் பள்ளிக்கூடம் போனதைவிட ஆசிரியர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் படேல் பல பள்ளிக்கூடங்களை மாற்ற வேண்டியதாயிற்று.

நாடியாத் என்னும் ஊரில் வல்லபபாய் படித்துக் கொண்டிருந்தார். அவருடைய வகுப்பு ஆசிரியர் பிள்ளைகளுக்கு புத்தகம் பென்ஸில் இவற்றை வாங்கிக் கொடுத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார். வல்லபபாய்க்கு இது தெரியும். இருந்தாலும் அவர் ஒரு சமயம் கடைத்தெருவில் போய் நோட் புத்தகம் ஒன்றை வாங்கினார். அதற்காக ஆசிரியர் அவரைக் கடிந்துகொண்டார்.

மறு நாள் பள்ளிக்கூடம் ஆரம்பித்ததும் ஆசிரியர் வல்லபாயைக் கூப்பிட்டு "இன்று எங்கே போனாய்." என்று கேட்டார்.

"கடைத்தெருவுக்கு ஸார்"

"ஏதுக்கு"

"பென்ஸில் வாங்க"

"புதிய பென்ஸிலா வாங்கினாய்? நேற்றே கடிந்து கொண்டேனே, பள்ளிக்கூடச் சட்டம் உனக்குத் தெரியாதா?"

"தெரியாது, அது என்ன சட்டம்?"

"யாரையாவது கேட்டுத் தெரிந்துகொள்."

'யாரைக் கேட்பது? நீங்களே சொல்லிவிடுங்கள்"

"அப்படியா, பையன்களுக்கு வேண்டிய சாமான்களை வாத்தியாரிடம் கேட்கவேண்டும். அவர்தான் வாங்கித்தரவேண்டும்."

வல்லபபாய் சிறிது நேரம் பேசவில்லை. பிறகு "இது என்ன சட்டம்? இந்தமாதிரி எங்காவது உண்டோ" என்று நிதானமாகக் கேட்டார்.

குருவுடன் எதிர்த்துப் பேசும் அந்தப் பையனைப் பார்த்து மற்ற மாணவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். வல்லபபாயோ அமைதியாக நின்றுகொண்டிருந்தார். வாத்தியார் பொறுமை யிழந்துவிட்டார். "இங்கே உண்டு. இந்தப் பள்ளிக்கூடத்தில் நீ படிக்க வேண்டுமானால் இப்படித்தான் நடக்கவேண்டும்" என்று உறுதியாகச் சொன்னார்.

வல்லபபாய்க்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "குருஜீ, நீங்கள் படிப்புச் சொல்லிக்கொடுக்கத்தான் இருக்கிறீர்கள். வியாபாரம் செய்வதற்கு அல்ல. இனிமேல் இந்த வியாபாரத்தை நிறுத்திவிட்டு எங்களுக்கு கவனமாகப் பாடம் சொல்லிக் கொடுங்கள்."

ஒரு சிறுவன் தனக்குப் புத்திமதி சொல்வதை எந்தப் பெரிய மனிதனும் சகிப்பானா? வாத்தியாருக்கு ஆக்ரோஷம கிளம்பிற்று. வல்லபபாயும் சும்மா இருக்கவில்லை. "குருஜீ, நாளையிலிருந்து நாங்கள் பள்ளிக்கூடம் வரப்போவதில்லை. உங்களுடைய வியாபாரத்தை நிறுத்தினால்தான் வகுப்புக்கு வருவோம்" என்று சொல்லிவிட்டு வெளியேறினார். மறுநாளி



லிருந்து வகுப்பு அறைகள் காலியாக இருந்தன. அந்த வேலை நிறுத்தத்தில் எல்லா வகுப்பு மாணவர்களும் சேர்ந்துகொண்டார்கள். ஆறு நாட்கள் வரையில் பள்ளிக்கூடம் மூடிக் கிடந்தது. கடைசியில் வாத்தியார் தன்னுடைய தவறை உணர்ந்தார். மாணவர்களும் பள்ளிக்கூடம் வந்தார்கள்.

வேறு ஒரு சம்பவம். இது வேறு ஒரு பள்ளிக்கூடத்தில் நடந்தது. ஒருநாள் வாத்தியார் வல்லபபாயைக் கூப்பிட்டார். "என்ன அப்பா, நீ அட்டகாசம் செய்கிறாயாமே, எங்கே பார்த்தாலும் உன்னைப் பற்றியே பேசுகிறார்களே' என்று கேட்டுவிட்டு அவரைக் கண்டித்தார்.

வல்லபபாய் திகைத்துப் போனார். "நானா! நான் என்ன செய்தேன்?" என்று கேட்டார் அவர்.

"என்ன செய்தாயா, நீங்கள் எல்லோரும் வீட்டில் குதித்துக் கொம்மாளம் அடிக்கிறீர்களாமே, வீடே இடிந்துபோய்விடும்போல."

பையன் பயந்துவிடுவான். இனிமேல் சாதுவாக இருக்கிறேன் என்று சொல்லி மன்னிப்புக் கேட்பான் என்றெல்லாம் வாத்தியார் எண்ணினார். ஆனால் பையன் சும்மா இருந்தான். அதைக் கண்டு வாத்தியாருக்குக் கோபம் எல்லைமீறிவிட்டது. வல்லபபாயின் சகாவான ஒரு பையனை, அவனும் வல்லபபாயின் கூட்டாளி என்பதற்காக காலால் உதைத்துவிட்டார். வகுப்பிலே ஒரே கலவரம் ஏற்பட்டுவிட்டது. வல்லபபாய் மற்றவர்களை அழைத்துக்கொண்டு வகுப்பைவிட்டு வெளியேறினார். போகும்போது "குருஜீ, உங்கள் செய்கைக்கு நீங்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்ளவேண்டும். அதுவரையில்

நாங்கள் வகுப்புக்கு வரப்போவதில்லை" என்று சொன்னார்.

"என்ன? வருத்தம் தெரிவிக்கவேண்டுமா? போடா வகுப்புக்கு, உன்னைப்போல எத்தனையோ பேர்களைப் பார்த்தாகிவிட்டது" என்றார் வாத்தியார்.

"குருஜி, கர்வத்தை விட்டுவிடுங்கள். கர்வம் நிறைந்த அரசனான ராவணன்கூட கடைசியில் என்னவானான்?"

சிறு பையனுடைய மிரட்டலுக்கு வாத்தியார் பணிந்துவிடுவது அசாத்தியம் அல்லவா? கோபத்துடன் அவர் வகுப்பைக் கலைத்துவிட்டு வெளியே சென்றார். வல்லபபாய் பையன்களைக் கூப்பிட்டார். நடந்த சம்பவத்தை அவர்களிடம் எடுத்துக்கூறி, வாத்தியார் தன்னுடைய அக்கிரமத்தை எண்ணி வருத்தம் தெரிவிக்குமட்டும் யாருமே பள்ளிக்கூடத்துக்கு வரக்கூடாது என்று கேட்டுக்கொண்டார். பள்ளிக்கூடத்திலுள்ள எல்லா மாணவர்களும் இணங்கினார்கள். மறுநாள் பள்ளிக்கூடம் திறந்திருந்தது. வகுப்புக்களில் வாத்தியார்கள் உட்கார்ந்து இருந்தார்கள். எதிரே காலி பெஞ்சுகள்தான் இருந்தன. ஒரு பையன்கூட பள்ளிக்கூடத்தின் பக்கம் வரவில்லை.

இரண்டு மூன்று தினங்களாயின. இதன் நடுவே கல்வி அதிகாரிக்கு இந்தச் செய்தி எட்டியது. அவர் பள்ளிக்கூடத்துக்கு விஜயம் செய்து நேரில் விசாரித்தார். வல்லபபாய் அவரிடம் சென்றார். நடந்த சம்பவத்தைச்சொன்னார். "வாத்தியார் என்னைக் கடிந்துகொண்டார். அதில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி நான் கேட்கவில்லை. என்னுடைய சகா என்பதற்காக வேறு ஒரு பையனை அவர்



உதைத்தது அநியாயம். அதற்காக அவர் வருத்தம் தெரிவிக்கவேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார்.

சிறு பையனாக இருந்தாலும் அவருடைய கோரிக்கையில் நியாயம் இருப்பதாகவே கல்வி அதிகாரிக்குப் பட்டது. தவிர பள்ளிக்கூடத்தை மறுபடியும் திறப்பதிலும் அவர் ஆவலுற்றார். கல்வி அதிகாரியின் விருப்பப்படி வாத்தியார் வருத்தம் தெரிவித்துக்கொண்டார். மூன்று தினங்கள் வரையில் பள்ளிக்கூடத்தை எட்டிப் பார்க்காத பையன்கள் விடுமுறைக்குப் பிறகு பள்ளிக்கூடத்துக்கு வருவது போல வகுப்புகளில் போய் உட்கார்ந்தார்கள்.

## தொழிலில் நேர்மை

பள்ளக்கூட வாத்தியார்களைப் போல, பிற்காலத்தில் மாஜிஸ்டிரேட்களையும் படேல் பணிய வைத்திருக்கிறார். ராஷ்ட்ரபதி பட்டாபி சீதாராமையா படேலைப் பற்றிக் குறுப்பிடும்போது, 'வெள்ளையர்களின் விபரீதப் போக்குக்கு படேல் ஒரு சிறந்த முறிப்பு மருந்து' என்கிறார். ஒரு சமயம் வெள்ளைக்கார மாஜிஸ்டிரேட்டின் முன்பாக ஒரு கொலை வழக்கில் பிரதிவாதியின் சார்பாக படேல் ஆஜரானார். அந்த மாஜிஸ்டிரேட் மகா திமிர் படைத்தவர். தொழில் முறை மரியாதை என்பது கூட இல்லாமல் அவர் வக்கில்களை உதாசினப்படுத்துவார். அதனால் பிரபல வக்கீல்கள்கூட அவருடைய கோர்ட்டுக்குச் செல்ல யோசிப்பதுண்டு.

'கேஸ் எப்படியும் செஷன்ஸுக்கு வரும்போது பார்த்துக்கொள்ளலாம். இந்த மாஜிஸ்டிரேட்டிடம் போகவேண்டாம் என்று சிநேகிதர்கள் படேலைக்

கேட்டுக்கொண்டனர். இந்தக் கேஸ் போலீஸ் ஜோடிப்பு என்பது படேலுக்குத் தெரியும். அதனால் அவருக்குப் போலீஸ் அதிகாரிகளிடம் ஆத்திரம். அத்துடன் விசித்திரப் போக்குள்ள ஒரு நீதிபதியிடம் போனால் நியாயம் எப்படிக் கிடைக்கும்? போலீஸாரையும் நீதிபதியையும் வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்று படேல் நிச்சயித்துக்கொண்டார்.

ஒரு பணக்கார மகந்து தன்னுடைய வீட்டு வேலைக்காரியைக் கற்பழித்தபிறகு, அவளைக் கொன்றுவிட்டதாகவும்தான் வழக்கு. அந்தப் பணக்கார மகந்துமீது அதிகாரிகளுக்கு ஏற்கனவேயே க்ஷாத்திரம் உண்டு. சமயம் கிடைக்கவே அவரை அழுக்கிவிடவே அவர்கள் முயன்றார்கள். மகந்தின் வீட்டுக்குச் சுமார் முப்பது மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு பாழும் கிணற்றில் அந்த வேலைக்காரப் பெண்ணுடைய பிரேதம் கிடந்ததாகப் போலீஸார் கண்டுபிடித்தார்கள். பிரேத விசாரணையில் பிரேதத்தின் வயிற்றில் ஆறு மாதத்திய சிசு ஒன்று இருப்பதாகத் தெரிந்தது. மகந்து அந்தப் பெண்ணைக் கற்பழித்ததுடன் அவள் கர்ப்பமாகிவிடவே அவமானத்துக்குப் பயந்து அவளைக் கொன்றுவிட்டான் என்றே அதிகாரிகள் தீர்மானித்து, கேஸ் ஜோடித்துவிட்டார்கள். மகந்து நல்ல செல்வாக்குள்ளவர். அந்தப் பக்கத்தில் பொதுஜன ஆதரவு பெற்றவர். போலீஸ் நடவடிக்கையினால் ஊரில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. மகந்துடைய செல்வாக்கை உத்தேசித்து ஒரு விசேஷக் கோர்ட்டில் கேஸை விசாரிக்க சர்க்கார் உத்தரவிட்டார்கள். விசேஷக் கோர்ட் நீதிபதிதான் விசித்திரமான மனப்போக்குள்ள வெள்ளைக்காரர்.



விசாரணை நடந்தது. படேலும் ஆஜரானார்.
போலீஸார் சார்பாக, ஏழு கிராம முன்சீபுகள் சாட்சி
களாக ஆஜரானார்கள். ஒரு குறிப்பிட்ட இரவில்
மகந்து தன்னுடைய மடியில் அந்தப் பெண்ணைப்
போட்டுக்கொண்டு இரட்டைமாட்டு வண்டியில்
போனதாகவும் வழியில் சந்தித்தவர்கள் அவரை
என்ன 'விசேஷம்' என்று கேட்டபோது, அந்தப்
பெண்ணைப் பாம்பு கடித்துவிட்டதால், மந்திரம் போடு
வதற்காக, தாமே அவளை அழைத்துச் செல்வதாக
மகந்து சொன்னதாகவும் ஒவ்வொருவரும் சாட்சி
கூறினார்கள். பெண்ணுடைய பிரேதம் எடுக்கப்பட்ட
பாழுங்கிணறு இருக்கும் ஊரில் ஒரு பிரபல விஷவைத்தி
யன் இருந்ததால் சாட்சிகள் கூறுவது உண்மையைப்
போலவே இருந்தது. ஒருவருக்கு ஒருவர் வித்தியாச
மில்லாமல் எல்லோரும் ஒரே மாதிரியே சாட்சி சொன்
னார்கள். கடைசியாக, பிரேதம் கண்டுபிடிக்கப்பட்ட
ஊரிலிருந்த மணியகாரர் சாட்சி சொல்ல முன் வந்
தார். குற்றவாளியை அடையாளம் கண்டுபிடிக்க,
போலீஸார் நடத்திய அணிவகுப்புக்கு இந்த மணிய
காரரைத் தவிர மற்ற எல்லா சாட்சிகளும் வந்திருந்
தார்கள். எல்லோரும் ஒரே மாதிரி, மகந்தை அடை
யாளம் கண்டுபிடித்து அவரையே அன்றிரவு தாங்
கள் பார்த்ததாகக் கூறினார்கள். எட்டாவது சாட்சி
யையும் போலீஸார் 'சரிக்கட்டி' யிருப்பார்கள் என்றே
மாஜிஸ்டிரேட் எண்ணினார். ஆனாலும் அவருக்கு
ஒரு விசித்திர எண்ணம் தோன்றிற்று. இந்தச் சாட்சி
ஒருவேளை பொய்ச் சாட்சியம் சொன்னால் என்ன
செய்வது என்று அவர் யோசித்தார். உடனே அவர்
கோர்ட்டுக்கு ஒரு பெரிய நிலைக்கண்ணாடியைக் கொண்டு

வர உத்திரவிட்டார். கண்ணாடிக்கு முன்னால் நின்று கொண்டு, தன்னுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டே. கேட்கும் கேள்விகளுக்குச் சாட்சி பதில் சொல்லவேண்டும் என்றார். ஜோடனை சாட்சியாக இருந்தால், அவர் பதில் சொல்லும்போது முகத்தில் பாவம் மாறும். தன்னுடைய முகத்தில் தோன்றும் மாறுதலைக் கண்டதும், சாட்சி மிரண்டு உளறிக் கொட்டுவான். உடனே அவனைக் குறுக்கு விசாரணை செய்து உண்மையைக் கக்கவிடலாம் இப்படி எல்லாம் மாஜிஸ்ட்ரேட் எண்ணினார்.

விசாரணை நடந்தது. இது வரையில் மௌனமாக இருந்த படேல், சாட்சியை தாம் குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று கோரினார். முன்னால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளை மேல் கோர்ட்டில் குறுக்கு விசாரணை செய்து கொள்வதாக அவர் சொல்லியிருந்தார். இப்போது எட்டாவது சாட்சியை மட்டும் விசாரிக்க விரும்பியதும் மாஜிஸ்டிரேட் திகைத்துப் போனார். 'இந்தச் சாட்சியை மட்டும் ஏன் விசாரிக்கவேண்டும்' என்று அவர் படேலைக் கேட்டார்.

'அது என்னுடைய இஷ்டம்' என்று சொல்லிவிட்டு படேல் விசாரணையை ஆரம்பித்தார்.

"ஏன் ஐயா, நீர் மாஜிஸ்டிரேட்டின் கண்ணாடி முன்னாலே நின்றுகொண்டு கோர்ட்டார் உத்தரவுப்படி கண்ணாடியிலுள்ள உம்முடைய முகத்தைப் பார்த்துக்கொண்டுதானே நீர் சாட்சி சொன்னீர். நீர் சொன்ன வார்த்தைகள் அத்தனையும் நிஜம்தானே?"

"ஆமாம்."

"மேல்கோர்ட்டில் இதை ஊர்ஜிதம் செய்வீர் அல்லவா?"



"ஆமாம்"

இந்தக் கேள்விக்கும் கேஸுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று மாஜிஸ்டிரேட்டினால் புரிந்து கொள்ள முடியவில்லை. 'இது என்ன கேள்வி' என்று நடுவில் அவர் குறுக்கிட்டார்.

"இதுவா? மேல்கோர்ட்டில், என்னுடைய சாட்சியமாக, உங்களையும், இந்தக் கண்ணாடியையும் கொண்டுவந்து நிறுத்த வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதற்காகத்தான் இதை ஊர்ஜிதம் செய்கிறேன்" என்றார் படேல் நிதானமாக.

மாஜிஸ்ட்ரேட்டுக்கு மேலே கேஸை நடத்த வேண்டும் என்று தோன்றவில்லை. இடைவேளைக்காக கோர்ட்டை ஒத்திவைத்து விட்டதாகக் கூறிக் கொண்டு எழுந்தார். பிறகு சர்க்கார் வக்கீல் மூலமாக படேலைத் தம்முடன் தேநீர் அருந்த அழைத்தார். படேலுடன் பேசி அவருடைய போக்கை அறிந்து கொண்டு மேலே கேஸை நடத்தவேண்டும் என்பது அவருடைய அவா. ஆனால் படேல் மறுத்துவிட்டார். விசாரணை நடந்து கொண்டிருக்கும்போது மாஜிஸ்ட்ரேட்டுடன் தாம் தனித்துப் பேச விரும்பவில்லையென்று கூறியதுடன், விசாரணை ஆரம்பித்ததிலிருந்து மாஜிஸ்டிரேட் முரட்டுத்தனமாக நடந்துகொண்டு எல்லோரையும் அவமதித்துவிட்டு இப்போது, தேநீர் சாப்பிட உபசரிப்பது விரும்பத்தக்கதல்ல வென்றும் சொல்லிவிட்டார்.

மீண்டும் கோர்ட்டு கூடிற்று. படேல் விசாரணையைத் தொடர்ந்து நடத்தினார். மாஜிஸ்ட்ரேட் கேட்டார்: "இந்தக் கேள்வியினால் எதிர்த்தரப்புக்கு என்ன அனுகூலம் என்று நீர் சொல்லவில்லையே?"

"இந்தக் கோர்ட்டில் சொல்லவேண்டிய அவசியமில்லை. அதைக்கேட்க இந்தக் கோர்ட்டாரும் லாயக்கில்லை. மேல் கோர்ட்டில், கண்ணாடி, சர்க்கார் வக்கீல், மாஜிஸ்ட்ரேட் எல்லோரும் எதிர்த்தரப்பு சாட்சியமாக வரும்போது தெரிந்து கொள்ளலாம்" என்று படேல் மடக்கிவிட்டார்.

கோர்ட்டை அவமதித்துவிட்டதாகப் படேல் மீது குற்றம் சாட்டவே மாஜிடிஸ்ரேட் எண்ணினார். ஆனால் மேலும் விபரீதம் ஏதாகிலும் வளர்ந்துவிடுமோ என்று பயந்து அவர் படேலைச் சமாதானப் படுத்தவே விரும்பினார். இந்தக் கேஸ் வெறும் ஜோடனை என்று படேல் மாஜிஸ்டிரேட்டுக்கு எடுத்துக் காட்டியதுடன், பிரதிவாதியை ஜாமீனில் விடுதலை செய்யவேண்டும் என்றும் கோரினார்.

"இவ்வளவு தூரம் விசாரணை நடத்திய பிறகு எப்படி நான் ஜாமீனில் விடுதலை செய்வது?" என்று திகைப்புடன் கேட்டார் மாஜிஸ்டிரேட்.

"இது விசாரணையா! வெறும் நாடகம் அல்லவா நடத்திவிட்டீர்கள்! போலீஸார் தயாரித்தப்படி ஏழு பேரும் ஓரே மாதிரி சாட்சி கொடுத்திருக்கிறார்கள். இவர்களுடைய சாட்சியை ஏற்றுக் கொண்டால் குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை தான் கிடைக்கும். ஒரு ஜீவனை லட்சியம் செய்யாமல், கோர்ட்டார் முன்னிலையில் மனசறிந்து பொய்ச் சாட்சியம் கூறிய இத்தனை பேரையும் உடனே கைது செய்து விசாரணை நடத்தவேண்டும் என்பதே என்னுடைய விருப்பம். இவர்களை நான் சும்மா விடப் போவதில்லை."

படேலுடைய மனப்போக்கைக் கண்டு மாஜிஸ்டிரேட் மேலே தொடர்ந்து கேஸை நடத்த விரும்ப



வில்லை. மேல் கோர்ட்டில் போய் தாம் ஒரு சாட்சியாக நிற்கவும் அவருக்கு மனசில்லை. பிரதிவாதியை ஜாமீனில் விடுதலை செய்துவிட்டு, சாட்சிகளின் வாக்குமூலம் திருப்தியாக இல்லை என்ற குறிப்புடன் மேல்க் கோர்ட்டுக்கு கேஸை அனுப்பிவிட்டார்.

மேல்க் கோர்ட்டில் வழக்கு விசாரணைக்கு வந்ததும் மாஜிஸ்டிரேட்டின் விசாரணைக் குறிப்பைப் பார்த்த சர்க்கார் வக்கீல் திகைத்துப்போனார். மேலும் படேல், தாம் விரும்பியபடியே சாட்சிகளை வரவழைக்கக் கோரியதும், அவர் கேஸை வாபஸ் பெற்றுக்கொண்டுவிட விரும்பினார். எதிர்த்தரப்பு வக்கீலின் சம்மதம் இல்லாமல் வழக்கை வாபஸ் பெற நீதிபதி இணங்கவில்லை. அவர் படேலைக் கூப்பிட்டு சர்க்கார் வக்கீலின் விருப்பத்தைத் தெரிவித்தார். அவர் சம்மதிக்கவில்லை. கேஸைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று வற்புறுத்தினார். மேலும் பொய்ச் சாட்சியை உடைத்தெறிந்து, குற்றவாளியை விடுதலை செய்யத் தம்மால் முடியுமென்றும் பிறகு, பொய்ச்சாட்சி கூறியவர்கள் மீதும், அவர்களைச் சாட்சி கூறத் தயாரித்த அதிகாரிகள்மீதும் நடவடிக்கை எடுக்கவும் தாம் விரும்புவதாகக் கூறினார். எப்படியோ நீதிபதி இரு கட்சிக்காரர்களையும் சமாதானப்படுத்தி வைத்தார். மகந்தும் விடுதலை பெற்றார். அன்றிருந்து படேல் ஆஜராகும் கேஸ்களில் அதிகாரிகள் மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்துகொண்டார்கள். பொய்ச்சாட்சி கூறுபவர்களோ படேலைக் கண்டாலே நடுங்கிச் செத்தார்கள்.

# வழி காட்டி

ஆழ்ந்த சிந்தனையும் திட சித்தமுமே படேலின் முன்னேற்றத்துக்கு அணிகலமாக இருந்தன. சிறு வயதிலிருந்தே அவருடைய மன உறுதி பிரமிக்கத் தக்கது. வயதுடன் அவருடைய சகிப்புத்தன்மையும் அஞ்சா நெஞ்சமும் உறுதியும் வளர்ந்துவந்தன. வல்லபபாயின் மனைவி, நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். மிகவும் கடுமையான நோய் என்று தெரிந்ததும், மனைவியை பம்பாயிலுள்ள காமா ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு ஆமதாபாத்திலேயே படேல் தங்கிவிட்டார். மன சஞ்சலத்தை வெளியே காட்டாது அவர் தினசரி அலுவல்களைக் கவனித்து வந்தார். ஒருநாள் அவர் கோர்ட்டில் வழக்கு நடத்திக் கொண்டிருக்கும்போது தந்திச் சேவகன் அவரிடம் ஒரு தந்தியைக்கொடுத்துச் சென்றான். கோர்ட்டாரின் அனுமதியின் பேரில் அவர் தந்தியைப் பார்த்துவிட்டு, மேலே தொடர்ந்து வழக்கை நடத்தினார். தந்தி என்றால் படித்தவர்களும் மிரளும் காலம் அது. அலட்சியத்துடன் தந்தியை மடித்து வைத்துவிட்டு படேல் வேலையைக் கவனித்ததைக் காண நீதிபதியும் நண்பர்களும் ஆச்சரியப்பட்டார்கள். தந்திச் செய்தியை அறிந்து கொள்ள நண்பர்கள் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள். படேலோ, முகத்தில் ஏதும் மாறுதலின்றி வழக்கை நடத்திக்கொண்டிருந்தார். பம்பாய் ஆஸ்பத்திரியில் இருந்த அவருடைய மனைவி காலமாகிவிட்டாள் என்பதே தந்திச் செய்தி. வழக்கு முடிந்த பிறகே படேல் மேல் நடக்கவேண்டியதைக் கவனித்தார்.



படேலுடைய கலங்காத உள்ளத்துக்கு எத்தனையோ சோதனைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவருடைய போக்குப் பிடிக்காத அரசியல் எதிரிகள், அவருடைய உயிருக்கே உலைவைக்க எத்தனையோ முறை சதி செய்திருக்கிறார்கள். கத்தியவாட் சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் தலைவராக இருந்த போதும், ராஜகோட்டில் அரசியல் சீர்திருத்தம் கோரி அவர் சமஸ்தானப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தபோதும் அவருக்கு எத்தனையோ ஆபத்துக்கள் ஏற்படவிருந்தன. தெய்வாதீனமாக, படேல் அத்தனை ஆபத்துகளிலிருந்தும் தப்பிவிட்டார். அவருக்கு நேரவிருந்த ஆபத்துக்களைச் சொல்லும் போதும் அவர் அலட்சியமாக இருப்பதுதான் அதை விட விசேஷம்.

ராஜகோட்டில், அவர் சமஸ்தான மக்களை ஒன்று திரட்டிப் போராடினார். அந்தப் போராட்டத்தை சமஸ்தானக் கிளர்ச்சி என்றோ, சமஸ்தான மக்களுடைய உரிமைப் போராட்டம் என்றோ சொல்லி விட முடியாது. சமஸ்தான மன்னரைப் பகடையாக வைத்துக்கொண்டு காங்கிரஸும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் நடத்திய அரசியல் சதுரங்கம் என்றுதான் சொல்லவேண்டும். வைசிராயின் நேர் மேற்பார்வையிலுள்ள சமஸ்தான இலாகா சமஸ்தான மக்களையும் மன்னர்களையும் எப்படி ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது என்பதை இந்திய மக்கள் அறிந்துகொள்ள ராஜகோட் ஒரு சந்தர்ப்பம் அளித்தது. படேலுடைய மத்தியஸ்தத்துக்கு இணங்கி சமஸ்தான மன்னர் சமஸ்தானத்தில் சீர்திருத்தம் வழங்க ஒத்துக்கொண்டார். அதைக் கண்டு அரசியல் இலாகா வெருண்டது.

மன்னருடைய ஆணைக்கு அடங்காத ஒரு பிடாரியை திவானாக நியமித்தது. அவருடைய எதேச்சாதிகாரத்தினால் கிளர்ச்சி வலுத்தது. கடைசியில் காந்திஜி, போராட்டத்தில் சிரத்தைகொண்டு, நியாயம் கோரி, உண்ணாவிரதம் இருக்கும்வரையில் பிரச்னை வளர்ந்து விட்டது. இதன் நடுவே படேலுக்கு எத்தனையோ பயங்கரக் கடிதங்களும்,எச்சரிக்கைகளும் கிடைத்தன. அவருடைய உயிருக்கு ஆபத்தேற்படுத்தக்கூடிய சம்பவங்கள் நடந்தன. எதற்கும் படேல் மனம் கலங்கவில்லை. உறுதியாக நின்று போராட்டத்தை நடத்தினார். வெற்றியும் பெற்றார் என்றே சொல்லவேண்டும்.

காங்கிரஸ் முகர்சபை மாகாண சுயாட்சியை ஏற்றுக் கொண்டு' மந்திரிசபைகளை ஏற்படுத்திய பின்பு பம்பாய் மாகாண மந்திரிசபை, தொழிலாளர் பிரச்னையில் விசேஷ கவனம் செலுத்திற்று. அதன் பலனாகத் தோன்றியதுதான் 'தொழிலாளர் தகராறுச்சட்டம்' இந்தச் சட்டத்தினால் தொழிலாளர்களுக்கு அதிக லாபமில்லை என்று பலர் சொன்னார்கள்; கம்யூனிஸ்டுகளோ இந்தச் சட்டமே கூடாது என்று எதிர்த்து நின்றார்கள். கம்யூனிஸ்டுகள் ஆதிக்கத்திலுள்ள தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்து தொழிலாளர்களுடைய வெறுப்பை எடுத்துக்காட்ட நிச்சயித்தன. காங்கிரஸ் கட்சியின் நல்லெண்ணத்தை எடுத்துக்கூறி தொழிலாளர்களைச் சமாதானம் செய்ய படேல் பம்பாய்க்கு வந்தார். பல்வேறு தொழிற் சங்கங்களுக்குச் சென்று தொழிலாளர்களுடனும் தொழிலாளர் பிரதிநிதிகளுடனும் பேசினார். ஆனாலும் ஒரு சில தொழிலாளர்கள் ஆத்திரப் பட்டுக்கொண்டிருந்தார்கள். முதலாளிகளுக்குச் சாதகமாகவே காங்



கிரஸ் மந்திரி சபை இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாகவும், அதற்குப் படேலின் முயற்சிதான் காரணம் என்றும் அவர்கள் கருதினார்கள். ஆகவே படேலின் மீதே அவர்களுக்கு வெறுப்பு அதிகமாயிற்று. ஒரு சமயம் படேல், அப்போது மந்திரியாயிருந்த முன்ஷியுடன், தொமிலாளர்களைச் சந்தித்து விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். ஒரு தொழிலாளி அவர்கள் வந்துகொண்டிருந்த காரைத் தாக்கினான். நல்லவேளை மயிரிழை தப்பிற்று. அவன் கையில் வைத்துக்கொண்டிருந்த இரும்புக் கம்பி, காரின் பின்னாலிருந்த கண்ணாடியில் பட்டு கண்ணாடி நொறுங்கிற்று. இல்லாவிட்டால், [illegible] நசுங்கி உள்ளே இருந்தவர்களும் படுகாயமுற்றிருப்பார்கள். முன்ஷியும், கார் டிரைவரும் பதறிப் போனார்கள். ஆனால் படேலோ, ஒரு நிமிஷத்தில் நிலைமையை ஊகித்துக்கொண்டு, நிதானத்துடன் காரை மேலே ஓட்டிச் சென்றார்.

112735

மனசில் தோன்றியதை நிர்ப்பயமாகச் சொல்ல படேல் எப்போதுமே தயங்கியதில்லை. [illegible] வயதிலிருந்து அவருக்குள்ள இந்தக் குணத்தினால் அவர் பலருடைய விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டார். அகமதுநகர் கோட்டையிலிருந்து வெளிவந்ததும் நாடு இருந்த நிலைமையைக் கண்டு அவர் பதறிப் போனார். ஜனங்களின் சார்பாக, காங்கிரஸுடன் சமரஸம் செய்துகொள்ள சர்க்கார் விரும்பியதைக்கூட அவர் பொருட்படுத்தவில்லை. வங்காளத்தில் பஞ்சமேற்பட்டு லட்சக்கணக்கான மக்கள் இறந்ததற்கும், நாடெங்கும் லஞ்சமும் ஊழலும் மலிந்து கிடப்பதற்கும் பிரிட்டிஷ் ஆட்சிதான் காரணம், அவர்களுடைய ஏகாதிபத்திய

வெறிதான் காரணம், என்பதை எண்ண எண்ண அவருக்கு ஆத்திரமாகத்தா னிருந்தது. வகுப்பு வாதத்தை வளர்த்து, மக்களுக்குள் மித்திரபேதம் செய்துவரும் அதிகாரிகள்மீது அவருக்கு எப்போதும் வெறுப்பு. யுத்தத்தில் இந்தியா நேரடியாகப் பங் கெடுத்துக் கொள்ளாவிட்டாலும், பிரிட்டனுக்கு உதவி செய்த இந்தியா, யுத்தத்தினுல் ஏற்பட்ட தீமை களையும் அனுபவிக்க நேர்ந்ததைக் காண அவருக்கு பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்திடமே வெறுப்பு ஏற் பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி ஒழியுமட்டும் நாட்டில் சுபிட்சம் தலை தூக்காது என்றே அவர் எண்ணினுர். நாட்டின் அசிக்கியான நிலைமையைப் பற்றி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது "நாட்டின் சீர் கேடான இந்த நிலைமைக்கு சர்க்காரின் தலைவரான வைசிராயே காரணம் என்று கூறுவேன். நாட்டில், பஞ்ச நிலைமையை ஏற்படுத்திய லின்லித்கோ பிரபுவை (குற்றம் சாட்டி) தூக்கிலிடவேண்டும்" என்று கூறினுர். சர்க்காரின் விரோதத்தைச் சம்பாதித் துக்கொள்ள வேண்டி நேருமே என்று அவர் சும்மா இருக்கவில்லை. அவர் எப்போதுமே பிரிட்டிஷ் சர்க் காரின் எதிரிதானே! அவரைக் கொடிய விரோதி என்று எண்ணித்தானே இருக்கும் இடம் கூடத் தெரியாமல் அகமத்நகர் கோட்டையில் இரகசியமாக வருஷக்கணக்கில் பிரிட்டிஷ் சர்க்கார் அடைத்து வைத்தது! அவருடைய பேச்சைக் கேட்டு நண்பர்கள் பிரமித்துப் போனுர்கள். அதிகாரிகளோ என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்கள். ஆனுல் உண்மை உண்மைதானே!

ஆளும் வர்க்கத்தையும் எதிரிகளையும் கண்டிக்கும் துணிச்சலுள்ள சர்தார் நாட்டுமக்களைக் கண்டிப்பதும்



எச்சரிக்கை செய்வதும் ஆச்சரியமில்லை. அவருடைய ஆணித்தரமான பேச்சுக்களைக் கேட்டுக் கோழைகளும் மனம் மாறியிருக்கிறுர்கள். வாலிபர்களுக்கு ஜவாஹர் லால்தான் ஆதர்ச புருஷர் என்றுலும், அவர்களைச் சிறந்த போர்வீரர்களாகச்செய்த பெருமை படேலையே சேரும். படேலின் அமைதியான, ஆனுல் வன்மை யான பிரசங்கங்களைக் கேட்டு தேசியப் போராட்டத் தில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான பேர்களில் பேராசிரியர் நாராயண அகர்வாலும் ஒருவராகும். இவர் இப்போது வர்தாவிலுள்ள வர்த்தகக் கல்லூரி யின் தலைவராக இருக்கிறுர். பொருளாதாரத் துறை யில் ஆராய்ச்சி நடத்தி தேசிய பொருளாதாரப் புனருத்தாரணத்துக்கு காந்திய வழியே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தவர். காந்திஜியின் அனுமதி பெற்று இவர் சில நூல்களையும் எழுதியிருக்கிறுர். ஸர்தாருடன் தமக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பைப் பற்றி இவர் சொல்லும் கதை ரசமானதாகும்.

அப்போது அகர்வால் அலகாபாத்தில் படித்துக் கொண்டிருந்தார். உப்பு சத்தியாக்கிரஹம் ஆரம்ப மான பிறகு, நாட்டின் நிலைமையைப் பரிசிலனை செய்ய காங்கிரஸ் காரியக் கமிட்டி அலகாபாதில் கூடிற்று. அலகாபாத்துக்கு வந்துள்ள தலைவர்களை சர்வகலாசாலைக்கு வரவழைத்துப் பேசச் செய்ய வேண்டும் என்று ஒரு சில வாலிபர்கள் ஆசைப்பட் டார்கள். அதன்படியே மாணவர் யூனியனின் சார் பாக ஒரு சிறு மகாநாட்டுக்கும் ஏற்பாடு செய் தார்கள். ஸர்தார் படேல், ஆசார்ய கிருபளானி, ராஜேந்திர பிரசாத், கோவிந்த வல்லபபந்த் முதலிய பல தலைவர்களை அழைத்தார்கள். ஒருவர் பின் ஒருவ

ராக எல்லோரும், மிகவும் தெளிவாகவும் சுவாரஸ்யமாகவும் நாட்டின் நிலைமையை எடுத்துச் சொல்லி, மாணவர்களும் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். மாணவர்கள் உத்சாகத்துடன் கேட்டு அவ்வப்போது கைதட்டி ஆரவாரித்தார்கள்.

கடைசியில் ஸர்தார் படேல் பேச எழுந்தார். மிகவும் மெலிந்த குரலில் அடக்கமாக அவர் பேச ஆரம்பித்ததும் மாணவர்களிடையே சிறிது சலசலப்பு ஏற்பட்டது. பிரசங்கம் சுவாரஸ்யப்படாது என்று எண்ணிச் சில வாலிபர்கள் கூட்டத்தை விட்டு வெளியேற முயன்றார்கள். "நான் ஒரு சாதாரண விவசாயி, பேசும் கலையில் எனக்குப் பரிச்சயமில்லை. கேட்போரை மயக்கும்படிப் பேச என்னால் முடியாது. ஆனாலும் நான் பேசுவதை அமைதியாகக் கேளுங்கள். கருத்து இருந்தால் செயலில் இறங்க முயலுங்கள்" என்று ஆரம்பித்தார் படேல். இடத்தைவிட்டு எழுந்த வாலிபர்கள், ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு முகத்தைச் சுளித்துக்கொண்டு உட்கார்ந்தார்கள். மேடையில் இருந்த தலைவர்களோ எரிமலை வெடிக்கப் போகிறது என்று நிச்சயித்துக்கொண்டார்கள். மெள்ள மெள்ள படேலின் தொனியில் கம்பீரமும் நாதமும் எழுந்தது. தம்மை மறந்து அவர் உத்வேகத்துடன் பேச ஆரம்பித்துவிட்டார். அவருடைய பிரசங்கத்தைக் குறித்துக்கொள்ள வந்திருந்த போலீஸ் ரிபோர்டர்கள் கூட, எழுதுவதை நிறுத்திவிட்டு பிரசங்கத்தைக் கேட்டார்கள். ஆரவாரம் அடங்கி அமைதி ஏற்பட்டது.



படேல் பேசினார்: "இன்று நாட்டில் நடக்கும் போராட்டத்தில் கவனம் செலுத்தும் திராணியற்று அழகான பிரசங்கம் கேட்க, நீங்கள் எங்களை இங்கு அழைத்தீர்கள். எங்களுடைய ஆவேசம் மிகுந்த பிரசங்கங்களைக் கேட்டு கைதட்டி ஆர்ப்பரித்து உங்களுடைய தேச பக்தியை வெளிக்காட்ட இங்கு கூடியிருக்கிறீர்கள்! ஆனால் இன்று நாட்டில் என்ன நடக்கிறது? உங்களுடைய பூமாலையை ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சி தெரிவிக்க நாங்கள் இங்கு வரவில்லை. தேசியப் போராட்டத்துக்கு சிப்பாய்கள் வேண்டும். தியாகிகள் வேண்டும். நாடு இப்போது அமளிதுமளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. தியாக வேள்வியில் ஆண்களும் பெண்களும் குதித்துத் தங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். தேச பக்தியை எதிர்த்து அடக்குமுறை தாண்டவமாடுகிறது. ஆனால் நீங்கள் இங்கே எங்களுடைய சுவாரஸ்யமான பேச்சுகளைக் கேட்டுக் கைதட்டுகிறீர்கள். கங்கையும் யமுனையும் கலக்கும் இந்தத் திரிவேணியில் மூழ்கி உங்களிடமுள்ள கோழைத்தனத்தையும் பாவத்தையும் விட்டுவிடுங்கள். இந்த நெருக்கடியான சமயத்தில் கூத்தும் கொம்மாளமும் அடிக்க நேரமில்லை. காரியத்தில் கவனமில்லாது ஆர்ப்பரிப்பது அவமானமாகும்."

படேலுடைய பிரசங்கத்தின் பலனாக அகர்வால் உள்பட பல மாணவர்கள் சிறை சென்றார்கள். சிறையிலிருந்து வெளிவந்த பிறகும் பலர் தேச சேவையிலேயே ஈடுபட்டார்கள்.

# தேசாயும் படேலும்

படேலுடைய உள்ளம் பண்பட்டது. ராஜ போகத்தையும் ஏழைமையையும் அவர் ஒன்றாகவே பாவிப்பவர். அவருக்கு மதப்பற்றுக் கிடையாது என்று பலர் சொல்வதுண்டு. அறியாமையினாலும் வறுமையினாலும் வாடும் கிராமவாசிகளின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்திக்கொண்டிருப்பவருக்கு மதத்தைப்பற்றிச் சிந்தனை செய்ய நேரமில்லை. ஆனால் அவர் சிறந்த தெய்வபக்தர். ராமாயணத்தையும் கீதையையும் தினசரி அவர் பாராயணம் செய்யாவிட்டாலும் நிஷ்காம்ய வாழ்வு வாழக் கற்றுக்கொண்டவர். சிறு வயதிலிருந்தே அவருக்கு லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்க வேண்டும் என்று ஆசை. பள்ளிப்படிப்பு முடிந்ததும் அவர் வக்கீல் பரீட்சைக்குச் சென்று தேறினார். அவருடைய தந்தை சிறந்த அரசியல் ஞானி, வேதாந்தி. படேல் வக்கீல் பரீட்சை தேறியதும் மகனைக் கூப்பிட்டு ஜாவேர்பாய் அந்தத் தொழிலில் இருக்கும் நன்மை தீமைகளைச் சொன்னார். நீதியும் நேர்மையும் தவறாது நடக்கவேண்டும் என்று போதித்தார். படேல் எப்போதுமே தவறான கட்சிக்காரனுக்காக நீதிஸ்தலத்தில் வாதாடுவதில்லை. கிரிமினல் வழக்குகளில்தான் கீர்த்தியும் பணமும் அதிகம் கிடைக்குமென்று அவர் தெரிந்துகொண்டார். ஆனால் என்றுமே தர்மம் தவறியவனுடைய கட்சியை எடுத்துக் கொள்வதில்லை, அவருடைய வாக்கு சாதுரியத்தைக் கண்டு அதிகாரிகள் மிரண்டு போவார்கள். படேலின் வாதத்தினால் தர்மம் தலைகவிழ்ந்துவிடு



கிறது என்பார்கள். போலீஸ் கேஸ்கள் எப்போதுமே நியாயமாக இருக்கக்கூடும் என்பது அவர்களுடைய அபிப்பிராயம்.

கத்தியவாடியிலுள்ள சுவாமிநாராயண் க்ஷேத்திரத்துக்கு படேலின் தகப்பனாரான ஜாவேர்பாய் அடிக்கடி செல்வதுண்டு. அவருடன் படேலும் செல்வார். வக்கீலாகத் தொழில் நடத்திக்கொண்டிருக்கும்போதுகூட படேல் அங்கு அடிக்கடி செல்வதுண்டு. ஒரு சமயம் அங்குள்ள ஒரு மடாலயத்தில் வசித்த சாதுக்களுக்குள் சிறிய மனஸ்தாபம் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் அது பெரிதாகி இரண்டு கட்சியாயிற்று. மடத்தைவிட்டு வெளியேறிய சாது, பக்கத்து ஊரில் புதிதாக ஒரு மடம் கட்டிக்கொண்டார். அவரிடம் சிஷ்யர்கள் வந்து சேர்ந்தார்கள். துறவு பூண்ட சாதுக்கள், இகலோக ஆசையுடன் தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொள்வதை படேலோ அவருடைய தகப்பனாரோ ஆதரிக்கவில்லை. ஆனாலும் ஜாவேர்பாய் சுவாமிநாராயண் க்ஷேத்திரத்துக்குப் போகும்போதெல்லாம் இரண்டு மடங்களுக்கும் சென்றுவந்தார். சாதுக்களுடைய சண்டை நாளுக்கு நாள் வளர்ந்து நீதிஸ்தலம் வரைக்கும் சென்றது. அதைக் கண்டு ஜாவேர்பாய் வருந்தி, படேலின் மூலம் அவர்களுக்குள் சமரஸம் செய்ய முயன்றார். வக்கீலாக இருக்கும் படேலினால் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து சமரஸம் செய்து வைக்க முடியும் என்பது அவருடைய நம்பிக்கை. ஆனால் படேலுக்கு சாதுக்களுடைய சண்டையில் தலையிட இஷ்டமில்லை. "தெய்வத்தையும், தெய்வம் தந்த புத்தியையும் நம்பி தங்களுடைய சச்சரவைத் தீர்த்துக்

கொள்ள இந்தச் சாதுக்களால் முடியவில்லையே. நீதிஸ்தலத்திடம் அடைக்கலம் புகுந்த இவர்களா நம்முடைய தர்மத்தைக் காப்பாற்றப் போகிறார்கள்? இவர்களா துறவிகள்? இவர்களுடைய விவகாரத்தில் தலையிடுவதே தவறு'' என்று அவர் சொல்லி விட்டார்.

வாழ்க்கையிலும் அவர் ஒழுக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் விசேஷஸ்தானம் கொடுப்பவர். சிறையில் இருக்கும்போது, அவர் கைதிகளுடன் கைதிகளாக இருந்து சிறைச்சாலையிலுள்ள கஷ்டங்களை அனுபவிக்க விரும்பினாரே தவிர, தம்முடைய அந்தஸ்துக்கு ஏற்றபடி விசேஷ வசதிகளைக் கேட்கவில்லை. உப்பு சத்தியாக்கிரஹம் செய்யக் காந்திஜி நிச்சயித்ததும், குஜராத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யப் படேல் திட்டமிட்டார். அதற்குள் அதிகாரிகள் அவரைக் கைது செய்து மூன்று மாசம் சிறை தண்டனையும் அளித்து விட்டார்கள். படேல் சாபர்மதி சிறையிலிருந்தார். சிறைச்சாலையிலிருந்த படேலை மகாதேவ தேசாய் பேட்டி கண்டார். ஆயிரக் கணக்காகச் சம்பாதித்து ராஜபோகத்தில் வாழ்ந்த படேல் சோள ரொட்டியைத் தின்றுகொண்டு, கைதிகளுடன் கைதியாக சிரித்த முகத்துடன் இருப்பதைக் கண்டு தேசாய் பிரமித்துவிட்டார். அந்தப் பேட்டியைப் பற்றி தேசாய் 'யங் இந்தியாவில்' குறிப்பிட்டிருக்கிறார்.

''உங்களுக்கு என்ன உணவு தருகிறார்கள்?'' என்று கேட்டார் தேசாய்.

''அதைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? சிறையில் எல்லோருக்கும் கிடைக்கும் உணவுதான் எனக்கும். அது நல்லது கெட்டது என்று ஆராயக் கூடாது. நான் வாயு பக்ஷணம் செய்து கொண்டே மூன்று மாத காலத்தையும் கழித்துவிட்டு வெளியே வந்துவிடுவேனே!'' என்று சிரித்தார் படேல்.



ஆனாலும் தேசாய் விடவில்லை. உணவைப் பற்றியே மேலும் மேலும் கேட்டார். ''காலையில் சோளக் கஞ்சி, மத்தியானம் சோள ரொட்டியும் கீரையும். சில நாட்களில் பருப்பு என்று பெயருள்ள ஒரு வஸ்து கிடைக்கும். ஆனால் அந்தப் பருப்பையும் ரொட்டியையும் குதிரைகூடத் தின்னாது. மாலையும் அதேதான். வயிற்றுப்போக்கு வந்துவிடுமே என்று பயந்து நான் காலையில் கஞ்சி குடிப்பதில்லை'' என்றார் படேல்.

''உங்களுக்கு அடிக்கடி பல்வலி வருமே. எப்படி ரொட்டியை மென்று தின்கிறீர்கள்?'' என்று குறுக்கிட்டார் தேசாய்.

''என்ன பிரமாதம் தண்ணீரில் ஊரவைத்துத் தின்று விடுகிறேன். சாப்பாட்டைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். நான் சிறையில் இருக்கிறேன். இங்குள்ள கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்கிறேன்.''

''உங்களுக்கு எப்படிப் பொழுது போகிறது? எதில் படுக்கிறீர்கள்?''

''ஒரு கம்பிளி கொடுத்திருக்கிறார்கள். அது தான் படுக்கை. படிப்பதற்கு துளசி ராமாயணமும் கீதையும்தான். ஆனால் இரவில் படிக்க முடியாது; விளக்குக் கிடையாது. ஆசிரம பஜனாவளி மூன்று அனுப்புங்கள். மூன்றையும் வைத்துக்கொண்டு மூன்று மாதங்களையும் ஓட்டிவிடுகிறேன்.''

"உங்களுடன் வேறு கைதிகள் இருக்கிறார்களோ?"

'ஓ, கொலை தண்டனை பெற்றவர்களும் போக்கிரிகளும். ஒரே ஒரு நாள் மூன்று சத்தியாக்கிரகிகள் என்னுடன் இருந்தார்கள். காங்கிரஸ்காரர்கள் பரஸ்பரம் பழகினால் ஆபத்து வந்துவிடும் என்று எல்லோரையும் தனித்தனியாகப் பிரித்துவிட்டார்கள்

ஜெயில் விதிகளின்படி, படேலுக்குத் தேவையான பொருள்களை அனுப்பலாமா என்று தேசாய் ஜெயிலரைக் கேட்டார். முக க்ஷவரம் செய்து கொள்ள கத்தி, சோப்பு, பல்பொடி, சேர்ப் முதலிய தினசரிப் பொருள்களை அனுப்பவேண்டும் என்பது அவருடைய ஆசை. ஜெயிலர் சிறைச்சட்ட புத்தகங்களைப் புரட்டினார். 'கைதியிடம் க்ஷவரக் கத்தி கொடுக்கக்கூடாது. கொடுத்தால் தற்கொலை செய்து கொள்ள ஹேது' என்றார் சிரித்துக்கொண்டே. பிறகு "சிறை விதிகள் இடம் கொடுக்கவில்லை. இருந்தாலும், நீங்கள் வேண்டும்போது க்ஷவரக் கத்தியைக் கொடுக்கிறேன். உபயோகித்ததும் உடனே வாங்கிக் கொண்டுபோய் விடுவேன். சோப்பு உபயோகிக்கலாம். ஆனால் வாசனைச் சோப்புக் கூடாது. இது ஒரு விதி........" என்றார்.

சிறை விதிகளைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். படேல் சொன்னார்: "எனக்கு ஒரே ஒரு வருத்தம். நம்மைப் பிரித்து வைத்துவிட்டு விசித்திரமான சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தினார்களே இந்த வெள்ளையர்கள். சிறையில்கூட நம்மை ஒடுக்க இவர்கள் நுணுக்கமான விதிகளைச் செய்திருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக, சிறை அதிகாரிகள் இந்தியர்களாகவே இருக்கிறார்கள். நம்மவர்களை எதிர்த்து நாம் எப்படிப் போராடுவது? இவர்கள் எல்லோரும் வெள்ளைக்காரர்களாக இருந்தால்......"

சிறை அதிகாரியின் முகத்தில் ஈயாடவில்லை.



## எல்லாம் ஒன்றே

சிறையிலிருந்து வெளி வந்ததும் படேல் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு பிறகு பொது வேலையில் அவர் ஈடுபட வேண்டும் என்பது நண்பர்களுடைய விருப்பம். சிறை வாசத்தினால் அவர் தேகத்தில் எடை குறைந்து மெலிந்து இருந்தார். நாடு கொந்தளித்துக் கொண்டிருக்கும்போது நாகுக்காகப் பேச படேலால் முடியாது. பொதுக் கூட்டத்தில் பேசினால் அவருக்கு மீண்டும் சிறைவாசம் கிடைத்துவிடுமோ என்றே நண்பர்களில் சிலர் பயந்தார்கள். ஆனால் படேல் கேட்கவில்லை. தமக்கு எல்லாம் ஒன்றுதான் என்று சொல்லித் தட்டிவிட்டு சாபர்மதி ஆற்று மணலில் நடந்த கூட்டத்துக்கு வந்தார். அன்றையப் பேச்சிலும் அவருடைய பற்றற்ற வாழ்க்கையே தொனித்தது. அவருடைய பேச்சின் ஒரு பகுதி இதுதான்:

"இந்தச் சுதந்தரப் போராட்டத்தில் முதன் முதலாகச் சிறை செல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. என்னுடைய மாகாணமான குஜராத் குருக்ஷேத்திரமாக மாறியிருப்பதைக் காண எனக்குப் பரம திருப்தி. இன்று நம்முடைய தலைவர் சிறையில் இருக்கிறார். பதினைந்து வருஷங்களாக இந்த ஆற்றங்கரையில் நம்முடைய க்ஷேமத்துக்காக அவர்

தபசு செய்து கொண்டிருந்தார். அவருடைய மனம் கோணாமல் நடந்து போரில் வெற்றி பெறுவதே நாம் அவருக்குத் தரும் காணிக்கையாகும். அவர் எப்போது சிறையிலிருந்து வெளிவருவார் என்று சொல்ல முடியாது. அவரை விடுதலை செய்யவும் அடிமைத்தளைகளைத் தகர்த்தெறிந்து தேச விடுதலை பெறவும் நாம் மகத்தான தியாகம் செய்யவேண்டும். நமக்குள் ஒழுங்கும் கட்டுப்பாடும் வேண்டும். சிறை வாழ்க்கையைப்பற்றி நீங்கள் பெரிதும் பயப்படலாம். அங்கிருந்துதானே இப்போது நான் வந்திருக்கிறேன். சிறைவாசமாக இருந்தாலும் அங்கும் சந்தோஷமாக இருக்க முடியும். சோள ரொட்டியும் கீரைக் கறியும்தான் அங்கே தருகிறார்கள். இரண்டணுக்கூட பெறுமானமில்லாத அந்த உணவு எப்படி ருசிக்கிறது தெரியுமா? இன்று உள்ள நிலைமையில் நமக்குச் சாப்பாட்டில் ருசி என்பதே கூடாது. நம்முடைய தலைவரும் தேச விடுதலைக்காகப் போராடும் ஆயிரக்கணக்கான தியாகிகளும் சிறையிலிருக்கும் மட்டும், நாம் அறுசுவை உண்டியைச் சாப்பிட்டாலும் அது ருசிக்காது. மண் உருண்டையைத் தின்பதுபோல்தான் இருக்கும். மெத்தைமேல் மெத்தை போட்டுக்கொண்டு படுத்தாலும் நிம்மதியாகத் தூங்க முடியாது. அப்படி உறங்குவது காஷ்டத்தில் படுத்து உறங்குவதற்கு ஒப்பாகும். நம்முடைய போர் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. தடியடிக்கும் சிறை வாசத்துக்கும் நாம் பயப்படக்கூடாது. நம்முடைய வாழ்க்கையே சிறை வாழ்க்கைதான். மாயையின் தளைகளில் நம்முடைய ஆத்மா கட்டுண்டு கிடக்கிறது. ஆசை, பாசம், கோபம் போன்ற கம்பிகள்



நம்மைச் சூழ்ந்துகொண்டு முள் வேலி போட்டிருக்கின்றன. மாயையினால் நாம் கட்டுண்டு கிடக்கிறோம் என்பதை உணர்ந்து ஆத்ம விடுதலைக்குப் போராடத் தொடங்கிவிட்டால், தேச விடுதலையும் சரீர விடுதலையும் பெரிய காரியமல்ல. ஆத்ம விடுதலையில் ஈடுபடும் எவனுக்கும் கஷ்டமும் எதிர்ப்பும் துச்சமாகப்படும். மனப்பக்குவம் அடைந்து விட்டால் சுகமும் துக்கமும் ஒன்றாகிவிடும். மனிதனை வாழ்க்கையில் ஒரே ஒரு தடவைதான் சாவு தீண்டுகிறது. ஏழை பணக்காரன் என்று வித்தியாசம் பாராட்டாமல் அது எல்லோரையும் ஒன்றாகவே பாவிக்கிறது. சத்தியத்திலும் அஹிம்சையிலும் நாம் பரிபூரண நம்பிக்கை கொண்டு வாழ ஆரம்பித்து விட்டால் சாவின் பீதி நம்மைப் பிடிக்காது. கோழைதான் செத்துச்செத்துப் பிழைப்பான். தேசம் விடுதலை பெறுமட்டும் போராடுவோம் என்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுங்கள். தேச விடுதலைப் போராட்டத்தில் மகத்தான கஷ்டங்களுக்கு நடுவே உங்களை அழைத்துச் செல்ல சத்தியத்தையும் அஹிம்சையையும் கவசமாக அணிந்துகொள்ளுங்கள். போராட்டம் சுலபமாகிவிடும்.”

படேலுடைய குண விசேஷங்களைக் குறிப்பிடும்போது எல்லோரும் அவருடைய குத்தலான பேச்சையும் கண்டிப்புக் குணத்தையுமேதான் எடுத்துக் காட்டுவதுண்டு. வெளிநாடுகளில்கூட, இந்தியாவைப் பற்றிப் பிரசாரம் செய்யும்போது, அந்நிய நாட்டு நிருபர்கள் காந்திஜி, ஜவாஹர் இவர்களுக்கு அடுத்தபடியாக படேலையே சித்திரிப்பார்கள். அதுவும் அவரை ஹிட்லருக்கும், முசோலினிக்கும் ஒப்பிட்டு, காங்கிரஸின்

இரும்புத்தலை மனிதன், சர்வாதிகாரி என்று எல்லாம் வருணிப்பார்கள். ஆனால் அவருடன் நெருங்கிப் பழகியவர்களோ, அவர் அன்பும் தயையும் நிறைந்தவர் என்றே சொல்வார்கள். ஒரு சமயம் படேலைப்பற்றி ராஜாஜி பின்வருமாறு குறிப்பிட்டார்: "தாயைப் போன்ற குணமுள்ளவர் படேல்: குழந்தையைத் தாயார் செல்லம் கொஞ்சுகிறாள். அன்பாக இருக்கிறாள். ஆனால் அது துஷ்டத்தனம் செய்தால், முத்தம் கொடுத்த கன்னத்திலேயே பளீர் என்று அடித்து விடுகிறாள். குழந்தையின் மலர் போன்ற கன்னம் இரத்தம் கன்னிப்போய்விடுமே என்றோ, அது வலியினால் துடிக்குமே என்றோ, அவள் சிந்திப்பதில்லை. குழந்தையின் ஒழுக்கத்திலும் எதிர்கால வாழ்க்கையிலும்தான் அவளுக்குக் கருத்து. ஆகவே தவறு செய்யும்போது அன்பை மறைத்துக்கொண்டு கண்டிக்கிறாள். படேலை பிடிவாதக்காரர், முன்கோபி, கருணையற்றவர் என்று எல்லாம் பலர் சொல்வார்கள். ஒழுக்கத்திலும் நேர்மையிலும் அவருக்கு விசேஷப் பற்றுண்டு. அவருடைய கண்டிப்பு கொடுமையின் விபரீதமல்ல, அதிகாரத் திமிர் என்றும் சொல்லிவிடக் கூடாது. அது கட்டுப்பாட்டின் மீதுள்ள ஆசையின் எழுந்தது. தேச முன்னேற்றம் என்ற நோக்கின் எதிரொலி அது. தாயார் தன்னுடைய குழந்தையைக் கண்டித்தால், அது கொடூரம் என்று சொல்வோமா? படேலைப்பற்றி பலர் பல தினுசாகச் சொல்வார்கள். அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்குத்தான் அவருடைய ஆற்றலையும் அறிவையும் நேர்மையையும் புரிந்து கொள்ள முடியும். அவரைச் சர்வாதிகாரி என்று வர்ணிப்பது தவறு என்பதும் புரியும்."



காலஞ்சென்ற மகாதேவ தேசாய் படேலுடன் பல வருஷ காலம் பழகியவர். குஜராத் அரசியலில் அவருடன் சேர்ந்து நின்று வேலை செய்தவர். அவர் சொல்கிறார்: "படேலுடைய திடசித்தத்தைக் கண்டு எதிரிகள் பிரமிப்பார்கள். அவர் சாகஸி. அன்பும் அருளும் நிறைந்தவர். எளிய வாழ்க்கையும் தூய ஒழுக்கமும் உள்ளவர். சத்தியத்துக்காக அக்னியைக் கையில் ஏந்தும் ஆற்றலுள்ளவர். வாழ்க்கையில் கசப்பான பல அனுபவங்களை அவர் பெற்றிருக்கிறார். ஆனால் என்றுமே அவர் மனம் கலங்கியதில்லை. தன்னை மறந்து பொது வேலையில் ஈடுபட்டு விட்டார். துக்கத்தையும் கஷ்டத்தையும் அவர் எப்போதுமே பெரிதாக எண்ணுவதில்லை. ஆனால் பிறருக்குச் சிறிது துன்பம் நேர்ந்தாலும் காணச் சகியார். உடனே தம்மாலான உதவியைச் செய்ய ஓடுவார்."

படேல் சில காலம் கோத்ரா என்னும் ஊரில் வக்கீலாகத் தொழில் நடத்திக் கொண்டிருந்தார். ஒரு சமயம் அந்த ஊரில் பிளேக் வந்துவிட்டது. ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். வசதியுள்ளவர்கள் ஊரை விட்டே ஓடிப்போனார்கள். படேல் எங்கும் கிளம்பவில்லை. ஊரில் இருப்பவர்களுக்கு வைத்திய உதவி செய்வதில் அவருடைய கவனம் சென்றது. அவருடைய நண்பர் ஒருவருடைய வீட்டில் இந்தக் கொள்ளை நோய் புகுந்தது. நோயாளியின் பக்கத்தில் உட்கார்ந்து இரவு பகலாக படேல் சிசுருஷை செய்தார். தொத்து நோய் என்று தெரிந்தும் படேல், நோயாளிகளுடன் நெருங்கிப் பழகுவதைச் சில நண்பர்கள் விரும்பவில்லை. படேல்

ஏதுமே காதில் போட்டுக்கொள்ளாமல், யமனுடன் போராடிக் கொண்டிருக்கும் ஜீவன்களைக் காப்பதில் கருத்தாக இருந்தார்.

கடைசியில் அவருடைய முயற்சி வீணாயிற்று. அந்த நோயாளிகள் இறந்தார்கள். நண்பர்கள் பயந்ததைப்போல அவருக்கும் பிளேக் ஜுரம் கண்டது. படேல் மட்டும் மனம் கலங்கவில்லை. வேறு ஊருக்குச்சென்று மிகவும் ஜாக்கிரதையாக சிகித்சை பெற்றுக்கொண்டார். வைத்திய உதவியைவிட திட சித்தமே அவரைக் காப்பாற்றிற்று என்றே சொல்ல வேண்டும்.

மனசில் தோன்றியதை ஒளிவு மறைவு இன்றி அவர் சொல்லிவிடுவதாலேயே பலர் அவரிடம் மனக் கசப்புக் கொள்கிறார்கள். அவருக்கு சமஸ்தானாதிபதிகளைக் கண்டாலே பிடிக்காது. அவர்களுடைய போக வாழ்க்கையைக் கண்டித்தும் இருக்கிறார். குஜராத்திலுள்ள ஏழை விவசாயிகளைக் காப்பதற்காக அவர் ஜாகீர்தார்களையும் சமஸ்தானாதிபதிகளையும் பல தடவைகளில் விரோதித்துக்கொண்டும் இருக்கிறார். சிற்றரசர்களுடன் பழக வேண்டிய சந்தர்ப்பம் கிடைக்கும்போதும், அவர் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்வார். இந்தியா சுதந்தரமடைந்ததும் படேல், சமஸ்தான இலாகா நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். அதைக்கண்டு சமஸ்தானாதிபதிகளில் பலர் பயந்தார்கள். கத்தியவாடிலுள்ள பல சமஸ்தானாதிபதிகளுடன் படேல் பழகியிருக்கிறார். அவர்களுடைய வாழ்க்கை ரகசியங்களை அவர் நன்கு அறிவார். ஆகவே அவர்களில் பலர்



தங்களுடைய அந்தஸ்துக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்தார்கள்.

பலம் பொருந்திய ஐக்கிய இந்தியாவை அமைக்க சமஸ்தானங்களைக் கலப்பது அவசியம் என்று காங்கிரஸ் நிச்சயித்தும்கூட படேல் அவசரப்பட்டு ஏதும் செய்து விடவில்லை. மிகவும் ஜாக்கிரதையாக சமஸ்தானாதிபதிகளுக்கு நாட்டின் நிலைமையை எடுத்துச் சொல்லி, ஒரே வருஷ காலத்துக்குள் ஐநூறுக்கு அதிகமான சமஸ்தானங்களுடைய நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். எதிரியைக் கண்ணியமாக நடத்துவதிலும், அவர்களுக்கு உரிய ஸ்தானம் கொடுப்பதிலும் படேல் சிறந்தவர். ஆனால் வாதம் என்று வந்து விட்டால், படேல் பளிச்சுப் பளிச்சென்று பேசி விடுவார். எதிரியின் அந்தஸ்து, செல்வாக்கு என்றெல்லாம் அவர் யோசிப்பதே இல்லை.

ராஜகோட் சத்தியாக்கிரஹம் நடந்து கொண்டிருந்த சமயம், படேல், கத்தியவாடிலுள்ள சமஸ்தானாதிபதிகளில் ஒருவரைச் சந்திக்க நேரிட்டது. அந்தச் சமஸ்தானாதிபதி தம்முடைய பெருமையையும் தம் முன்னோர்களுடைய சாகஸங்களையும் எடுத்துச் சொல்லி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தார். சமஸ்தானாதிபதிகள் மிகுந்த புத்திசாலிகள் என்பதும், தேசத்தின் போக்குக்கு ஏற்றபடி தாங்களும் நடந்துகொண்டு தங்களுடைய அந்தஸ்தையும் செல்வாக்கையும் காப்பாற்றிக் கொள்வதில் அவர்கள் எப்போதுமே பின்தங்கியதில்லை என்றும் அவர் பெருமைப்பட்டுக் கொண்டார். தம்முடைய பேச்சில் படேல் மகிழ்ச்சியடைந்திருப்பார் என்றே அவர் எண்ணினார். ஆனால் மிகவும் நிதானமாக படேல்

கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் திகைத்து அவர் தலை குனிந்துவிட்டார். "வாஸ்தவம்தான். மொகலாயர் காலத்தில்கூட ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்ள நீங்கள் முஸ்லீம்களுக்குப் பெண் கொடுத்துச் சம்பந்தம் செய்து கொண்டிருக்கிறீர்களே! ராஜ தந்திரத்தில், நம் நாட்டுச் சிற்றரசர்கள் அலாதியானவர்கள்" என்றார் படேல்.

சமஸ்தானாதிபதிகளின் அதிகாரத்தை மாற்றி விட்டாலும், அவர்களுடைய அந்தஸ்தைக் காப்பாற்றுவதில் படேல் மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டிருக்கிறார். பல சமஸ்தானாதிபதிகளுடைய வருஷாந்திர வருமானம் லக்ஷக் கணக்கில் இருப்பதை எடுத்துக்காட்டி, சமஸ்தானமக்களும், அவர்களுடைய பிரதிநிதிகளும், இவற்றைக் குறைக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அதற்குப் படேல் கூறிய பதில் இதுதான்: "சமஸ்தானாதிபதிகள் சரித்திரத்தில் இடம் பெற்றவர்கள். சமஸ்தானங்களும் சமஸ்தானாதிபதிகளும் நம்முடைய பழைய வாழ்க்கையின் அடையாளங்கள். அவர்களில் பலர் தேச பக்தர்கள். அவர்கள் இந்தியப் பிரஜைகள். பரம்பரையாக சுக சௌக்கிய வாழ்க்கை நடத்தியவர்கள். அவர்களுடைய மனம் புண்படக்கூடாது. தேச ஐக்கியம்தான் நமக்குப் பிரதானம். தனிப்பட்டவர்களுடைய அந்தஸ்தைப் பெரிதாக்கி நாம் பார்க்கக்கூடாது."

"நமமுடைய ஐக்கியத்தைக் குலைக்க, அந்நியர்கள் சமஸ்தானங்களை தனியாகவே நிர்வகித்து வந்தார்கள். அந்நியர் ஆட்சி இங்கு இருக்கு மட்டும் சமஸ்தானப் பிரச்னை ஒரு பெரிய சிக்கலாகத்தான் இருக்கும் என்றே நாங்கள் எண்ணினோம். சமஸ்தானாதிபதிகள் காலப் போக்கை அறிந்தவர்கள்தாம். ஆனாலும் நாம் அவர்களிடம் மிகவும் கண்ணியமாகவே நடந்து கொள்ளவேண்டும். அந்தஸ்தைக்காப்பாற்றிக்கொள்ள தாங்கள் அவசரமாக அதிகார மாற்றம் செய்து விட்டதாக அவர்கள் எண்ணிவிடக் கூடாது. சமஸ்தான மக்களின் க்ஷேமத்துக்காகவும் இந்தியாவின் முன்னேற்றத்துக்காகவும் தாங்கள் மிகவும் நல்லதொரு காரியத்தைச் செய்து விட்டதாகவே அவர்கள் எண்ணவேண்டும்.



## சர்ச்சிலுக்குச் சவால்

காந்திஜியிடமுள்ள மோகன சக்தியையோ நேருவிடமுள்ள வசீகரத்தையோ, ராஜாஜியிடமுள்ள சாகசத்தையோ, ராஜன் பாபுவிடம் உள்ள சாந்தத்தையோ, வினோபா பாவேயின் அடக்கத்தையோ, நாம் படேலிடம் காண முடியாது. காந்திஜியிடம் நெருங்கிப் பழகி காந்திய வாழ்வு வாழும் அரசியல் தலைவர்கள் எவருடனும் படேலை ஒத்திட்டுப் பார்க்க முடியாது. ஆனாலும் அவர் காந்திஜியின் பூரண அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான தளபதி. அவர் சிறந்த கர்மவீரன்; அரசியல் சந்நியாசி. தேச சேவை ஒன்றுதான் வாழ்க்கையில் அவருடைய பற்றுக்கோல். எல்லாத் துறைகளிலும் அவர் காந்திஜியுடன் ஏகோபித்த மனோபாவம் உள்ளவராகத்தா னிருந்தார். முஸ்லிம்களுக்கு அபரிமிதமான சலுகைகளைக் காட்டுவதையும், மகத்தான தியாகம் செய்து முஸ்லிம்களைத் திருப்தி செய்து விட்டால், தேசத்தைப் பிரிக்காமல் காப்பாற்றிவிட முடியும் என்பதையும் அவர் ஏற்றுக்

கொள்ளவே இல்லை. அதனால்தான் பாகிஸ்தானியர்களுக்கு படேலைக் கண்டால் பிடிக்கவே இல்லை. இந்தியாவைத் தாக்கிப் பேச சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் படேலையும் தாக்குவது வழக்கமாகிவிட்டது. காஷ்மீர், ஜுனாகாத், ஹைதராபாத் முதலிய சமஸ்தான விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிட்டு, இந்தியாவுக்கு இடைஞ்சல் செய்ய முயன்றபோது, ஒவ்வொரு கட்டத்திலும் தோல்வியடைந்தது. சமஸ்தான இலாகா, சர்தார் படேலிடமிருப்பதால் அவர் மீதுதான் அவர்களுடைய ஆத்திரம் திரும்பியது. அவர்தான் இந்தச் சமஸ்தானங்களிலுள்ள முஸ்லிம்களின் பிரஜா உரிமையை மறுக்கிறார் என்றே பாகிஸ்தானிகள் விஷமப் பிரசாரம் செய்தார்கள். ஆக்கிரமிப்பு ஆசையாலும், இந்தியா வலிமை பொருந்திய நாடாக அமைந்துவிடாமல் தடுக்கவுமே பாகிஸ்தான் காஷ்மீர், ஹைதராபாத் பிரச்னைகளைப் பெரிதாக்கிற்று. அங்குள்ள முஸ்லிம்களின் க்ஷேமத்துக்காக பாடுபடுவதாகக் கூக்குரலிட்டு, அவர்களைக் காப்பாற்றவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் முறையிட்டது, நாட்டைத் துண்டு போட்ட துரோகிகளுக்கு. இந்தியா அதி சீக்கிரத்தில் அமைதியான வாழ்க்கைக்கு வழி கோலுவதைக் காணச் சகிக்கவில்லை. கோடிக்கணக்கான பணத்தை வாரியிறைத்து, மக்களுக்கு வசதியும் வாழ்க்கையும் தந்து, இந்தியா மதப்பற்றற்ற சமரஸ சர்க்கார் உள்ள தேசம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட இந்தியத் தலைவர்கள் பாடுபட்டுக் கொண்டிருப்பதைக் காண பாகிஸ்தானியர்களுக்கு வயிற்றெரிச்சல் தாளவில்லை. நாடு பிரியவேண்டும்



என்று தீர்மானித்த தினம் முதல், லட்சக்கணக்கான ஹிந்துக்களை அவர்கள் இந்தியப் பகுதிக்கு விரட்டிக் கொண்டுதானிருக்கிறார்கள். அபயம் என்று இங்கு வந்த மக்களை ஆதரிக்க இந்திய சர்க்கார் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுக்கொண்டிருக்கிறது. பாகிஸ்தானியர்களின் போக்கை அவ்வப்போது கண்டித்து, உள் நாட்டிலும் துரோகிகள் வாலாட்டாமல் இருக்க, தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பை படேல் ஏற்றுக்கொண்டார்.

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் க்ஷேமத்துக்காகவும், பாதுகாப்புக்காகவும், கடைசி காலத்தில் காந்திஜி விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டார். பாகிஸ்தானில் ஹிந்துக்களின் பூண்டற்றுப் போகும்படி முஸ்லிம்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும்போது, இங்கு முஸ்லிம்களுக்கு விசேஷ சலுகை காட்டுவதில் பலனில்லை என்று ஹிந்துத் தலைவர்கள் எடுத்துக் காட்டினார்கள். பாகிஸ்தானின் விஷமத்தைக் கண்டிக்கும் தோரணையில், இந்திய சர்க்கார், பிரிவினைத் திட்டப்படி, சேமிப்பு நிதியிலிருந்து பாகிஸ்தானுக்கு ஒதுக்கிய ஐம்பத்தைந்து கோடி ரூபாய்களை கொடுக்காமல் நிறுத்தி வைத்திருந்தார்கள். இதைக் கண்டு பாகிஸ்தானியர்கள் 'கூ கூ' வென்று கத்தினார்கள். காந்திஜியோ அந்தப் பணத்தை பாகிஸ்தானுக்குக் கொடுத்துவிடும்படி இந்திய சர்க்காரை வற்புறுத்தியதுடன் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவும் துணிந்துவிட்டார். காந்திஜியின் ஆணையை ஏற்றுக்கொண்டாலும் இந்திய சர்க்காரும் நாட்டிலுள்ள தலைவர்களும் வருந்தினார்கள்.

"பணத்தைப் பணமென்று பாராமல் தண்ணீரைப் போல வாரி இறைத்து நாங்கள் பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளைக் காப்பாற்றவும் உள்நாட்டில் அமைதி ஏற்படுத்தவும் துணிந்துவிட்டோம். பாகிஸ்தானுக்குச் சேரவேண்டிய பணம் பிரமாதமானது அல்ல. காந்திஜியின் உயிர் எங்களுக்கு விலை மதிப்பற்றது. ஆனால் இப்போதாவது பாகிஸ்தானியர்கள் எங்களுடைய நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்வார்களா என்பது சந்தேகம்தான்" என்று படேல் சொன்னார்.

பாகிஸ்தானியரைவிட, அவர்களுக்குத் தூபம் போட்டுக்கொண்டிருக்கும் ஆங்கிலேயர்மீதுதான் படேலுக்கு ஆத்திரம் அதிகம். காஷ்மீர், ஹைதராபாத் சிக்கல்களை சர்வதேச சங்கத்தின் கவனத்துக்கு பாகிஸ்தானியர்கள் கொண்டுவந்தது மல்லாமல், ஹைதராபாத்தின் அந்தஸ்தைப்பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் விவாதிக்க கன்சர்வேடிவ் கட்சியின் உதவியை நாடினார்கள். இந்தியாவின் போக்கைக் கண்டித்து சர்ச்சில் ஆத்திரம் தீர, அங்கே பேசித் தீர்த்தார்.

படேலுடைய எழுபத்துநான்காவது ஜன்ம தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடி, பம்பாய் மக்கள் அவரை உபசரித்தபோது, அதை ஏற்றுக் கொண்டு, பேசிய கூட்டத்தில், பாகிஸ்தானியர்களுக்கும், சர்ச்சிலுக்கும் படேல் சூடு கொடுத்தார். "ஹைதராபாத் பிரச்னையில் மிகவும் தாராளமாகவே நாங்கள் நடந்துகொண்டோம். எப்படியாவது ஒரு சமரஸமான முடிவு ஏற்படுத்திவிட்டே பதவியிலிருந்து விலகவேண்டும் என்று மவுண்ட்பாட்டன்



பிரபுவும் முயன்றார். ஆனால் கடைசிவரையில் அவருடைய ஆசை நிறைவேறவில்லை. ஹைதராபாத்துடன் நாங்கள் பெருந்தன்மையாகப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும்போது, பாகிஸ்தானுக்கு உதவ ஹைதராபாத் துடித்துக்கொண்டிருந்தது. இருபது கோடி ரூபாய்கள் கடன்தர இசைந்தது. அதேபோல பாகிஸ்தானும் ஹைதராபாத்துக்கு ஆயுத தளவாடங்களை திருட்டுத்தனமாக அனுப்ப உதவிற்று. ஹைதராபாத் பிரச்னையில் பாகிஸ்தானியர்களுடன் இங்கிலாந்திலுள்ள சில வெள்ளையரும் கலந்துகொண்டு நிலைமையைச் சிக்கலாக்கினார்கள். போர்த்துகீசிய சர்க்காரிடமிருந்து கோவாவை வாங்கிவிட விலை பேசினார்கள். இந்தியாவின் ஒவ்வொரு விவகாரத்திலும் பாகிஸ்தானியர் தலையிட்டு அமைதியைக் குலைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாமீது படையெடுத்து ஆக்கிரமித்துவிட வேண்டும் என்பது கூட அவர்கள் ஆசை. நாங்கள் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டுதானிருக்கிறோம். உள் நாட்டு விவகாரங்களை எப்படிச் சமாளிப்பது என்று எங்களுக்குத் தெரியும். வெளியார் தலையீட்டை எங்களால் சகித்துக் கொண்டே இருக்கமுடியாது இதனால் வரும் ஆபத்துக்களை நாங்கள் ஏற்கத் துணிவோம். இந்தியா அழிந்தாலும் சரி, பாகிஸ்தான் அழிந்தாலும் சரி, உலகமே எதிர்த்து நின்றாலும் சரி, எங்களுடைய உரிமையைக் காப்பாற்ற நாங்கள் போரிடுவோம். எதிரிகள் நெருப்புடன் விளையாடுகிறார்கள் என்பது ஞாபகமிருக்கட்டும். தங்களுடைய அழிவுக்குத் தாங்களே வழி தேடிக் கொண்டால் யார் என்ன செய்ய முடியும்? அவர்களுக்கு அந்த உரிமையுண்டு.

"இந்தியாவின் பாதுகாப்புக்காகத்தான் காஷ்மீர் ஹைதராபாத் சிக்கல்களை அதிசீக்கிரம் தீர்க்க நாங்கள் விரும்புகிறோம். இந்தச் சமஸ்தானங்களின் அரசியல் அந்தஸ்து எதிர்காலத்தில் எப்படி இருக்கவேண்டும் என்பதைப்பற்றி சமஸ்தானவாசிகளே முடிவுக்கு வரவேண்டும். எங்களுடைய உள்நாட்டு விவகாரத்தில் இந்தியர்கள் தலையிட வேண்டாம் என்று சமஸ்தான மக்கள் சொன்னால் நாங்கள் ஒதுங்கி நின்றுவிடுவோம். ஆனால் எவரையும் அந்நியர் ஆக்கிரமிப்புக்கு ஆளாகி மடிய நாங்கள் விட்டுவிட மாட்டோம். இந்தியா பூரண விடுதலை பெற்ற நாடு என்பதை அந்நியர்கள் மறந்துவிடுகிறார்கள். நாம் எல்லோரும் சகோதரர்களைப் போல சௌஜன்யமாக வாழவேண்டுமென்றால் பரஸ்பரம் அன்புடன் வாழவேண்டும். ஒருவர்மீது ஒருவர், கல்லை விட்டெறிந்துகொண்டு 'அன்புடன் வாழ்வோமே' என்று சொல்வது பைத்தியக்காரத்தனமாகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா ஓர் அங்கமாக இருக்கவேண்டும் என்று ஆங்கிலேயர்கள் ஆசைப்படுகிறார்கள். ஆனால் நாம் விடுதலை பெற்ற பின்பும்கூட, நம்மிடம் விஷமம் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். நாம் எப்படி அவர்களுடன் வாழ்வது? இருந்தாலும் இந்தியாவின் நலனுக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றபடி சாம்ராஜ்யத்தில் இருப்பதா வேண்டாமா என்பதைப்பற்றி நாம் ஒரு முடிவுக்கு வருவோம். இந்தியா விடுதலை பெற்றபின்பும் சர்ச்சிலின் திமிரான பேச்சு அடங்கவில்லை. தாம் இந்தியாவின் தர்மகர்த்தா என்று எண்ணிக்கொள்கிறார். அவர் இங்கிலாந்தைக் காப்பாற்றிக்கொள்ளட்டும்; அது போதும். இன்று உலகம் இருக்கும் நிலைமையில், மூன்றாவது மகா



யுத்தத்தைத் தாங்கும் சக்தி அதற்கு இல்லை. யுத்தப் பிசாசிடமிருந்து உலகத்தைக் காப்பாற்ற சத்தியம், அஹிம்ஸை, அன்பு, நீதி ஆகிய இவைகளால்தான் முடியும். சர்ச்சிலின் சாகஸம் நாசகார சாகஸம். அதனால் உலகம் நிர்மூலமாகிவிடும். இன்று உலகில் சாசுவதமான சமாதானத்தையும் சுபிட்சத்தையும் ஏற்படுத்தவேண்டுமானால் காந்திய வழிதான் சிறந்தது. முதலில் சர்ச்சில் இந்தியாவைப்பற்றிப் பிதற்றுவதை நிறுத்தவேண்டும். நம்முடைய உள்நாட்டு விவகாரங்களை எப்படித் தீர்த்துக்கொள்வது என்று நமக்குத் தெரியும். சர்ச்சிலோ, அவரைவிடப் பெரிய மேதையோ கூட நம் விவகாரங்களில் தலையிடுவதை நாம் சகித்துக் கொள்ள முடியாது."

காந்திஜியின் ஆயுள்காலம் வரையில் அவருடைய அன்பினாலும், தயாள குணத்தினாலும் முஸ்லிம்கள் அளவு கடந்த சலுகைகளைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் என்றுமே அவர்கள் தங்களுடன் வாழும் ஹிந்துக்களிடம் விசுவாசமாகவோ, நன்றியறிதலுடனோ பழகவில்லை. தாங்கள் பெறும் அத்தனை சலுகைகளும் தங்களுடைய உரிமை என்றே எண்ணி அவர்கள் முரண்டிக்கொண்டிருக்கிறார்கள். 'பாகிஸ்தானை முஸ்லிம் சமஸ்தானமாக்கவேண்டும். அதை விஸ்தரிக்க மேலும் இந்தியாவிலிருந்து இடம் பெற வேண்டும். பாகிஸ்தான் அரசாங்கம் ஸ்திரப்படவும் இந்தியர் பண உதவியைப் பெறவேண்டும்.' இவைதான் பாகிஸ்தானியரின் ஆசை. இந்திய சர்க்காரோ, நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிட்ட பின்பு, பிரிந்துபோன பகுதியைப்பற்றி எண்ணவேயில்லை. ஆனால் தினம் தினம் ஆயிரக்கணக்காக, அந்தப் பகுதியிலிருந்து

ஓடிவரும் ஹிந்துக்களையும், சீக்கியர்களையும், ஆதரித்து, இங்கு எப்படி நிரந்தரமாகக் குடியேற்றுவது என்றே எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பாஞ்சாலப் பகுதியில் அகதிகளின் பிரச்னையை இந்திய சர்க்கார் ஓரளவு சமாளித்துவிட்டார்கள் என்றே சொல்லலாம். ஆனால் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வரும் ஹிந்துக்களைப் பற்றித்தான் இந்திய சர்க்கார் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் குடியேற்றத் தகுந்த இடமோ, வசதியோ மேற்கு வங்காளத்தில் இல்லை. தவிர மேற்கு வங்காளத்தில் இருக்கும் முஸ்லிம்கள், இங்கு தங்கி வாழ விரும்புகிறார்களே தவிர கிழக்கு வங்காளத்துக்குப் போக விரும்பவில்லை. ஆகவே, இந்திய சர்க்கார், பலதடவைகளில் இந்த அகதிகள் பிரச்னையைப்பற்றி பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். கிழக்கு வங்காளத்தில் சிறுபான்மை வகுப்பினரான ஹிந்துக்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். எதற்கும் செயலில் பாகிஸ்தான் பரிகாரம் தேடவில்லை. கடைசியில் படேல் ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். "கிழக்கு வங்காளத்திலிருந்து ஹிந்துக்கள் வெளியேறிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க எங்களால் முடியாது. மேற்கு பஞ்சாபிலுள்ள முஸ்லிம்கள், பாகிஸ்தானுக்குப் போய்விட்டதால், அவர்கள் இருந்த இடத்தில், புதிதாக வந்தவர்களைக் குடியேற்ற முடிந்தது. ஆனால் கிழக்கு வங்காளத்தின் நிலைமை வேறு. அங்கு சுமார் ஒன்றரைக் கோடி ஹிந்துக்கள் இருக்கிறார்கள். அத்தனைபேரும் இந்தியாவுக்கு வந்துவிட நேரிட்டால் என்ன செய்வது? சமரஸமாகப் பேசி, இந்தப் பிரச்னையைத் தீர்க்க



வேண்டும். ஹிந்துக்களை வைத்துக்கொள்ள பாகிஸ்தானியர்கள் விரும்பவில்லையென்றால், அவர்கள் வாழ்வதற்காக, ஒரு பகுதிப் பிரதேசத்தைப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டும். சௌஜன்யம் கெட்டுவிட்டால் சண்டையில் வந்து முடியும். ஆனால் நாங்கள் எதற்கும் தயாராக இருக்கிறோம். இது ஹிந்துக்களின் வாழ்க்கைப் பிரச்னையல்ல. தேசத்தின் ஜீவாதாரப் பிரச்னை."

படேலின் வாழ்க்கையில் தோல்வி என்பதே ஏற்பட்டதில்லை. அவர் எதற்கும் சளைத்துப் பின் வாங்கியதில்லை. ஆகவே கிழக்கு வங்காள அகதிகள் பிரச்னை மிகவும் சுலபமாகத் தீர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

## தேசத்தின் பாதுகாவலன்

படேலின் எழுபத்து நான்காவது ஜன்ம தினத்தை இந்தியர்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். படேலைப் போன்ற கர்ம வீரர்களுக்கு, ஜயந்தி விழாவினால் விசேஷ மகிழ்ச்சி ஏற்பட்டுவிடும் என்பதற்கில்லை. கவர்னர் ஜனரல் ராஜாஜி அவரைப் பாராட்டி எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுருந்தார்: "உங்களுக்கும் எனக்கும் ஜன்ம தினக் கொண்டாட்டத்தில் விசேஷ சிரத்தை யிருக்க முடியாது. நல்ல நாளும் கெட்ட நாளும் நமக்கு ஒன்றுதான். ஆனால் தேசமக்கள் மகிழ்ச்சியுடன் உங்களுடைய ஜயந்தி விழாவைக் கொண்டாடும்போது, நான் அதில் சந்தோஷமாகக் கலந்துகொள்கிறேன்."

காந்திஜிக்கு அடுத்தபடியாக தேசமக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமானவர் நேரு.

ஆனால் ராஜாஜியும் ராஜன்பாபுவும் படேலும் பொது மக்களிடம் தனிக் கௌரவம் பெற்றவர்கள். இந்த நால்வரும் நவ இந்தியாவின் சிருஷ்டிகர்த்தர்கள். காந்திஜியின் ஆணையையேற்றுத்தான் இவர்கள் தேசத்துக்குப் பணியாற்றுகிறார்கள். என்றாலும் ஒவ்வொருவரும் தம்தம் வழியில் சிறப்பான முறையில் காந்தியத்துக்கு வியாக்யானம் செய்து செயலாற்றுகிறார்கள். கிராம மக்களிடம்தான் இவர்களுக்கு அன்பும் பற்றும் உண்டு. ஐக்கிய மாகாணத்தில் விவசாயிகளை ஒன்று திரட்டி ஏகாதிபத்தியத்தைத் திணர அடித்தவர் நேரு. பீஹாரிலுள்ள அவுரித்தோட்ட அநியாயத்தை ஒழித்த பெருமை காந்திஜியைச் சேர்ந்தது. என்றாலும் அங்குள்ள விவசாயிகளின் தலைவர் ராஜன்பாபுதான். ஸர்தார் படேலோ, பல ஆண்டுகளாக நகரங்களில் வசித்தாலும், 'நான் ஓர் ஏழை விவசாயி' என்றே தம்மைக் குறிப்பிட்டுக்கொள்கிறார். குஜராத் விவசாயிகளுக்கு அவரிடமுள்ள மதிப்பும் மரியாதையும் அளவிட முடியாதது. ராஜாஜிக்கு, கிராமவாசிகளிடமுள்ள அன்பையும் பற்றையும் எடுத்துச் சொல்வது மிகையாகும். மற்றத் தலைவர்கள் அரசியல் ஆதிக்கத்திலிருந்து விவசாயிகளை மீட்டு அவர்களுக்குச் சுபிட்ச வாழ்வு தர முயன்றார்கள். ராஜாஜியோ ஏழை மக்களுடைய பொருளாதார விடுதலைக்காகப் பாடுபட்டார். விவசாயிகளின் வாழ்க்கையை உறிஞ்சிக் கொண்டிருந்த மதுவரக்கனை எதிர்த்துப் போராடி குடும்ப விளக்கை ஏற்றிவைத்தார். நவபாரத சிருஷ்டிக்கு இந்தக் கோஷ்டியின் ஏகோபித்த சேவை அவசியமாகும். ஜவாஹரை ஆங்கிலேயரின் நண்பர் என்றும், படேலை முதலாளிகளின் நண்பர் என்றும் ஒரு சிலர்



குற்றம் சாட்டலாம். ஆனால் இவை ஆதாரமற்றவை. நம்முடைய தலைவர்கள் காந்தீயப் பண்புள்ளவர்கள்; ஜனநாயக முறையில் நம்பிக்கையுள்ளவர்கள்; தேச மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இவர்கள் எப்போதும் மக்களின் விருப்பத்துக்கு மாறாகச் செல்லமாட்டார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அர்ச்சுனனும் கிருஷ்ணனும் போல, படேலும் காந்திஜியும் பழகினார்கள், வாழ்ந்தார்கள். காந்திஜியின் மறைவினால் படேல் பெரிதும் மனங்கலங்கினார். ஆனால் அவர் உடனே சமாளித்துக்கொண்டு ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு தேச சேவையில் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டார்.

அவருடைய எழுபத்து நான்காவது ஜன்ம விழாவை நாட்டு மக்கள் மட்டுமல்ல, சர்வகலாசாலைகளும் சிறப்பாகக் கொண்டாடின. நாகபுரி, காசி, அலகாபாத், லக்ஷ்மணபுரி முதலிய சர்வ கலாசாலைகள், ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுக்கொண்டு, அவருக்கு டாக்டர் பட்டத்தை அளித்தன. விசேஷப் பட்டமளிப்பு விழாக் கொண்டாடி அவரைக் கௌரவித்தன. ஒவ்வொரு சர்வகலாசாலைப் பட்டத்தையும் ஏற்றுக்கொண்டு சர்தார் பதிலளித்தது போற்றத்தக்கது. அந்தப் பேச்சுக்களிலிருந்து அவருடைய மனோபாவத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். இளைஞர்களுக்கும் தேச பக்தர்களுக்கும் அவர் கூறிய உபதேச மொழிகள் எல்லோருக்குமே பொருந்தும். நாட்டின் நல[illegible] கருத்து[illegible] எல்லாரும் அதை ஏற்றுக்கொண்டு நடக்கவேண்டியது.

கடமையாகும். அவருடைய பிரசங்கங்களின் சில பகுதிகள் பின்வருபவை.

“அபிப்பிராய பேதமின்றி நானும் காந்திஜியும் பல வருஷங்கள் பழகினோம். ஆனால் மிகவும் முக்கியமான கட்டத்தில் எங்களுக்குள் வேற்றுமை உணர்ச்சி ஏற்பட்டது. அதிகாரத்தை ஒப்புக்கொடுத்துவிட்டு வெள்ளையர்கள் உடனே வெளியேறினால்,தேசத்தைத் துண்டாடினாலும் பரவாயில்லை என்று நான் எண்ணினேன். தீர்க்கமாக ஆலோசித்த பிறகே நான் தேசத்தைத் துண்டுபோட ஒப்புக்கொண்டேன். இந்த யோசனை எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. ஆனாலும் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டேன். நாடு இருந்த நிலைமையில், அப்போது நாம் பிரிவினையை ஒப்புக்கொள்ளாமலிருந்தால் இந்தியா பல துண்டுகளாக்கப்படும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அரசாங்க நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பின்புதான் எனக்குப் பிரிவினைச் சூழ்ச்சியின் முழு உருவமும் தெரிந்தது. ஒரு பாகிஸ்தான் அல்ல. ஒவ்வொரு காரியாலயத்திலுங்கூட பாகிஸ்தானை நாம் காணக்கூடிய நிலைமை வந்துவிடும் போலிருந்தது. ஆனால் காந்திஜி இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இது ஆதாரமற்ற பயம் என்று அவர் கூறினார். ஆனாலும் நாங்கள் நினைப்பது சரியென்று தோன்றினால் உசிதம்போலச் செய்யும்படியும் கூறினார். தம்முடைய அரசியல் வாரிசு என்று ஜவாஹரை காந்திஜி குறிப்பிடுவதுண்டு. ஜவாஹர்கூட, என்னைப் போலவே எண்ணினார். காந்திஜி எங்களை ஆதரிக்காவிட்டாலும் எதிர்க்கவில்லை. பிரிவினையை ஏற்றுக்



கொள்ளாவிட்டால் என்ன நடந்திருக்கும் என்று இப்போது சொல்ல முடியாது. நிலைமை பயங்கரமாகத்தானிருந்தது. ஏற்கனவே நாட்டில் (வகுப்புக் கலகத்தால்) இரத்த ஆறு ஓட ஆரம்பித்துவிட்டது. அந்நியர் உடனே வெளியேறுவது நிச்சயமானால் பிரிவினைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமென்றே நாங்கள் நிச்சயித்தோம். எங்களுடைய மனப்பான்மையை பிரிட்டிஷார் புரிந்து கொண்டதுடன் சில வாரங்களுக்குள், சட்ட பூர்வமான ஏற்பாடுகளைச் செய்து அதிகார மாற்றம் செய்து கொடுத்தார்கள். இது பிரிட்டிஷ் சரித்திரத்தில் நடந்த அதியற்புத நிகழ்ச்சியாகும்.”

“நாம் எவ்வளவோ தவறுகளைச் செய்கிறோம். ஆனால் ஒவ்வொன்றிலிருந்தும் நாம் படிப்பினை கற்றுக் கொள்கிறோம். காந்திஜியைக் கொன்றதைவிட ஈனமான தவறு வேறு ஏதும் இருக்க முடியாது. அதற்காக நாம் தலைகுனிய வேண்டியதுதான். தவறு செய்தவர்கள் என்றாவது ஒருநாள் கழிவிரக்கப்படுவார்கள். காந்திஜியின் முடிவைக் கேட்டதும் நான் மனம் இடிந்து போனேன். ஏன், என்னுடைய உயிரையும் மாய்த்துக் கொண்டுவிட வேண்டும் போலவே தோன்றிற்று எனக்கு. ஆண்டவன் எனக்கு திட சித்தத்தைத் தந்தான். நான் மனம் தேறி தேசப்பணியில் மீண்டும் ஈடுபட்டேன்.”

“சர்க்கார் நம்முடையது என்று ஆகிவிட்டதும் எல்லோரும் குறைகூற ஆரம்பித்து விட்டார்கள். நாங்கள் யார்? உங்களுடைய பிரதிநிதிகள் தானே? எங்களைக் குறை கூறுவதில் என்ன லாபம் கிடைக்கும்? சர்க்கார் நம்முடையது என்று ஒவ்வொருவரும்

எண்ணும்போது பேதம் மறைந்துவிடும். ஒவ்வொரு காரியத்துக்கும் சர்க்காரின் உதவியை எதிர்பார்ப்பது தவறு. சர்க்கார் சரிவர நடக்க நம்முடைய கடமை என்ன என்று ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க ஆரம்பித்துவிட்டால் தெளிவு ஏற்பட்டுவிடும்.”

“நாம் சுதந்தரம் பெற மகத்தான தியாகம் செய்தோம். அடிமைத்தளைகளைத் தகர்த்தெறிய எல்லோரும் ஐக்கியமாக நின்றோம். சுதந்தரம் கிடைத்ததும் நமக்குள் பேத உணர்ச்சி ஏற்பட்டது. மாகாணப் பற்று, பாஷாபிமானம் என்று பலபல காரணங்களைக் காட்டி ஒருவரை ஒருவர் துவேஷிக்க ஆரம்பித்து விட்டோம். நம்முடைய குண விசேஷத்தாலும் ஒழுக்கத்தாலும் கட்டுப்பாட்டினாலும்தான் அதி சீக்கிரம் சுதந்தரம் பெற்றோம். நம்மைச் சுதந்தர புருஷர்களாக்கிய காந்திஜி மறைந்துவிட்டார். அவரோடு அவர் போதித்தவைகளையும் நாம் விட்டு விடலாமா? ஒழுக்கம்தான் மனிதனுக்கு மனிதத் தன்மையைத் தருகிறது. ஒழுக்கமில்லாத கல்வியினால் நாம் பயன் பெற முடியாது. காந்திஜி நமக்கு வாழ்க்கை ரகசியங்களைப் போதித்தார். தியாகம் செய்யக் கற்றுக் கொடுத்தார். ஆனால் இன்று நம்மை அதிகார மோகம் பிடித்தாட்டுகிறது. அஹிம்சையும் ஒழுக்கமும்தான் நம்மை மனிதர்களாக்கின என்பதை நாம் மறந்துவிட்டோம். பாகிஸ்தானியர்கள், தங்களுடைய தேசத்தை இஸ்லாமிய நாடாக்கப் போகிறோம் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்கிறார்கள். அவர்கள் செய்யட்டும். நம்முடைய நாட்டில் மதப்பற்றுள்ள அரசாங்கமே இருக்கக்கூடாது. இங்கே எல்லா



மதத்தினரும் 'சகல உரிமைகளும் பெற்று சமமாக வாழவேண்டும். அதற்காக நாம் நம்முடைய மதத்தில் விசேஷ கவனம் செலுத்த வேண்டாம் என்பதில்லை. நம்முடைய ஆத்மீக வளர்ச்சிக்கு மதம் மிகவும் அவசியம். அரசியல் விவகாரங்களில் அதைப் புகுத்தாமல் ஒதுக்கி வைக்கவேண்டும். நம்முடைய பண்பும் மரபுமே, நமக்கு உலகத்தில் கீர்த்தியையும் அந்தஸ்தையும் கொடுக்கின்றன. அவற்றைக் காப்பாற்ற நாம் எப்போதும் தயாராக இருக்கவேண்டும்.”

“சுதந்தரமடைய நாம் செய்த தியாகங்கள் பெரிதல்ல. சுபிட்ச வாழ்வுக்காக நாம் மகத்தான தியாகம் செய்யவேண்டும். கட்டுப்பாடான வாழ்க்கை நடத்தவேண்டும். ஆனால் இப்போது நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? சுய நலமும், சுக வேட்கையும்தான் தாண்டவமாடுகின்றன. பதவி ஆசையினால், மனத்தூய்மையும் ஒழுக்கமும் மாறி மதி மயங்கிக் கிடக்கிறோம். இப்போதுதான் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். யுத்த காலத்தில் ஏற்பட்ட லஞ்சம், ஊழல் போன்ற தீமைகள் இப்போது கிளைத்துப் பெருகிவிட்டன. சாதாரணக் கடமைகளைக்கூட நம்மில் பலர் மறந்துவிட்டார்கள். “கட்டுப்பாடு, ஒழுக்கம், திடகாத்திரம் ஆகியவைதான் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய முக்கிய குணங்கள். இவற்றால்தான் தேசத்தின் அந்தஸ்தும் நிர்ணயிக்கப்படுகிறது. எந்தத் துறையில் பார்த்தாலும் குறைகளே மலிந்து கிடக்கின்றன. மாணவர்கள் ஆசிரியர்கள், தொழிலாளிகள், முதலாளிகள், வியாபாரிகள், அதிகாரிகள் ஆகிய எல்லோரையும் சுயநலம்தான் பிடித்தாட்டுகிறது. கட்டுப்பாடும் ஒழுக்கமும்

மழுங்கிவிட்டன. சர்வ நாசமடைந்துவிட்டது என்று நான் அழுது கொண்டிருக்கவில்லை. நாம் மகத்தான தியாகம் செய்தோம். தூய்மையும் ஒழுக்கமும்தான் போராட்டத்தில் நாம் வெற்றியடையச் செய்தன. ஆனால் சரியான சமயத்தில் (கிடைத்த வெற்றியை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் இந்தச் சமயத்தில்) நாம் மதிமயங்கிவிட்டோம். இதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. இழந்த பலத்தைப் பெறவேண்டும் என்பதற்காகவே நான் இதை எடுத்துக் காட்டுகிறேன். இப்போதாவது திருந்திக் கொண்டால் போதும். உலக மக்களுடன் சமதையாக வாழ வேண்டுமானால் நாம் பலம் பொருந்திய சமுதாயமாக இருக்கவேண்டும். எல்லோரும் சந்தோஷமாக வாழ வேண்டுமென்றால் வாழ்க்கையில் தூய்மையும் ஒழுக்கமும் இருப்பது அவசியம். விவசாயி தொழிலாளி, மத்திய தரவகுப்பைச்சேர்ந்தவன் ஆகிய எல்லோரும் அடிமை வாழ்வுக்கும் சுதந்தர வாழ்வுக்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். சுபிட்ச வாழ்க்கை நடத்த வேண்டும். அப்போதுதான் சுதந்தரத்தின் பலனைப் பெற்றவர்களாவோம்.

"வர்க்கபேதம், வகுப்புவாதம் முதலிய துவேஷங்களை மறந்துவிடுங்கள். எல்லோரும் ஒற்றுமையாக நின்று சுதந்தரத்துக்காக நாம் போராடினோம் என்பதை மீண்டும் ஞாபகப் படுத்துகிறேன். இந்திய சுதந்தரம் பெற்றதும், துளி இரத்தம் சிந்தாமல் அதிகார மாற்றம் ஏற்பட்டதும் சரித்திரத்தில் காண முடியாத ஆச்சரியமாகும். சுதந்தரம் பெற்ற பின்பு நமக்குப் பல இடைஞ்சல்கள் வந்தன. நம்முடைய



குண விசேஷத்தால் நாம் அவற்றைச் சமாளித்து விட்டோம். இப்போதுதான் தேசத்தில் ஐக்கியம் அவசியம். சண்டைகளும் வேலை நிறுத்தங்களும் செய்து, நாம் பேதப்பட்டுக்கொண்டிருக்க இப்போது நேரமில்லை. தேசத்தில் சுபிட்சமும் அமைதியும் ஏற்பட்டால், பிறகு சொந்த மனஸ்தாபனங்களைத் தீர்த்துக் கொள்வதில் கவனம் செலுத்தலாம். தேச சுபிட்சத்தைப்பற்றி எண்ணும்போது தனிப்பட் டவர்களின் நலன்கள் பெரிதல்ல. நமக்குள் பிளவும், நாட்டில் அமைதியின்மையும் இருந்தால், நாம் வெளி நாடுகளின் மதிப்பைப் பெற முடியாது. ஆசியா விலேயே இன்று இந்தியா ஓர் அந்தஸ்தைப் பெற்றி ருக்கிறது. வல்லரசுகளுடன் சமானமாக வீற்றிருந்து சர்வதேசப் பிரச்னைகளைத் தீர்க்கும் ஆற்றல் இந்தியா வுக்கு உண்டு."

"வியாபாரத்தை வளர்க்கவும் உற்பத்தியை அதிகரிக்கவும் நமக்கு வசதி யிருக்கிறது. ஆனாலும் இப்போது கோடிக்கணக்கான ரூபாய்களை, கப்பல் தீர்வையாகக் கொடுத்துவிட்டு, நூறு கோடிக்கும் அதிகமான ரூபாய்கள் பெறுமான உணவுப் பொருள் களை நாம் வெளிநாடுகளிலிருந்து வாங்கிக் கொண் டிருக்கிறோம். வெளிநாட்டு வியாபாரத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். தேசத் துக்கு லாபம் தரும் முறையில் இங்கிருந்து ஏற்றுமதி செய்யவேண்டுமே தவிர, இறக்குமதி செய்யக்கூடாது. ஆயிரக் கணக்கான மைல் நீளமுள்ள கடற்கரைப் பிரதேசம் இந்த நாட்டில் இருக்கிறது. பெரிய பெரிய கைத்தொழில்களை ஆரம்பிக்கக் கூடிய இயற்கை வச திகள் நம்மிடம் உண்டு. நாட்டில் அமைதியும், வலுவான அரசாங்கமும் ஏற்பட்ட பிறகுதான் நாம்

வியாபாரத்திலும் கைத்தொழில்களின் அபிவிருத்தியிலும் விசேஷ கவனம் செலுத்த முடியும். அதுவரையில் எல்லோரும் போராட்ட காலத்தில் ஐக்கியமாக நின்று சேவை செய்தது போல சர்க்காருடன் சேர்ந்து உழைக்கவேண்டும். சர்க்காரின் கவனத்தைத் திருப்பும் முறைகளில் சச்சரவுகளை வளர்க்கக்கூடாது. சுயநல ஆசைகொண்டு பொது ஜனங்களுக்கு அசௌகரியம் செய்வதும் தவறு."

"மாகாணச் சண்டை, பாஷைப் பிரச்னை எல்லாம் மிகப் பெரிய பிரச்னைகள் அல்ல. எப்போதும் சுலபமாகத் தீர்த்துக்கொள்ள முடியும். எந்த மாகாணத்தில் எந்தப் பகுதி சேர்ந்து விட்டால் என்ன? எல்லாம் இந்தியாவில்தானே இருக்கின்றன? இதற்குக் கிளர்ச்சி எதற்கு? தேச முன்னேற்றத்தை எண்ணும்போது இவை அல்பமான பிரச்னைகள். துவேஷமற்ற, அன்பு நிறைந்த வாழ்க்கை நடத்தவும், அஹிம்சை சத்தியம் இவற்றால், உலகத்துக்கே புது வழி காட்டவும் காந்திஜி நமக்குப் பயிற்சி யளித்திருக்கிறார். அதைப் பூரணமாகப் பயின்று, நம்முடைய பரம்பரைக் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும்."

"எனக்கும் என்னுடைய சகாக்களுக்கும் வயதாகி விட்டது. ஆயுள் முழுவதும் போராடி தேச விடுதலையைச் சம்பாதித்து விட்டோம். அதைக் காப்பாற்றிக்கொண்டு, உலகத்தாரின் முன்னிலையில் கண்ணியமாக வாழ வேண்டியது இளைஞர்களின் பொறுப்பு. இன்று மாணவர்களாக இருப்பவர்கள்தான் நாளைக்குப் பொறுப்பேற்கும் பிரஜைகள். ஆகவே நாட்டின் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள் இளைஞர்கள். அடிமைத் தளைகளிலிருந்து விடுவித்து



சுதந்தர புருஷர்களாக உங்களைச் செய்துவிட்டதுதான் உங்களுக்கு நாங்கள் விட்டுச்செல்லும் பிதுரார்ஜிதமும் ஆசீர்வாதமும். அதை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு வாழ வேண்டியது உங்களுடைய பொறுப்பு. தீமையின் கொடுமையை நாங்கள் அனுபவித்துவிட்டோம். எங்களுடைய அனுபவங்கள் உங்களுக்குப் படிப்பினைபோல இருக்கும். வாழ்க்கையில் வெற்றிபெற ஆத்மபலம் அவசியம். தார்மீக வாழ்க்கையில்தான் கண்ணியமும் சுகமும் உண்டு. தன்னல வாழ்க்கையில் போக பாக்கியங்களை அனுபவிக்க முடியும். ஆனால் ஆத்ம சந்தோஷம் கிடைக்காது. எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்க்கையில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவசியம்."

"எதிர்காலத்தில் நம்முடைய நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி தீர்க்கமாகச் சிந்தியுங்கள். அவசரப்பட்டு எதையும் செய்துவிடாதீர்கள். எவ்வளவோ கஷ்டங்களை ஏற்றுக்கொண்டு நாட்டில் அமைதியும் சுதந்தரமும் நிலவச் செய்திருக்கிறோம். சுபிட்சமும் அமைதியும் வேண்டுமென்றால் எல்லோரும் ஒழுக்கத்துடன் வாழவேண்டும். அரசியல் தத்துவங்களைப்பற்றிக் கற்பனை செய்துகொண்டிருக்க வேண்டிய காலம் மாறிவிட்டது. நம்முடைய நாட்டின் பொருளாதாரத் தேவைகளையும், அந்தஸ்தையும் கவனித்து நாம் சமுதாய மாறுதல்களைச் செய்ய வேண்டும். தன்னலமற்ற அன்பு வாழ்க்கையை நாம் கடைப்பிடித்துவிட்டால் எல்லாம் சுலபமாகிவிடும். சுதந்தர நாட்டில் ஒவ்வொரு வாலிபனும் தன் உயிரையும் கொடுத்து தேசத்தின் மானத்தைக் காக்கும் வீரன் என்னும் பெயரை நிலை நிறுத்தவேண்டும்.

## காந்திஜியின் அடிச்சுவட்டில்

சூரிய வெளிச்சத்தில் நட்சத்திரங்களைப் பார்க்க முடியவில்லை. என்றாலும் நட்சத்திரங்கள் பிரகாசமானவை. இந்திய அரசியல் வானத்தில் காந்திஜி ஒரு சூரியனைப் போலவே பிரகாசித்துக் கொண்டிருந்தார். அவருடைய காலத்தில், அவருடைய தளபதியின் சாகஸத்தை எல்லோரும் போற்றினாலும் தகுந்த முறையில் வணக்கம் செலுத்த தேச மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. நாடு சுதந்தரம் பெற்ற பிறகுதான் படேலின் ராஜதந்திரம் ஒளிவிட்டுப் பிரகாசித்தது. அவர் தேசத்தின் படத்தையே மாற்றி விட்டார். பிரிட்டிஷாரின் தாசர்களாக இருந்த சமஸ்தானாதிபதிகளின் மனத்தையும் மாற்றி ஐக்கிய பாரதத்தை அமைத்துவிட்டார். ஒவ்வொரு மாகாணத்தாரும் போட்டி போட்டிக்கொண்டு படேலுக்கு வணக்கம் செலுத்துகிறார்கள். பணம் பெருத்த பம்பாய் மாகாணத்தார் லட்சம் ரூபாய்கள் பெறுமானத்தில் தங்கத்தாலான அசோக ஸ்தூபியை காணிக்கையாக அவருடைய ஜயந்தியன்று கொடுத்தார்கள். ஆனால் குஜராத் மக்களோ படேலின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்க, அவருடைய பெயரால் ஒரு வித்தியா நகரத்தையே சிருஷ்டிக்க நிச்சயித்து விட்டார்கள். படேல் பிறந்த கரம்சந்த் கிராமத்துக்கு அருகே, வல்லபநகர் என்ற பேரில் நிருமாணிக்கப்படும் அந்த நகருக்கு பண்டித நேரு சமீபத்தில் அஸ்திவாரக் கல் நாட்டினார். ஏற்கனவேயே அங்கு பல பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. வல்லபநகர் முழு உருவம்



பெறும்போது அங்கு இருபதுக்கும் அதிகமான கல்வி ஸ்தாபனங்கள் இருக்கும்.

'மனித ஆயுள் முழுவதும் வாழவே நான் ஆசைப்படுகிறேன்' என்று அடிக்கடி காந்திஜி சொல்வதுண்டு. ஆனால் அவரைக் காலன் வேறு விதமாகக் கொண்டுபோய் விட்டான். காந்திஜியுடன் பழகிய படேலும் நீண்டகாலம் வாழ்ந்து தேசத்துக்குச் சேவை செய்யவே விரும்புகிறார். 'காந்திஜி விட்டுச்சென்ற வேலைகளை பூர்த்திசெய்வதே என்னுடைய லட்சியம்' என அவர் சொல்வதுண்டு. அரசாங்கக் காரியங்களில் அவர் காந்தி வழியையே பின்பற்றுகிறார். காந்திஜியின் வாழ்க்கையில் இரகசியம் கிடையாது. ஆகவே சந்தர்ப்பம் கிடைத்தபோது அவர் தம்முடைய ஆசையை எல்லோரிடமும் சொன்னார். படேலோ தம்முடைய ஆசையை, சகல ஊழியர்களிடம்தான் தெரிவித்திருக்கிறார். அவருடைய உழைப்பின் பலனைப் பெற்றவர்கள் அவர் நீடூழி வாழவேண்டும் என்றே பிரார்த்தனை செய்வார்கள். படேலின் ஆசையைப்பற்றி ராஷ்டிரபதி பட்டாபி சீதாராமையா எழுதியுள்ள குறிப்பிலிருந்து நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.

ஆமத்நகர் கோட்டையில் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் சிறைவாசம் செய்தகாலம், தலைவர்களுடைய ஆரோக்கியத்தைப் பரிசோதிக்க, பம்பாய் மாகாண சர்ஜன் ஜெனரல் மேஜர் ஜெனரல் காண்டி தம்முடைய பரிவாரங்கள் சூழ ஆமத்நகர் கோட்டைக்கு வந்தார். ஆமதாபாத் நகரசபைத் தலைவராக படேல் இருந்தபோது மேஜர் ஜனரல் காண்டி, அங்கு சுகாதார இலாகாத் தலைவராக இருந்தார். வந்ததுமே அவர் படேலைத் தெரிந்துகொண்டு

அவருடன் சுமுகமாகப் பேசிக்கொண்டிருந்தார். பேச்சு வாக்கில், "எனக்கு வயதாகிவிட்டது. அடிக்கடி பலஹீனமும் சிடுசிடுப்பும் வருகிறது" என்றார் காண்டி.

"நீங்கள் இப்படிச் சொன்னால் நான் என்ன செய்வது?" என்று சிரித்தார் படேல்.

"ஏன், எனக்கு 58 வயதாகிவிட்டதே! "என்றார் காண்டி.

"இவ்வளவுதானே, எனக்கு 67 ஆகிவிட்டது. இன்னும் 33 வருஷங்கள் திடகாத்திரத்துடன் வாழவே நான் ஆசைப்படுகிறேன்' என்றார் படேல்.

இந்த சம்பாஷணையைக் குறிப்பிட்டுவிட்டு "ஆந்திர தேசத்தில், உபநிஷத்துக்களின்படி மனிதப் பிராயத்தை 116 என்று கணக்கிடுவதுண்டு. அதன்படி படேல் வாழவேண்டும் என்பதே என்னுடைய ஆசை" என்கிறார் பட்டாபி.

கேவலம் உயிரின்மீதுள்ள ஆசையினாலோ, வாழ்க்கையிலுள்ள பற்றினாலோ தாம் நீண்டகாலம் வாழவேண்டும் என்று படேல் ஆசைப்படவில்லை. 1908-ல் தம்முடைய மனைவி இறந்த பின்பு, அவர் குடும்ப வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்கவேயில்லை. இரவும் பகலும், அவருடைய பக்கத்திலிருந்து அவருக்குச் சிசுருஷை செய்யும் மகளிடம்தான் அவருக்குப் பிரியம் அதிகம் என்று நண்பர்கள் சொல்கிறார்கள். சர்க்கார் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டபின்பு, படேல் காரியாலயத்திலிருக்கும்போதுகூட, தகப்பனாரின் பக்கத்திலேயே அந்த அம்மையார் இருப்பதைக்கண்ட ஒரு பத்திரிகை கிருபர், "படேலின் பாதுகாவலன் போலவே, அவருடைய குமாரி இருக்கிறாள். அந்த அம்மையாருக்குத்



தெரியாமல் படேல் எதுமே செய்துவிடமுடியாது" என்று தமாஷாகக் கூறினார்.

தேசசேவை ஒன்றுதான், மகத்தான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் சக்தியை படேலுக்கு அளித்திருக்கிறது. "எழுபத்து நான்காவது வயதை அடையும் அந்த வாலிபர் நீண்ட காலம் வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்" என்று ஸ்ரீமதி சரோஜனிதேவி சமீபத்தில் கூறினார். அதுதான் பாரதவாசிகளின் பிரார்த்தனையும். காந்திஜியின் கனவான ராமராஜ்ய சிருஷ்டிக்கு படேலும், ராஜாஜியும், ஜவாஹரும், ராஜன் பாபுவும், ஆனாதும் வழிகாட்டுவார்களாக!

வந்தே மாத

TAMIL NADU ARCHIVES
112235

# ராஜாஜி

(முதல் இந்திய கவர்னர் ஜெனரல்)

(இன்றுவரை நிகழ்ச்சிகள் கொண்ட விரிவான அழகான சரித்திரம் — பல படங்களுடன்)

"பிரசண்ட விகடன்" ஆசிரியர், நாரண துரைக்கண்ணன் எழுதியது. டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் முன்னுரையும், கனம் எம். பக்தவத்ஸலம் அவர்கள் சிறப்புரையும் கொண்டது.

...ரூ. 2—0—0....

முக்கிய அபிப்பிராயங்களுள் சில

(அமரர்) எஸ். சத்தியமூர்த்தி இந்நூலின் முதற் பதிப்புக்கு அளித்துள்ள சிறப்புரையின் முக்கிய பாகம்:—

நம் தமிழ்நாட்டு மாபெருந் தலைவரும் தியாகியுமான ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் அவர்கள் சரித்திரத்தை எழுத முன்வந்ததற்காக ஆசிரியரை நான் பாராட்டுவதுடன், மிகவும் சந்தோஷமும் அடைகிறேன். இந்தச் சரித்திரம் நல்ல முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

டாக்டர் ப. சுப்பராயன்:— ராஜாஜியின் வாழ்க்கையை முதலிலிருந்து தற்காலம் வரையிலும் நன்கு விவரித்து எழுதியிருக்கிறார். இம்மாதிரியான புத்தகங்களை நம் பள்ளிகளிலிருக்கும் மாணவர்களுக்குக் கொடுப்பது அவசியம். இதை எல்லாத் தமிழ் மக்களும் பாராட்டுவார்கள்.

கனம் எம். பக்தவத்ஸலம்:— எல்லோரும் உணரக்கூடிய அளவில் ஆசிரியர் வரைந்த இந்நூலை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4.



# அமர ஜோதி

(மகாத்மா காந்தி சரிதம்)

தினமணி எழுதுவது:

"அமர ஜோதி"

எழுதியவர் த. நா. ஸேனாபதி.

பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர் சென்னை.

மகாத்மாவின் வாழ்க்கையை ரத்தினச் சுருக்கமாக, குழந்தைகளுக்கென வரைந்திருக்கிறார். தெவிட்டாத இனிய நடையில் சம்பவங்களை அடுக்கிட்டு. மனக்குழப்பத்தை உண்டுபண்ணாமல் காந்தி கதையின் முக்கிய அம்சங்களையெல்லாம் குழந்தைகள் உணரக்கூடியவாறு தொகுப்பதில் ஸ்ரீ ஸேனாபதி நல்ல வெற்றிபெற்றிருக்கிறாரென்றே சொல்லவேண்டும். மகாத்மாவின் உபதேச சாரத்தை தனி அத்தியாயமாகச் சேர்த்திருப்பதுடன் "வந்தே மாதரம், வைஷ்ணவ ஜனதேச" கீதங்களையும் முடிவில் சேர்த்திருப்பது மிகப் பொருத்தமாயிருக்கிறது.

சென்னைப் பிரதமர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தந்துள்ள முகவுரையில் இந்நூலைப் பெரிதும் போற்றியுள்ளார். இது ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் கட்டாயம் படிக்கவேண்டிய புத்தகம்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை